விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION MONEY TRANSFER உலகெங்குமுள்ள உறவுகளிமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392
(C-4991)

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஐப்பசி 26 வெள்ளிக்கிழமை (11.11.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 328

## "அனைவருக்கும் நன்மை தரும் விரைவான அபிவிருத்தியை நோக்கி"



# பட்ஜெட் - 2017

## அமைச்சரவை நேற்று அங்கீகாரம்; டிசம்பர் 10ஆம் திகதி வாக்கெடுப்பு

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் அடுத்த வருடத்துக்கான வரவு செலவுத்திட்டத்தின் மொத்த வருமானம் 2098 பில்லியன்களாக காணப்படுகின்ற அதேவேளை, மொத்த செலவீனம் 2723 பில்லியன்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அடுத்த வருடத்துக்கான பட்ஜெட் அறிக்கையின் துண்டுவிழும் தொகை 625 பில்லியன்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (02-ம் பக்.)

- விவசாய நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை.
- வடக்கு, கிழக்கில் வீடமைப்புத் திட்டங்கள்.
- பிரமிட் நிதித் திட்டங்களுக்கு முற்றாகத் தடை.

- விவசாய நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை.
- அத்தியாவசிய பொருட்கள் சில விலை குறைப்பு.
- மோட்டார் வாகனங்களுக்கு வரி குறைப்பு.
- ஆசிரியர்களுக்கு -லப், மாணவர்களுக்கு - டப்.
- பல்கலை மாணவர்களுக்கு விசேட வாய்ப்புகள்.
- தனியார் கல்வி நிறுவனங்களுக்கு விதிமுறை.
- வடக்கு, கிழக்கில் வீடமைப்புத் திட்டங்கள்.
- பால் உற்பத்திக்கு உயர்ரக பசுக்கள் கொள்வனவு.
- வியாபார முதலீடுகளுக்கு சந்தை வாய்ப்புக்கள்.
- மருந்தகங்களைப் பதிய நடவடிக்கை எடுப்பு.
- போதைப் பொருளுக்கு எதிரான செயற்திட்டம்.
- பகிடிவதை குறித்து அறிவிப்பதற்கு நிலையம்.
- பிரமிட் நிதித் திட்டங்களுக்கு முற்றாகத் தடை.
- போக்குவரத்து சேவைகளில் புதிய நடைமுறைகள் அறிமுகம்.
- ஓய்வூதிய கொடுப்பனவுகளுக்காக 1000 மில்லியன் ஒதுக்கீடு.
- ஏழு சதவீத கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தத் திட்டம்.
- உப்பு உற்பத்தி நிறுவனங்கள் தனியாரிடம் ஒப்படைப்பு.
- பட்டதாரிகளுக்கு தொழில்துறைகளை ஏற்படுத்துதல்.

# கைதான நபர்கள் மீது கடும் துன்புறுத்தல்!

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் (ரி.ஐ.டி) அண்மையில் யாழில் கைது செய்யப்பட்டவர்கள் கடுமையான துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாக அவர்களது பெற்றோரால கொழும்பு மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்றைய தினம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இடம்பெறும வாள்வெட்டு சம்பவங்கள் மற்றும் அண்மையில் பொலிஸாருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு துண்டுப்

24ஆம் பக்கம் பார்க்க....

# போர்க்குற்ற விசாரணைக்கு கலப்பு பொறிமுறை அவசியம்!

## சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்து

(ஜெனிவா)

போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கென கலப்பு சர்வதேச பொறிமுறையை இலங்கை அரசாங்கம் உருவாக்க வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

நியாயம், உண்மை, நட்டஈடு மற்றும் கடந்தகால சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாது என்ற நான்கு விடயங்களை நிவர்த்தி செய்யும்வகையில் இந்த பொறிமுறை அமைய வேண்டும் என அவ்அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் மன்னிப்புச்சபை

23ஆம் பக்கம் பார்க்க....

# 4 கிராம் குடுவுடன் இளைஞன் கைது!

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் இளைஞர் ஒருவர் 4 கிராம் குடுவுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.கொக்குவில் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞா ஒருவரே இவ்வாறு கைது செய்ய

23ஆம் பக்கம் பார்க்க....


# இராணுவ குவிப்பு; கஞ்சா கடத்தல் வேலியே பயிரை மேய்கின்றதா?

## வடக்கு முதலமைச்சர் சந்தேகம் தெரிவிப்பு

(புதுக்குடியிருப்பு)

வடக்கில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் இராணுவ வீரர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளதுடன், அவர்களுக்கு மேலதிகமாக கடற்படை, விமானப்படை ஆகியனவும் வடக்கில் வலம் வரும் நிலையில், கடல்

24ஆம் பக்கம் பார்க்க....



# இலங்கை குறித்த அமெரிக்காவின் கொள்கையில் மாற்றம் இல்லை!


## அமெ.தூதுவர் அதுல் கேசாப் கருத்து

(கொழும்பு)

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள போதிலும், இலங்கை தொடர்பான அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கையில் மாற்றங்கள் ஏற்படாது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கேஷாப தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் கடந்த 8-ம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் அனைவரினதும் கருத்துக் கணிப்புக்களை பொய்யாக்கி, வெற்றி

23ஆம் பக்கம் பார்க்க....



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பட்ஜெட்...

நல்லாட்சியினரின் இரண்டாவதும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 70 ஆவதுமான வரவு - செலவுத் திட்டம் **அனைவருக்கும் நன்மைதரும் விரைவான அபிவிருத்தியை நோக்கி** என்ற தொனிப்பொருளில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க வினால் நேற்று நாடாளுமன்றில் முன் வைக்கப்பட்டது. நிதி அமைச்சரின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட வாசிப்பின் போது விவசாயத்துக்கு முன்னுரிமை வழுங்கும்வகையில பட்ஜெட் அமைந்துள்ளதாக தெரிவித்த அமைச்சர், நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு ஆதரவு வழங்கு வதற்கு நாம் தீர்மானிதத்துள்ளதாக வும் விவசாயத்துக்காகப் பயன்படுத் தாத நிலங்களை விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு எதிர் பார்த் துள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய விவசாய நடவடிக்கைகளுக்காக 15 சதவீத வட்டி நிவாரணம் வழங்கப்படும். விவசாயத் துறைக்காக 20 ஆயிரம் ஏக்கர் காணி வழங்கப்படும் எனவும நிதி அமைச்சர் தெரிவித்திருந்தார்.

தொடர்ந்து நிதி அமைச்சரால் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகள் குறித்து நாடாளு மன்றில் முன்மொழியப பட்டது.பி.ப 2.30க்கு தொடங்கிய முன்மொழி வுகள் மாலை 5.30 மணிவரை தொடர்ந்திருந்தது.

இறுதியாக சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளுக்கு ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

வரவு செலவுத் திட்டத்தின் மொத்த வருமானம் 2,098 பில்லியன் ரூபாயாகவும் மொத்த செலவீனம் 2,723 பில்லியன் ரூபாயாகவும் காணப்படும் நிலையில் வரவு - செலவுத்திட்ட துண்டுவிழும் தொகையாக 625 பில்லியன் ரூபாயாக அமைந்துள்ளது.

மொத்த வருமானமும் மானியங்களும் 2,098 பில்லியன்களாக காணப்படுவதோடு, மொத்த வரு மானம் 2,088 பில்லியன்களாக அமைந்துள்ளது.

வரி வருமானம் 1,821 பில்லியன்களாகவும், வருமான வரி 335 பில்லியன்களாகவும், பொருட்கள் சேவை மீதான வரி வருமா னம் 1,486 பில்லியன்களாகவும், வரியல்லாத வருமானம் 189 பில்லியன்களாகவும், மாகாண சபை வரி பங்குகளும், வருமான மாற்றல்களும் 78 பில்லியன்களாகவும் காணப்படுகின்றன.

இதேவேளை, மானியங்கள் மூலமான வருமானம் 10 பில்லியன்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்த செலவீனம் 2,723 பில்லியன்களாக காணப்படுகின்ற அதே வேளை, மீண்டெழும் செலவீனம் 2,024 பில்லியன்களாக காணப்படுகின்றது.

மாகாண சபைகள் உள்ளடங்களாக சம்பளங்களும் கூலிகளும் 675 பில்லியன்களாக அமைந்துள்ளதோடு, மாகாண சபைகள் உள்ளடங்கலாக ஏனைய பொருட் கள் சேவைகள் செலவீனம் 202 பில்லியன்களாக காணப்படுகின்றது.

அரசாங்கம் செலுத்த வேண் டிய வட்டி 680 பில்லியன்கள் என்பதோடு, உதவுத் தொகைகள் மற்றும் மாற்றல்களும் 467 பில்லியன்களாக அமைந்துள்ளன.

அரச முதலீடு 708 பில்லியன் களாக காணப்படுவதோடு, கல்வி மற்றும் சுகாதாரத்திற்கான செலவீனம் 141 பில்லியன்களாகவும், உட்கட்டமைப்பு செலவீனம் 567 பல்லியன்களாகவும் அமைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நல்லாட்சி தொடர்பில் கூறப்பட்ட பல்வேறு வகையான விமர்சனங்களுக்கு இந்த வரவு செலவு திட்டம் முற்றுப் புகள்ளி வைக்குமா என்பது தொடர்பில் பல கருத்துகள் வெளியிடப்பட்டு வருகின்றது.

இந்தநிலையில் குறித்த வரவு செலவுத்திட்டத்தின் மீதான விவாதங்கள் இன்று தொடக்கம் 26 நாட்களுக்கு நடைபெறவுள்ளதோடு எதிர்வரும் டிசம்பர் 10ஆம் திகதி வாக்கெடுப்பு நடைபெறும் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

### பட்ஜெட் 2017 முன்மொழிவுகள

- பழைய வாகனங்களின் ஏற்றுமதிக்கு வரி நிவாரணம்
- இலங்கையிலுள்ள 100 மிகப்பெரிய தனியார் கம்பனிகளை அரசாங்கத்துடன் இணையுமாறு நான் கோரிக்கை விடுக்கின்றேன்.
- தன்னியக்க டெலர் இயந்திரங்கள் மூலம் பணம் மீளப்பெறுவதற்கான கட்டணம் 10 ரூபாயாக அதிகரிக்கப்படுகிறது.
- இணையத்தள பரிமாற்றங்களுக்கு வரி அறவிடப்படும்.
- பழைய வாகன ஏற்றுமதிக்கு வரிச்சலுகை.
- 100 பொருட்களுக்கான தீர்வை குறைப்பு.
- இலத்திரனியல் மோட்டார் வாகனங்களுக்கான வரி குறைக்கப்படும்.
- பழைய வாகன ஏற்றுமதிக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
- காபனுக்கு புதிய வரி.
- சமுர்த்தி பயனாளிகளுக்கு மாதாந்தம் 5 கிலோகிராம் அரிசி.
- பெல்மடுல்லவில், அனர்த்த முகாமைத்துவ மையமொன்று அமைக்கப்படும்
- 425 கிராம் நிறையுடைய உள்நாட்டு டின்மீன் 125 ரூபாய்.
- உள்நாட்டு பால்மா 250 கிராமின் விலை 250 ரூபாய்.
- மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் விலை 5 ரூபாயால் குறைப்பு.
- வெள்ளை சீனி, கிலோ கிராமொன்று 2 ரூபாயால் குறைப்பு.
- நெத்தலி ஒரு கிலோகிராமின் விலை 5 ரூபாயால் குறைப்பு.
- உருளைக்கிழங்கு ஒரு கிலோகிராமின் விலை 5 ரூபாயால் குறைப்பு.
- பருப்பு ஒரு கிலோகிராமின் விலை 10 ரூபாயால் குறைப்பு.
- பயறு ஒரு கிலோகிராமின் விலை 15 ரூபாயால் குறைப்பு.
- வருமான வரி மீள்பரிசீலனை செய்யப்படும்.
- நெடுஞ்சாலைகளுக்கான கட்டணங்கள் இரவு 9 மணி முதல் காலை 5 மணிவரையான நேரத்தில் 50 ரூபாயாக குறைக்கப்படுகின்றது.
- லக் சதொசவுக்கு 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு. ஒவ்வொரு சதொசவுக்கு 10,000 ரூபாய்.
- சூரிய சக்தி திட்டங்களுக்கான கடனுக்கு 1,500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
- சதொச சில்லறை விற்பனை நிலையங்கள் 100-ஐ நிர்மாணிக்க 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
- மாத்தறை கடற்பிராந்திய அபிவிருத்திக்கு 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
- காஸ் ஒன்றுக்கான விலை 25 ரூபாய் குறைக்கப்படுகின்றது
- ரியல் எஸ்டேட் மேலாண்மை தகவல் அமைப்பை, உள்நாட்டு இறை வரித்திணைக்களத்துக்குள் உள்ளடககப்படும்.
- சிறிய குளங்களுக்காக 3,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
- நஞ்சற்ற நாடு திட்டத்துக்கு 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
- நீதிமன்றங்களை நிர்மாணிப் பதற்கும் புனரமைப்பதற்கும் 1,750 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
- கிராம சேவகர்கள் உள்ளிட்ட அரச சேவையாளர்களுக்கான 1000 சேவை நிலையங்களை அமைப் பதற்கு 1,500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
- அரச சேவையாளர்கள் 14 இலட்சம் பேர் இருந்தாலும், பாடசாலை மற்றும் வைத்தியசாலைகளில கடமையாற்றுவோருக்கு பிரச்சினைகள் காணப்படுகின்றன.
- பொதுச்சேவைகள் குறித்தான முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு குழுவொன்று நியமிக்கப்படும்.
- பொதுச் செயலாளர் பொதுப் பணி துறையை ஆய்வு செய்தல்.
- இளைஞர்களது திறமைகளை வளர்க்க, 25 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
- புதிதாக துறவியாகுபவர்களுக்கு ஒரு மாதத்துக்கு 2,500 ரூபாய் புலமைப் பரிசில் வழங்கப்படும். இதற்காக 50 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
- வெளிநாட்டு தொழிலாளர்களின் ஆகக்குறைந்த ஊதியமாக 300 டொலர்.
- ஊடகவியலாளர்கள், உபகரணங்களைக் கொள்வனவு செய் வதற்கு, 50 வீத மானியத்தின் கீழ், 150,000 ரூபாய் கடன்.
- சமய ஸ்தலங்களை அபிவிருத்தி செய்வதற்கு 25 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
- ஊடகத்துறையிலுள்ளவர்களுக்கு 300,000 ரூபாய் கடன் வசதி.
- சுகததாச விளையாட்டரங்கு புதுப்பிக்கப்படும். இதற்கு, 150 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.
- இளைஞர் தொழில் பயிற்சி மையங்களுக்காக 4,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு
- பண்டித் அமரதேவ கலாசார நிலையத்துக்கு 25 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
- களஞ்சியசாலைகள் வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய இடங்களில் அமைக்கப்படும்.
- மலர் உற்பத்தியை அதிகரிக்க 50 மில்லியன்.
- கிராமபுற பாடசாலைகளின் விஞ்ஞான, கணித மற்றும் ஆங்கில கல்வியை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை.
- தனியார் துறையினருக்கு 5 நாள்மற்றும் 45 மணிநேர வேலை.
- மெகாபொலிஸ் அபிவிருத்தி திட்டத்திற்கு 7,500 மில்லியன் ஒதுக்கீடு.
- கப்பல்களை துறைமுகத்தில் 12 மணித்தியாலங்கள் இலவசமாக நங்கூரமிட வாய்ப்பு.
- பால் பண்ணையாளர்களுககு ஒரு வீட்டுக்கு 10 மாடுகள் வழங்க திட்டம்.
- ஏற்றுமதி சந்தையை கருத்திற்கொண்டு பழங்களை பயிரிடுவதற்காக 20 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பு.
- கோழி பண்ணையாளர்களுக்கு 15 ஆயிரம் குளிரூட்டி சாதனங்களை வழங்க நடவடிக்கை.
- பொதுச் செயலாளர் பொதுப் பணி துறையை ஆய்வு செய்தல்
- சிறிய குளங்களின் அபிவிருத்திக்காக 3,000 மில்லியன் ஒதுக்கீடு.

(04ஆம் பக்கம் பார்க்க)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



## மரண அறிவித்தல்

### திருமதி நல்லராசா தவமலர்தேவி



மாலிசந்தி தாரிக்கப்பற்றைப் பிறப்பிடமாகவும் வதிரி மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நல்லராசா தவமலர்தேவி அவர்கள் 10.11.2016 வியாழக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இரத்தினம் அவர்களின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து - பெரியபிள்ளை அவர்களின் மருமகளும், அமரர் வைரமுத்து நல்லராசாவின் அன்பு மனைவியும், விஜி (வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் - உடுப்பிட்டி), சுஜி (யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி - உடுப்பிட்டி), சசி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரகுமார் (சாரதி), மணிமாறன் (புகையிரத நிலைய உத்தியோகத்தர் - கொடிகாமம்), விக்கினேஸ்வரன் (லண்டன்), ஆகியோரின் அன்பு மாமியாரும், யதுர்சிகா, மதுரன், சுஜோமிதன், ஷேயோன், விஷாலி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சடகோபன் (கொழும்பு), இராசரத்தினம் (கொழும்பு), ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராஜயோகம் (கொழும்பு), தயாமணி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனியும், தனஞ்சயன் (டாக்டர் - கொழும்பு), ஜனகன் (பொறியியலாளர் - கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2016) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம். (C-6367)

வதிரி மேற்கு, கரவெட்டி. தகவல் :- குடும்பத்தினர்.



## துயர் பகிர்வு

### மார்க்கண்டு மனோகரசீலன்



மண்ணில் :- 25.05.1961
விண்ணில் :- 09.11.2016

கிளி/ கோணாவில் மகா வித்தியாலய அதிபர் திரு. கந்தையா இதய சிவதாஸ் அவர்களின் அருமை மைத்துனரான **மார்க்கண்டு மனோகரசீலன்** (இல.34 சிவநகர் உருத்திரபுரம்) அவர்களின் மறைவை ஒட்டி துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (C-6365)

பாடசாலைச் சமூகம் கிளி/கோணாவில் ம.வி.



**கணக்காளர் சேவைப் போட்டிப் பரீட்சை**
**வழிகாட்டல் வகுப்புக்கள் யாழ் - ஸ்ரான்லி வீதியில் (GAS)**

ஆரம்பம் : 19 நவம்பர் 2016 சனி மு.ப. 9.00
பிரபல **Professionals :**

- நிதிக்கணக்கீடு - I, II
- கிரியமுகாமைத்துவக் கணக்கீடு
- அரசநிதிநடைமுறைகள்
- கணக்காய்வும் புலனாய்வும்

} திரு.க.பிரதீபன் (SLAuS)

- பொதுவிவேகமும் கிரகித்தலும் - திரு.S.ஹரிகரகணபதி, திரு.பா.மகாலிங்கம்

சனி, ஞாயிறு போயா தினங்களில் மட்டும் முழுநாள் வழிகாட்டல்கள்
தொடர்புகளுக்கு :- 0778448709 (சசி) (6581)

# குரோதத்தை விதைத்து நாட்டை சீரழிக்க சூழ்ச்சி

## ஜனாதிபதி மைத்திரி குற்றச்சாட்டு

(கொழும்பு)

**தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தி, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து மேற்கொள்ளும் செயற்பாடுகளை சிலர் புரிந்து கொண்டிருந்தாலும் அதனைப் புரிந்துகொள்ள முடியாத சிலர் நாட்டினுள் பழியுணர்வையும் குரோதத்தையும் விதைத்து நாட்டை சீரழிக்கும் வகையில் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றம் சாட்டியுள்ளார்.**



நாட்டின் புகழ்பூத்த சமூக சேவையாளரான சர்வோதய இயக்கத்தின் நிறுவுநர் கலாநிதி ஏ.ரி. ஆரியரத்னவினது 85 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று முன்தினம் ராவத்தாவத்த, மொரட்டுவ சர்வோதய நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஒழுக்கமும் ஐக்கியமும் நற்பண்பும், ஒற்றுமையும் இன்றியமையாதது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்காகவே எப்போதும் அதிகாரம் பயன்படுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

நல்லிணக்கம் எனும் சொற்பதத்தை பெரும்பாலானோர் கேலியாக்கி விமர்சித்த போதிலும் அந்த சொற்பதம் யதார்த்தமாவதிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கியிருப்பதாகவும் தெரிவித்தார்.

நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும்' செயற்பாடுகளில் முன்மாதிரியாக செயற்பட்ட ஏ.ரி.ஆரியரத்னவினது சமூகப்பணியை ஜனாதிபதி பாராட்டியதுடன் அவரது 85 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு விசேட நினைவு பரிசு ஒன்றினையும் வழங்கி வைத்தார். (இ-7-10)

## இராட்சத முள்ளங்கி



மஸ்கெலியா - பிரவுண்ஸ்வீக் தோட்டத்தில் வசிக்கும் முத்துசாமி சிவனு. என்பவரின் வீட்டுத் தோட்டத்தில் புதுமையான இராட்சத முள்ளங்கி ஒன்று காய்த்துள்ளது.

விற்பனைக்காக முள்ளங்கி விதையை விதைத்த போது சுமார் மூன்று மாதங்களுக்கு பின் இவ்வாறு காய்த்துள்ளதாக தோட்ட உரிமையாளர் தெரிவித்தார்.

குறித்த முள்ளங்கி சுமார் 3 கிலோ 800 கிராம் நிறையுடையது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## யார் எதிர்த்தாலும் மகனை அரசியலுக்கு கொண்டு வருவேன்; முன்னாள் ஜனாதிபதி

எவர் எதிர்த்தாலும் தனது புதல்வர் விமுக்தி குமாரதுங்கவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அத்தனகல்ல தொகுதியின் அமைப்பாளராக நியமித்து, அடுத்த தேர்தலுக்கு அவரை தயார்ப்படுத்த போவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கம்பஹா மாவட்ட தலைவர்களின் கூட்டத்தில் இந்த யோசனை கொண்டு வரப்பட்ட போது கடும் எதிர்ப்பு முன்வைக்கப்பட்டதன் காரணமாக முன்னாள் ஜனாதிபதி கடும் மனவருத்தத்தில் இருப்பதாக கூறப்படுகிறது.

விமுக்தி மக்கள் மத்தியில் இருக்காத காரணத்தினால் அவரால் தேர்தலில் வெற்றி பெற முடியாது என சுதந்திரக் கட்சியின் கம்பஹா மாவட்ட தலைவர்கள் முன்னாள் ஜனாதிபதியின் முகத்திற்கு நேராக கூறியுள்ளனர்.

இவ்வாறான நிலைமையில், அடுத்த தேர்தலில், விமுக்தியை அத்தனகல்ல தொகுதியில் நிறுத்த முன்னாள் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். (இ-7-10)

# டொனால்ட் ட்ரம்ப் வெற்றி; பொதுபலசேனா வாழ்த்து



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றமைக்கு பொதுபல சேனா அமைப்பு வாழ்த்து தெரிவித்துள்ளது.


மேலும்,டொனால்ட் ட்ரம்ப் இஸ்லாமிய பயங்கரவாத செயற்பாடுகளை தோல்வியுறச் செய்வார் என்றும் பொது பல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது.

ரஷ்யாவினால் முன்னெடுக்கப்பட்டு வரும் இஸ்லாமிய தீவிரவாதத்திற்கு எதிரான போருக்கு, அமெரிக்கா தற்போது ஒத்துழைப்பு வழங்கவில்லை.

ஆனால் இந்த நிலை டொனால்ட் ட்ரம்பின் தலைமையின் கீழ் மாற்றம் அடையும் என பொதுபல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது.

அரேபிய நிதி சக்திகளின் ஆதரவினை அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி பெற்றுக்கொள்ளமாட்டார் என பொதுபல சேனா அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (இ-7-10)

## சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்த மாத்தறை முதலை



கடந்த சில தினங்களுக்கு முன்னர் மாத்தறை நில்வள கங்கையில் பிடிக்கப்பட்ட மிகப்பெரிய முதலை தொடர்பான செய்தி சர்வதேச ஊடகங்களிலும் வெளியாகியுள்ளன.

ரொய்டர்ஸ் மற்றும் டெயிலிமெயில் ஆகிய செய்தி நிறுவனங்கள் இந்த செய்தியை வெளியிட்டிருந்தன.

அதிக எடையை கொண்ட, 18 அடி நீளமான இந்த முதலை, கடந்த 7ஆம் திகதி மாத்தறை - வெலேகொட பகுதியில் பிடிக்கப்பட்டு மீண்டும் ஆற்றில் விடப்பட்டிருந்தது. (இ-7-10)

# யாழ்ப்பாணத்தில் வெளிவிவகார அமைச்சின் தூதரகப் பணியகம்

## அமைச்சரவை அங்கீகாரம்

வவுனியாவில் அமைக்கத் திட்டமிடப்பட்டிருந்த இலங்கை வெளிவிவகார அமைச்சின் தூதரக சேவை பணியகத்தை (கொன்சூலர்) யாழ்ப்பாணத்துக்கு மாற்றுவதற்கு இலங்கை அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சின் தூதரக சேவை உதவிகளை வடக்கு மற்றும் தெற்கிலுள்ள மக்கள் இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக வவுனியாவிலும், மாத்தறையிலும் இரண்டு தூதரக சேவை பணியகங்களை அமைப்பதற்கு ஏற்கனவே இலங்கை அமைச்சரவை ஒப்புதல் வழங்கியிருந்தது.

எனினும், யாழ். மாவட்டத்திலேயே அதிகளவு மக்கள் வெளிவிவகாரச் சேவையின் தூதரக உதவிகளைப் பெற வேண்டிய நிலையில் இருப்பதாக வட மாகாண முதலமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதற்கமைய, வவுனியாவில் அமைக்கப்படவிருந்த தூதரக சேவை பணியகத்தை யாழ்ப்பாணத்துக்கு மாற்றுவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சமர்ப்பித்திருந்தார்.

இந்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை கடந்த செவ்வாய்க்கிழமை அனுமதி அளித்துள்ளது. (இ-7-10)





# செய்தித்துளிகள்

## பிரதம நீதிவான் இடமாற்றம்

கொழும்பு பிரதம நீதவான் கிஹான் பிலப்பிட்டிய அநுராதபுரம் மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதியாக இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக நீதிச் சேவைகள் ஆணைக் குழுவின் செயலகம் அறிவித்துள்ளது.

இந்த இடமாற்றமானது எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

## நாட்டு மக்களின் ஜனநாயக உரிமை மறுக்கப்பட்டுள்ளது

தேர்தல்கள் பிற்போடப்பட்டு வருவதால் நாட்டு மக்களின் ஜன நாயக உரிமை மறுக்கப்பட்டுள் ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் இழுத்தடிக்கப்பட்டு வருவதால் மக்களின் ஜனநாயக உரிமை மறுக்கப்பட்டு ள்ளதாகவும் தெரிவித்தார்.

தேர்தல் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7-10)

## பதிவு நடவடிக்கையில் பாரியளவில் மோசடி

வாகனப் பதிவு நடவடிக்கைகளின் போது பல மில்லியன் ரூபா மோசடி இடம் பெற்றுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் வாகனங்கள் பதிவுக்கு உட்படுத்தப்படும் போது பல மில்லியன் ரூபா நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் திணைக்களத்தின் விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.இது தொடர்பில் நேற்று முன்தினம் கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலபிட்டியவிடம் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

## இருபது வருடங்களின் பின் நெதர்லாந்து விமான சேவை

நெதர்லாந்தைச் சேர்ந்த விமான சேவைகள் நிறுவனம் இலங்கைக்கான விமான சேவையை ஆரம்பித்துள்ளது.சுமார் 20 வருட கால இடைவெளிக்குப் பின்னர் இந்த நிறுவனத்தின் விமானம் இலங்கைக்கான சேவையினை மேற்கொண்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தில் நெதர்லாந்தின் கேஎல்எம் றோயல் டொச் விமானம் (KLM Royal Dutch Airlines ) உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டது.

1997ஆம் ஆண்டு இலங்கையில் நிலவிய யுத்தத்தை காரணமாக கொண்டு இந்த நிறுவனம் இலக்கைக்கான விமான சேவைகளை நிறுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.(இ-7-10)

## நகர மக்களில் 20 வீதமானோர் நீரிழிவு நோயினால் பாதிப்பு

நகர மக்களில் 20 வீதமானவர்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார். கிராமப்புறங்களில் நீரிழிவு நோயினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 8 வீதம் எனவும் நீரிழிவு நோய் பாரியளவு பிரச்சினையாக மாற்றமடைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## தனது ஊழலை மறைக்க முறி மோசடி விவகாரத்தை கையிலெடுக்கும் மகிந்த


இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி முறிகள் விற்பனையில் இடம்பெற்ற மோசடியை பெரிதுபடுத்தி பிரசாரம் மேற்கொள்வதன் ஊடாக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான தரப்பு தம்மீதான ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களை மூடி மறைக்க முற்பட்டுள்ளதாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குற்றம் சாட்டியுள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார். (இ-7-10)

# பட்ஜெட்...

* போதைப்பொருளுக்கு எதி ரான பொலிஸ் பிரிவுக்கு 150 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* வடக்கு, கிழக்கு மாகாணங்களில சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்ப 180 மில்லியன் ஒதுக்கீடு.
* தேசிய இளைஞர் படையணிக்கு 4 ஆயிரம் மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுக்கும் 1 மில்லியன் ரூபாய ஒதுக்கீடு
* சரவதேச வெசாக் உற்சவத்துக்கு 250 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* புகையிலை பொருட்கள் ஒழிப்பு நடவடிக்கைக்கு ஜனாதிபதி நிதியத்துக்கு 500 மில்லியன் ரூபாய் நிதியொதுக்க புகையிலை நிறுவனத்துக்கு யோசனை.
* பட்டதாரிகளுக்கான தொழிற்றுறையொன்றை ஏற்படுத்துவதற்காக, 1.5 மில்லியன் ரூபாயை, வட்டியின்றி வழங்க நடவடிக்கை. இதற்காக, 150 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு
* ரயில்வே துறையில் முற்கொடுபனவு அட்டையை அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
* ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகயவற்றை ஒழுங்குபடுத்த நடவடிக்கை.
* வாழ்க்கை பூராகவுள்ள அக்ர ஹார திட்டத்தை நீடிக்க திட்டம்
* ஓய்வூதியக் கொடுப்பனவுத் தட்டமானது, ஓய்வூதியத்திட்டம் தற்போது அவசியமானது. ஓய்வூதியக் கொடுப் பனவுக்காக, 1000 மில்லியன் ரூபாய்.
* இராணுவத்தினருக்கான கொடுபனவை வழங்க 3500 மில்லியன் ரூபாய்.
* அரசாங்க வீட்டுத்திட்டங்களில் 10 வருடங்களுக்கு மேல் வாழ்ந்தோர் அவர்களது வீட்டின் உரிமத்தை மாற்றுவதற்கு 2,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* படையினரின் கொடுப்பனவுக்கு 3,500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* சமுர்த்திப் பயனாளிகளின் வருமானம் அதிகரிக்கப்படும். அத்துடன், சமுர்த்தி வேலைத்திட்டம், "ஜன இசுறு" என்று பெயர் மாற்றப்படும்.
* மாடி வீடுகளைக் கொள்வனவு செய்யும் வெளிநாட்டவர்களுக்கு 40 சதவீத கடன்.
* தோட்டத்தொழிலாளர்களுக்கு 25,000 வீடுகள்.
* வடக்கு கிழக்கின் வீடமைப்புக்களை வேகமாக முன்னெடுப்பதற்கு 5000மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* 15 வருடங்களுக்கும்மேலாக அரச வீடுகளில் வசித்துவருவோருக்கான வீட்டு உரிமையைப் பெற்றுகொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். இது, ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்க, 2 ஆயிரம் மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு.
* தேசிய சேமிப்பு வங்கி மற்றும் வீடமைப்புத்துறை வங்கி ஆகியன ஒன்றிணைந்து 7 சதவீதக் கடன் திட்டத்தை வழங்குவதற்கு 37 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு.
* நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக முகவர் நிறுவனமொன்று அமைக்கப்படும். அதற்கு 10 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.
* பெருந்தோட்டத்துறை தோட்டத தொழிலாளர்களுக்காக 25 ஆயிரம் வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படும். இதற்கான காணிகள், அரசாங்கத்தால இலவசமாக வழங்கப்படும்.
* மார்ச் 31ஆம் திகதியிலிருந்து புதிய உள்நாட்டு விமான சேவைகள் ஆரம்பிக்கப்படும்.
* நிதி பரிமாற்ற நிறுவனங்கள் 200 ஆரம்பிக்க அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.
* பிரமிட் திட்டங்கள் மற்றும் கடன் வசூலிப்புத் திட்டங்கள் போன்றவற்றுக்கு எதிரான சட்டங்கள், நிதி நிறுவனங்கள் வரை நீடிக்கப்படும்
* நிதி முகாமைத்துவம் தொடர்பான நிறுவனமொன்று உருவாக்கப்படும்.
* நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அறிமுகப்படுத்தப்படும்
* மின்சாரத்தை குறைந்த விலையல் மக்களுக்கு பெற்றுக்கொடுப்பது உறுதி செய்யப்படும்.
* திருகோணமலை நீர்த்திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு 600 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* 2018ஆம் ஆண்டளவில், புகையிரதம் மற்றும் இலங்கை போக்குவரத்துக்குச் சேவைகள் சுயநிதியுதவியில் இயங்கும்.
* நாடளாவிய ரீதியான குடிநீர்த் தட்டங்களுக்கு 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* இலத்திரனியல் வாகனங்களை அறிமுகப்படுத்துவதற்கு 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு
* முச்சக்கரவண்டி மற்றும் வான்களை கட்டுப்படுத்த நிறுவனம்.
* புகையிரதம் மற்றும் பஸ்களில் அட்டைகளின் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான திட்டம்.
* 32 ஆசனங்களைக் கொண்ட பாடசாலை வான்களுக்காக 75 சதவீத வட்டி விலக்களிப்புக்கு 150 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* 10 வருடங்களுக்கும் பழைமையான ஹோட்டல்களுக்கு மீள் புனரமைப்பதற்கு 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* கூட்டங்கள், மாநாடுகள், ஊக்குவிப்புகள், கண்காட்சி கைத்தொழிலுக்கு 1,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வான்களுக்கு பதிலாக 35 இருக்கைகளைக் கொண்ட பஸ்களை அறிமுகப்படுத்துவதற்கு ஊக்கச் சலுகை வழங்கப்படும்.
* முச்சக்கரவண்டிகளுக்கு பதிலான இலத்திரனியல் கார்கள் பெற்றுக கொடுக்கப்படும். அதற்காக 1000 வாகனங்களை இறக்குமதிச் செய்ய 50 சதவீதம் வட்டி குறைப்பு.
* பதுளைக்கு நெடுஞ்சாலைகளை அமைப்பது சாத்தியமானதா என்பது குறித்து ஆராயப்படும்.
* மத்திய மற்றும் ருவன்புர அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணப் பணிகள் இன்னும் சில மாதங்களில் ஆரம்பிக்கப்படும்.
* உல்லாசப் பயணிகளுக்கான இலத்திரனியல் விசா முறை அறிமுகப் படுத்தப்படும்.
* சுற்றுலா விடுதிகளில் குறைந்த அறைக் கட்டணம் இனங்கண்டு அறிவிக்கப்படும்.
* நனோ தொழில்நுட்பத்தை இலங்கையிலுள்ள கல்வி நிறுவகங்களில் அறிமுகப்படுத்துவதற்கு 250 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு
* சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதற்கு சுறறுலா முக்கோண வலயம் அமைக்கப்படும்.
* தெற்கு அதிவேக நெடுஞ்சாலை பதுளை வரை விருத்தி செய்யப்படும்.
* நிர்மாணத் துறைக்காக விதிக்கப்பட்டிருந்த 25 சதவீத இறக்குமதித் தீர்வை நீக்கப்படும்.
* விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பங்களுக்காக 1,306 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* இணையத்தள பயணத்துறையில் பொதுவான தொழில்நுட்பம் கொண்டுவரப்படும்.
* பதுளையில் உள்நாட்டுக்கான விமான நிலையம் அமைக்கப்படுவதற்கான சாத்தியம் உண்டு.
* மொபிடல் நிறுவனத்தை பொதுக கம்பனியாக பட்டியலிடுத்தல்.
* ஸ்ரீலங்கன் எயார்லைன் மற்றும் மிஹின் எயார் வர்த்தக ரீதியாக்கப்படும்.
* நனோ தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு 250 மில்லியன் ரூபாய ஒதுக்கீடு.
* துறைமுகத்தில் 12 மணித்தியாலங்கள் நங்கூரமிடுவதற்கு இலவசம்.
* நாட்டில் வளர்ச்சி குன்றிய நாடுகளிலுள்ள முதலீட்டாளர்களுக்கு வரி விடுமுறை அளிக்கப்படும்.
* கடல் மையங்கள் குறித்து முக்கய நோக்கம் செலுத்தப்படுகின்றன. கடல்சார் அதிகாரங்கள் நிறுவப்படும்.
* இலங்கையை, ஆசியாவின் கேந்திர மத்திய நிலையமாக்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.
* அரச வியாபாரங்களை அபிவிருத்தி செய்வதற்கு 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வங்கிக்கான தேவை ஏற்பட்டுள்ளது.
* வர்த்தகத்துறைக்கு 50 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* கொழும்பு வர்த்தகக் கண்காட்சியை அடுத்த வருடம் நடத்துவதற்கு 50 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* ஏற்றுமதி கைத்தொழில் பேட்டைகள் 15 ஆரம்பிக்கப்படும்.
* இலங்கையின் பெயரை பிரசித்தப்படுத்த 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* இலங்கையின் உற்பத்திகளுக்கும் தேவைகளுக்கும் பன்முகத் தன்மை தேவை.
* பெருநகரங்களுக்காக நிதியமைச்சினால் 750 மில்லியன் ரூபாய் நேரடி முதலீடு.
* ஆடைத் தொழிற்றுறைக்கு வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை.
* 100 மில்லியன் மற்றும் 500 மில்லியன் ரூபாய்க்கு அதிகமான முதலீடுகளை மேற்கொள்பவர்களுக்கு வசேட ஊக்கச்சலுகைகள் வழங்கப்படும்.
* தொழில்நுட்ப இயந்திரங்களின் இறக்குமதிக்காக 75 சதவீத வரி விடுவிப்பு
* சரியான முதலீட்டாளர்களுக்கு 5 வருடங்களுக்கான விசா.
* ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்கள் தவிர ஏனைய பகுதிகளில், அமெரிக்க டொலர் 3 மில்லியனுக்கும் மேலதிக வர்ததகத்தை மேற்கொள்வதற்கு, 100 சதவீத முதலீட்டுக் கொடுபனவுகள்.
* 500 மில்லியன் ரூபாய்க்கு அதிக முதலீடு தொடர்பில் ஊக்குவிப்புத்திட்டம்.
* வடக்கில் வர்த்தகங்களை முன்னெடுப்பதற்கு 200 சதவீதமான முதலீட்டு கொடுப்பனவுகள்.
* பொருளாதாரத்தை உருவாக்க புதிய கொள்கை உருவாக்கப்படும்.
* உப்பு உற்பத்தி நிறுவனங்கள் துன்பநிலையில் உள்ளன. ஆகையால், அவற்றை தனியார் நிறுவனங்களுக்கு வழங்க நடவடிக்கை.
* சுகாதார அமைப்புக்களை பலப்படுத்தும் வகையில், அனைத்து அரசாங்க வைத்தியசாலைகளும் நோயாளிகளுக்கு செலவுத்தாள் ஒன்றை வழங்குதல் வேண்டும்
* பெறுமதி சேர்க்கப்பட்ட வியாபாரங்கள் ஊக்குவிக்கப்படும்.
* செலாவணி கட்டுப்பாட்டுத் திட்டத்துக்கு மாற்றீடு கொண்டுவரப்படும்.
* ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் மத்திய ஓய்வூதிய நிதி சீரமைக்கப்படும்
* சிறிய மற்றும் நடுத்தர வியாபாரிகளுக்கு கடன்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும்.
* மனித வளத்தை வழங்கும் நிறுவனங்களுக்கான சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
* சிறு வியாபாரிகளுக்கு சலுகைக் கடன்கள் பெற்றுக்கொடுக்கப்படும்.
* கடைகள் இரவு 11 மணி வரை திறந்து வைக்கப்படுதல் வேண்டும். இதற்காக 11 மணிவரைக்கும் தனியார் பஸ்களை இயக்குவதற்கு ஒப்புதல பெறப்பட்டுள்ளது.
* ஒவ்வொரு நோயாளியும், சிகிச்சை முடிந்து வீடு திரும்பும் போது, சிகிச்சைக்காக செலவு செய்யப்பட்ட செலவு தொடர்பிலான பற்றுச்சீட்டொன்றைப் பெற்றுச்செல்ல நடவடிக்கை எடுக்கப்படும்.
* 500,000 ரூபாய் பெற்று அதனால் கடன் தகவல் பணியகத்தில் பெயர் பதியப்பட்டதால், அவதிப்படுவோர்க்கு, அவர்களது வர்த்தகத்தை தொடர்ந்து செய்துகொண்டு செல்வதற்கு அனுமதி.
* அனைத்து ஔடத நிலையங்களும், ஔடத அதிகார சபையில் பதிவு செய்யப்படல் வேண்டும்.
* வணிகங்களை பதிவு செய்வதற்கு 150 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* வியாபார நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ள தேவையான வசதிகளை செய்துகொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
* பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்படாத காணிகளை, வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
* வியாபாரங்களை மேற்கொள்வதற்கான வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
* பதிவு செய்யப்படாத மருந்துக் கடைகளை நடத்திச் செல்வோரை கைதுசெய்து 1 இலட்சம் ரூபாய் அபராதம் விதித்தல்
* கராப்பிட்டி, யாழ்ப்பாணம், அம்பாறை ஆதார வைத்தியசாலையில் குழந்தை மையங்களை அமைபபதற்கு 1,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* அனைத்து மருந்தகங்களும் பதிவு செய்யப்படுதல் வேண்டும். இல்லையேல் அபராதம் விதிக்கப்படும்.
* தாதியர் பயிற்சிப் பாடசாலைகளுக்காக 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* தேசிய அறக்கட்டளைக்கு 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* தொழில்சார் கல்விக்கான தரத்தை ஏற்படுத்துவதற்காக 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* வைத்தியசாலைகளின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு 25,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* பாலர் வகுப்பு மாணவர்கள் ஒவ்வொரு தவணை முறையிலும் மருத்துவ சோதனைக்கு உட்படுத்தப் படுவர்.
* பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் பகிடிவதை குறித்து அறிவிப்பதற்கு நிலையங்கள் அமைக்கப்படும்.
* களனி பல்கலைக்கழகத்தில் இலத்திரனியல் கற்கை நெறிகள் அறிமுகப்படுத்தப்படும். இதற்கு 250 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப் படும்.
* பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அனுமதி வழங்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனத்துக்கு, வெட்டுப் புள்ளிகளை அடிப் படையாகக் கொண்டு இணையும் மாணவர்கள் 15 ஆயிரம் பேருக்கு 8 இலட்சம் ரூபாய் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
* நல்ல பெறுபேறுகளை பெறும் மாணவர்களுக்கு வெளிநாடுகளில் கல்வி கற்பதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்திக்கொடுக்கப்படும்.
* வெளிநாட்டு மாணவர்கள் 500 பேர் இலங்கையில் கல்வி கற்பதற்கு 500 விசாக்கள் வழங்கப்படும்.
* கல்விச் சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையில் சர்வதேச மாணவர்களுக்கான ஒன்றுக்கு மேற்பட்ட விசாக்கள் வழங்கப்படும.
* பட்டப்படிப்புக்களை மாணவர்களுக்கு வழங்கும்வாய்ப்பு தனியார்கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.
* எதிர்வரும்2020ஆம் ஆண்டுககு பின்னர், பல்கலைக்கழக மாணவர்களுக்கான வகுப்புக்கள் இரவு 8 மணி வரை நீடிக்கப்படும்.
* பல்கலைக்கழக மாணவர்கள், சர்வதேச பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கு 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* இளைஞர் - யுவதிகளுக்கான உயர் கல்வியை வழங்கும் நடவடிக்கையை, அரசாங்கத்தினால் மாத்திரம் மேற்கொள்ள முடியாது. அதற்கு, தனியார் துறையினரும் முன்வர வேண்டும்.
* கராப்பிட்டிய வைத்திய சாலையில் 10 மாடிக்கட்டடம் அமைக்கப்படும்.
* பல்கலைக்கழக மாணவர்களின் விளையாட்டு நடவடிக்கைகளுக்காக 100 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு
* யாழ்ப்பாணம், ஜயவர்த்தனபுர, களனி, பெரதெனிய, ருஹுணு ஆகிய பல்கலைக்கழகங்களிலுள்ள பாடங்கள் தொடர்புடைய கல்விமுறைமை அறிமுகப்படுத்தப்படும்.
* பல்கலைக்கழக மாணவர்களை, சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகங்களில் கல்வி பயில 500 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு.
* சுகாதார காப்புறுதிக்காக 2,700 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* ஜயவர்தனபுர, களனி, யாழ்ப்பாணம், பேராதனைப்பல்கலைக்கழகங்களில், கல்விசார் பட்டங்களை மேற்கொள்ள நடவடிக்கை.
* புள்ளிவிபரவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப பாடங்களுக்காக, 13 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* பாடசாலையில் நல்ல பெறுபேறுகளை வெளிப்படுத்தும் மாணவர்களுக்கு புதிய புலமைப்பரிசில் திட்டங்கள். இவர்களுக்கு மாதாந்தம் 2,000 ரூபாய் வழங்கப்படும்
* பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வியைத் தொடர்வதற்கான மாணவர் இணைப்பு, 2020ஆம் ஆணடில் 50 ஆயிரத்தினால் அதிகரிக்கப்படும்.
* சுகாதார வசதிகளுக்காக 5,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* 2020 இல், பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 50,000 ஆக அதிகரிக்கப்படும்.
* கல்விக்கான நிதி ஒதுக்கீடு குறைவாக இருந்த போதிலும், முதலீடுகள் தேவையான பிரிவுகளுக்கு நிதிகள் ஒதுக்கீடு செய்யப்படும்.
* தனியார் கல்வி நிறுவனங்களுக்கு விதிமுறைகள் கொண்டு வரப்படும்.
* 5 வயது முதல் 19 வயது வரையான 4.5 மில்லியன் பாடசாலை மாணவர்களுக்கு, ஒரு பிள்ளைக்கு 2 இலட்சம் ரூபாய் வீதம் காப்புறுதி வழங்க நடவடிக்கை.
* சிறுவர்களுக்கான 200,000 காப்புறுதிகளும் சேமிப்புக்கணக்கும்.
* கேகாலை மற்றும் பதுளையிலுள்ள பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு 250 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* விசேட கல்வியை பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் நாளாந்த கொடுப்பனவு 50 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக அதிகரிப்பு.
* விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்காக 175 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* 2017ஆம் ஆண்டில் 100 பாடசாலைகளில் நீர், மின்சார வசதிகளுக்கு 5000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* கல்விப் பொதுத் தராதர உயர்தரம் மற்றும் சாதாரணதரம் ஆகியவற்றுக்கு புதிய பாடங்கள் அறிமுகம்.
* பாடசாலைகளுக்கான அடிப்படை தேவைகளை வழங்கும் பொருட்டு 2 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* கல்வித்துறையை மேம்படுத்துவற்காக, 17840 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* உயர்தர மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இலவச மடிக்கணனிகள் வழங்கப்படும்.
* பாடசாலை மாணவர்களுக்கு இலவச டப்கள் வழங்கப்படும். Wifi அமைத்துக்கொடுக்கப்படும் . இதற்கு 5 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* கல்விக்கு 90,000 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு.
* கும்புக்கன் ஓயா திட்டம் மொனராகலை மாவட்டத்தில் செயற்படுத்தப்படும்.
* 50 வேளாண்மை ஆய்வு நலையங்களை அமைப்பதற்கு நாம் முன்மொழிகின்றோம்
* 20,000 ஏக்கர் காணிகளை அபிவிருத்தி செய்ய, முதலீட்டாளர்களுக்கு 350 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* மொரககந்தை மற்றும் உமா ஓயா திட்டங்கள் விரைவில் நிறைவடையும் என்றும் நம்புகின்றோம். இதற்கு 60045 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* மொத்தமான கோழிகளை விற்பனை செய்யும் விற்பனையாளர்கள், கோழி ஒரு கிலோகிராம் 420 ரூபாய்க்கு விற்பனை செய்தல் வேண்டும். இந்தத்துறையை மேம்படுத்துவதற்கு 100 மில்லியன் ரூபாய ஒதுக்கீடு.
* யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை உள்ளிட்ட கரையோர மாவட்டங்கள் 10க்கான ஜீவனோபாயத்தை அதிகரித்துக்கொள்வதற்கு, 1200 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* 100 புதிய நீர்க்கிராமங்களை அமைப்பதற்கு 300 மில்லியன் ரூபாய்.
* கோழிகளின் உணவுக்காக இறக்குமதி செய்யப்படும் சோளத்துக்கான இறக்குமதி தீர்வை நீக்கப்படும்.
* அம்பாந்தோட்டை மற்றும் மன்னார் பகுதிகளில் மீன் பண்ணைகளை அமைப்பதற்கு 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* கரையோரப் பாதுகாப்பு வலயங்களை அபிவிருத்தி செய்ய 1200 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலுள்ள மீன்பிடித்துறையை முன்னேற்றுவதற்கு 1.2 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* கரையோர மீன்பிடி வலைய அபிவிருத்திக்கு 1200 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* இறப்பர் உற்பத்திக்காக 50 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* தேசிய ரீதியில் பாற்பண்ணை வலயங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
* பல்கலைக்கழக கல்விமுறைமை விரிவுபடுத்தப்படும்.
* திரவப் பாலுக்கான உயர் ரக கரவைப் பசுக்கள் 15 ஆயிரத்தை கொளவனவு செய்ய நடவடிக்கை எடுக்கப் படும்.
* இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்துக்கு 50 மில்லியன் ரூபாய் ஒதுகீடு.
* எதனோல் இறக்குமதிக்கு 5 சதவீத வரி அறவிடப்படும். உள்ளூர் சீனி உற்பத்திகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
* சீனி இறக்குமதிக்கான இறக்குமதித் தீர்வை, 2 சதவீதத்தால் அதிகரிக்க நடவடிக்கை
* கரும்பு பயிர்ச்செய்கைகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கத்தின் காணிகள் வழங்கப்படும்.
* தெங்கு ஆராய்ச்சிநிறுவனத்துக்கு, 75 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
* விவசாய கூட்டுறவுக்கு சலுகைக் கடன் வழங்கப்படும்.
* இறப்பர் தொழிற்றுறையை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்காக, 900 மில்லியன ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். (செ-9)

# மைத்திரிபாலவின் வழியினைப் பின்பற்றிய ஹிலாரி தேர்தலில் தோல்வியடைந்தாராம்

## தயான் ஜயதிலக கூறுகிறார்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வழியைப் பின்பற்றிய அமெரிக்க ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளின்டன் தேர்தலில் தோல்வியடைந்தார் என அரசியல் ஆய்வாளரும் முன்னாள் இராஜதந்திரியுமான தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேன பின்பற்றிய யுக்திகளையே ஹிலாரி பின்பற்றியதாகவும் எனினும் ஹிலாரியின் இந்த யுக்தி கைகொடுக்க வில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறுபான்மை மக்களின் வாக்குகளை உச்ச அளவில் பெற்றுக்கொள்வதுடன், பெரும்பான்மை மக்களின் ஆதரவுடன் ஆட்சிப்பீடம் ஏறுவதே ஹிலாரியின் நோக்கமாக அமைந்திருந்தது என அவர் தெரிவித்தார். எனினும், டொனால்ட் ட்ரம்ப் அதிக வாக்குகளைப் பெற்றுக் கொண்டு வெற்றியீட்டியதாகவும் வெள்ளையின பெரும்பான்மை மக்கள் வாழ்ந்து வரும் அமெரிக்காவில் தேர்தல் முடிவுகள் ஹிலாரிக்கு சாதகமாக அமையவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெள்ளையின ஆண்கள் அதிகளவில் ட்ரம்ப்பிற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7-10)




யாழ். ஒஸ்மானியாக்கல்லூரி, மஹ்மூத் மண்டபத்தில் நடைபெற்ற யாழ். முஸ்லிம் ஒன்றுகூடல்- 2016 முஸ்லிம் கலாசார நிகழ்வின் போது கல்வியியலாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். வடக்கு மாகாண சபை அமைச்சர் த.குருகுலராசா, வடக்கு மாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின், ஆர்.இரவீந்திரன், எம்.எப்.எம்.இக்பால், எம்.எல்.லாபிர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நன்றி செலுத்தும் வழிபாடு

கற்கோவளம் மெதடிஸ்த திருச்சபையின் 147 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் நன்றி செலுத்தும் வழிபாடும் நாளை 12ஆம் திகதி திருச்சபையில் டி.அழகராசா தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு அக்கராயன் மெதடிஸ்த திருச் சபையைச் சேர்ந்த த.அதிஸ்கரன் அருளுரை வழங்குவார். (இ-60)

# ஜனாதிபதி, பிரதமரை உளவுபார்த்த இளைஞனுக்கு விளக்கமறியல்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை உளவு பார்த்தார் என்ற சந்தேகத்தின்பேரில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அமரர் பண்டித் அமரதேவவின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இருந்த இடத்திற்கு தன்னை ஊடகவியலாளராக அடையாளப்படுத்திக் கொண்டு இளைஞர் சென்ற நிலையிலேயே ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

கமராவுடன் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய நிலையிலேயே குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டு கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் குறித்த இளைஞனை நேற்று முன்தினம் கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலிபிட்டிய முன்னிலையில் நிறுத்தப்பட்டதை அடுத்து குறித்த நபரை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருக்கின்றார். இந்த நபர் கொழும்பு கொட்டாஞ்சேனை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7-10)

## கலாசார பெருவிழா இன்று

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் வலி. மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையும் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் கலாசாரப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சங்கானை கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான அ. சோதிநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகவும் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். அத்துடன், சுழிபுரத்தைச் சேர்ந்த மூத்த இசைத்துறைக் கலைஞர் கலாபூஷணம் சு. கணபதிப்பிள்ளை மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் சங்கானைக் கிளை முகாமையாளர் உ.ராகுலன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். நிகழ்வில், பணுவில்-02 நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது. (இ-7-10)

# வரவு-செலவுத் திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம்



வரவு செலவுத்திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வரவு செலவுத்திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதை அமைச்சர் கயந்த கருணாதிலக உறுதிப்படுத்தியுள்ளார்.

உத்தேச வரவு செலவுத் திட்டம் தொடர்பிலான அமைச்சரவை கூட்டம் நடத்தப்பட்டதாகவும், அந்த கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றதாகவும் அவர் உறுதிப்படுத்தியிருந்தார்.

2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தொடர்பில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க விசேட தெளிவூட்டலொன்றையும் வழங்கியுள்ளார். (இ-7-10)

## களனியில் சிக்கியது 450 மில்லியன் ரூபாய் பெறுமதியான கொக்கைன் போதைப்பொருள்



களனி பெதியகொட பகுதியில் 450 மில்லியன் ரூபா பெறுமதியான கொக்கைன் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

கொள்கலன் ஒன்றிலிருந்தே 31 கிலோ கிராம் நிறையுடைய கொக்கைன் போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. நேற்று முன்தினம் இரவு இந்த போதைப் பொருட்கள் மீட்கப்பட்டன. (இ-7-10)

## இராசி பலன்

11.11.2016
(ஐப்பசி 26, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
துவாதசி பின்னிரவு 3.04 மணிவரை
உத்தரட்டாதி முன்னிரவு 10.05மணிவரை
சுபநேரம் 6.06-7.36 மணிவரை
இராகுகாலம் 10.36-12.06 மணிவரை
வைஷ்ணவ ஏகாதசி விரதம்,
சித்தாமிர்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூரம், உத்தரம் | | |
| செவ் | | | ராகு |
| சுக் | சனி<br>புத | சூரி | குரு |

**மேடம்:** மன அமைதி கூடும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம்.

**இடபம்:** இனிய செய்திகள் வந்து சேரலாம், பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, தொழில் வளர்ச்சி கூடும்.

**கடகம்:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, மறதியால் தவறிய காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உதவி செய்த சிலரே உதாசீனம் செய்யலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**கன்னி:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்:** தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், நினைத்த காரியத்தை செய்து முடிப்பீர்கள், உடல் நலன் சீராகும், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** தொலை தூரத்து உறவினர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், வியாபார விருத்தி உண்டு.

**தனுசு:** எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பெற்றோர் மீது பிரியம் கூடும், சுப செலவுகள் கூடும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்:** சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் கைகூடும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** நண்பர்களால் நம்பிக்கைகள் இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் எண்ணம் உருவாகும்.

**மீனம்:** புதியவர்களின் நட்பு கிடைக்கும், குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் பேசாமலிருப்பது நல்லது, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

# உலக நீரிழிவு தினம் யாழ்.வேம்படியில்

(யாழ்ப்பாணம்)

உலக நீரிழிவு தின நிகழ்வுகள் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

யாழ்.நீரிழிவு அஷோசியேஷன் தலைவர் தி.மைக்கல் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் நீரிழிவை வெற்றி கொள்வோம் எனும் நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது.

ஆய்வுரையினைசுகவாழ்வு பத்திரிகை ஆசிரியர் கா.வைத்தீஸ்வரன், சிறப்புரைகளை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் இ.சுரேந்திரகுமார், யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவு நிலைய வைத்தியர் எம். அரவிந்தன், யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் பொ.ஜெசிதரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். இந்நிகழ்வில் மூலிகைக் கண்காட்சி, நீரிழிவு மருத்துவ, ஓரங்க நாடகம் என்பன இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# வீதியை விரைவாக புனரமையுங்கள்



(கரணவாய்)

கரவெட்டி விராலிமடம் தில்லையம்பலம் வரணி வீதி 60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் புனரமைப்பு செய்வதற்கு ஒதுக்கப்பட்டது. இது வீதி அதிகார சபை ஊடாக ஒப்பந்தகாரரிடம் வழங்கப் பட்டது.ஆனால் 5 மாதங்கள் ஆகியும் கல்லு பறித்து பரவிய நிலையிலே உள்ளது. இதனால் வயல்நிலங்களுக்கு செல்லும் விவசாயிகள், அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் அவ்வழியாக செல்ல முடியாமல் பாரிய சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.இதில் வயது வந்தவர்கள் பலர் விழுந்து அவதிப்படுகின்றனர். இப்பாதை முதல் இருந்த அளவை விட மிகவும் ஒடுக்கமாக கல்லு பரவப்பட்டுள்ளது.

இன்னும் ஒரு மாதத்தில் இவ்வீதி புனரமைப்பு செய்யத் தவறின் இதற்கு ஒதுக்கப்பட்ட நிதி திரும்பும் நிலை ஏற்படும். இவ்வீதியை உடனடியாக புனரமைப்பு செய்ய வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(இ-60)

# தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பது எப்படி? கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பது எப்படி? எனும் தலைப்பில் ஐக்கிய சோசலிசக் கட்சி ஏற்பாட்டில் கருத்தரங்கு நாளை மறுதினம் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் இடம்பெறும்.

இந்தக் கருத்தரங்கில் ஐக்கியசோசலிசக்கட்சியின்பொதுச் செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய, புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பிரதம செயலாளர் சி.கா.செந்திவேல் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (இ-3)

## யாழில் காலாவதியான முகப்பூச்சுக்களைப் பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்ட

# 11 அழகு நிலையங்களுக்கு எதிராக அதிரடி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

**யாழ்.நகர்ப்பகுதியில் அமைந்துள்ள பெண்களுக்கான அழகு நிலையங்களில் காலாவதியான முகப்பூச்சுக்களை பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்டு வந்த 11 அழகு நிலையங்களுக்கு எதிராக அதிரடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாவனையாளர் அதிகார சபையின் யாழ்.மாவட்ட இணைப்பதிகாரி த.வசந்தசேகரம் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

யாழ். நகர்ப்பகுதியை அண்டிய பகுதிகளில் அமைந்துள்ள பெண்களுக்கான அழகு நிலையங்கள் சிலவற்றுக்கு எதிராக கடந்த மாதம் எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன.

அதாவது அழகு நிலையங்களுக்கு சென்று தம்மை அழகுபடுத்திய பெண்கள் சில நாட்களுக்கு பின்னர் தமது முகங்களில் மாறுதல்கள் ஏற்பட்டு வருவதாகவும் தோல் நோய்கள் ஏற்படுவதற்கான அறிகுறிகள் காணப்படுவதாகவும் தமது முறைப்பாடுகளை எமக்கு தெரிவித்திருந்தனர்.

அந்த வகையில் நாம் யாழ். நகர் பகுதியை அண்டி அமைந்துள்ள அழகு நிலையங்களில் திடீர் சோதனையை மேற்கொண்டிருந்தோம். அதன்போது 11 அழகு நிலையங்களில் காலாவதியான முகப்பூச்சுக்கள் பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் அவர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்திருந்தோம்.

இதில் கடந்த மாதம் 3 பேருக்கு எதிரான வழக்குகள் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு அதில் 2 பேருக்கு எதிராக தலா 9 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் நீதிமன்றால் அறவிடப்பட்டுள்ளது. மிகுதியாக உள்ள வழக்குகளை இந்த மாதமளவில் நீதிமன்றில் தாக்கல் செய்யவுள்ளோம்.

இத் திடீர் சோதனை நடவடிக்கை யாழ்.நகர்ப்பகுதியில் மாத்திரமே தற்போது மேற்கொண்டுள்ளோம்.ஆனால் யாழ்.மாவட்டத்தில் உள்ள பல்வேறு பகுதிகளில் இவ்வாறான மோசடிகள் இடம்பெற்று வருவதாக எமக்கு முறைப்படுகள் கிடைத்துள்ளன.

அத்துடன் சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளில் இருந்து எடுத்துவரப்பட்ட முகப்பூச்சுக்கள் மற்றும் பாவனைக் கால முடிவுத் திகதிகள் குறிப்பிடப்படாத முகப்பூச்சுக்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுவதாகவும் அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எனவே அடுத்த கட்டமாக திடீர் சோதனைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளவுள்ளோம். அவ்வாறு மேற்கொள்ளப்படும் சோதனை நடவடிக்கையின் போது மோசடி நடவடிக் கைகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் அழகு நிலையங்களுக்கு செல்லும் பெண்கள் தமக்கு பயன்படுத்தப்படும் பொருட்களை உன்னிப்பாக அவதானித்து அவற்றின் தரம் அறிந்து பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் எனவும் இவ்வாறான மோசடி நடவடிக்கைகள் நடப்பதை அறிந்தால் 021 321 9000 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)




# மலர்க்கண்காட்சி இன்றுடன் நிறைவு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு நல்லூர்சங்கிலியன் பூங்காவில் கடந்த 5 ஆம் திகதி ஆரம்பமான மலர்க் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை 11 ஆம் திகதியுடன் நிறைவடைகிறது.

வடமாகாண சுற்றாடல் அமைச்சால் தாவர உற்பத்தியாளர் மற்றும் விற்பனையாளர்களின் பங்கேற்புடன் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கண்காட்சியைப் பார்வையிடத் தினமும் ஆயிரக் கணக்கானோர் வருகை தருவதோடு மரக்கன்றுகளையும் பூச்செடிகளையும் வாங்கிச் செல்கின்றனர். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அதிக எண்ணிக்கையில் பயன்தரு மரக்கன்றுகளும் நிழல் மரக்கன்றுகளும் பூச்செடிகளும் விற்பனையாகி வருவதாக மலர்க் கண்காட்சியில் பங்கேற்றுள்ள பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இம்மலர்க் கண்காட்சிக்கு வரும் பார்வையாளர்களைக் கிளை விட்ட தென்னை மரம் ஒன்றும் அதிக அளவில் கவர்ந்து வருகிறது. தென்னை மரங்கள் கிளை விடுவது மிகவும் அரிதாகவே நிகழும் அபூர்வம். சங்கிலியன் பூங்காவில் நுழைவு வாசலுக்கு எதிரே உள்ள வளவிலேயே இந்த அபூர்வத் தென்னை காணப்படுகிறது. கண்காட்சிக்கு வரும் பார்வையாளர்கள் இக்கிளைத் தென்னையைப் பார்வையிடுவதிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.(இ-10)

# பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை பாதுகாப்பிற்கு பொலிஸார் நியமனம்

(கரணவாய்)

பருத்தித்துறைஆதாரவைத்தியசாலையின் பாதுகாப்பிற்கு இரண்டு பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குள் வாள்களுடன் ஒரு கும்பல் புகுந்து அடாவடியில் ஈடுபட்டது.

இதனையடுத்து வைத்தியசாலையின் பாதுகாப்பு கேள்விக் குறியாகியிருந்தது. எனவே இரண்டுபொலிஸாரை நியமித்து துப்பாக்கியும் வழங்கப்பட வேண்டும் எனக்கோரப்பட்டதையடுத்து துப்பாக்கி தரித்த இரண்டு பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.(இ-60)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வட இந்து ஆரம்பப் பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை 12 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் த. ரவீந்திரன் தலைமையில் வட இந்து மகளிர் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சிவன் பவுண்டேசன் நிறுவனர் வேலாயுதம் கனகேஸ்வரன் கலந்து சிறப்பிப்பார். (இ-60)

# யாழ்.பல்கலையில் தமிழ்-சிங்கள மாணவர்கள் மோதல் வழக்கு விசாரணை டிசெம்பர் எட்டு வரை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தமிழ், சிங்கள மாணவர்களுக்கு இடையிலான மோதல் கலவரம் தொடர்பான வழக்கு விசாரணையை எதிர்வரும் டிசெம்பர் 8ஆம் திகதி வரை ஒத்திவைக்க யாழ்.நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஜூலை 16ஆம்திகதி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பீட மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்த வரவேற்பு நிகழ்வில் வழமைக்கு மாறாக கண்டிய நடனத்தை நடத்த முற்பட்டதையடுத்து தமிழ்,சிங்கள மாணவர்களுக்கு இடையில் மோதல் ஏற்பட்டு பின்னர் அது கலவரமாக மாற்றமடைந்திருந்தது.

அத்துடன் இதில் காயமடைந்த சிங்கள மாணவன் ஒருவன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இவ்வாறான நிலையில் குறித்த சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தமிழ்,சிங்கள மாணவர்கள் எதிர் எதிராக முறைப்பாடுகளை பதிவு செய்திருந்தனர். இதனையடுத்து குறித்த வழக்கு விசாரணையானது குறிப்பிட்ட காலத்திற்கு ஒருதடவை தவணையிடப்பட்டு தொடர்ச்சியாக இடம்பெற்று வந்திருந்தது.

இந்நிலையில் நேற்றைய வழக்கு விசாரணையானது யாழ்.நீதவான் நீதிமன்றபதில் நீதவான் வி.ரி.சிவலிங்கம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. இதன்போது மாணவர்கள் சார்பாக சட்டத்தரணி கேசவன் சயந்தன் முன்னிலையாகியிருந்தார்.

குறித்த வழக்கில் காயமடைந்திருந்த சிங்கள மாணவன் தொடர்பான மருத்துவ அறிக்கையானது மன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காத நிலையில் குறித்த வழக்கு விசாரணையை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 8ஆம் திகதி வரை ஒத்திவைக்க நீதவான் உத்தரவிட்டிருந்தார். இதே வேளை குறித்த வழக்கில் சம்பந்தப்பட்ட இருதரப்பு மாணவர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.(இ-4)

# தென்மராட்சி கல்வி வலயம் நடத்தும் முழுநிலா நாள்

வடமாகாணக்கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலயம் நடத்தும் முழுநிலா நாள் கலைவிழா எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகவடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசா, சிறப்பு விருந்தினராக அந்த அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் ந.நவரத்தினம் மற்றும் ஓய்வு நிலைக் கோட்டக் கல்விப் பணிப்பாளரும் முல்லைத்தீவு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளருமான (கல்வி அபிவிருத்தி) கு.சிவானந்தம் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் அறிஞர் கௌரவிப்பு கீர்த்தனாமுதம் இறுவெட்டு வெளியீடு மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (இ-3-80)

# ஐந்து நாட்களுக்குள் தீர்வு வேண்டும் இல்லையேல் போராட்டம் விஸ்தரிப்பு

## யாழ்.மாநகர சபை சுகாதார தொழிலாளர்கள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**ஐந்து நாட்களுக்குள் உரிய தீர்வை வழங்கா விட்டால் தமது போராட்டம் மேலும் விஸ்தரிக்கப்படும் என யாழ். மாநகரசபை சுகாதார தொழிலாளர்கள் நேற்றைய தினம் அறிவித்துள்ளனர்.**

வடமாகாண ஆளுநர். வடமாகாண முதலமைச்சர். யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் யாழ். மாநகரசபை ஆணையாளரிடம் நேற்றைய தினம் மகஜர் ஒன்றினை கையளித்துள்ளனர்.

அதில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யாழ்.மாநகரசபையில் தற்காலிகமாக பணிபுரியும் மாநகரசபை சுகாதார தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி யாழ் மாநகரசபை சுகாதார தொழிலாளர்கள் கடந்த 7 ஆம் திகதி முதல் தமது பணிப் புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.


2009 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ். மாநகரசபை சுகாதார பகுதியில் தற்காலிக தொழிலாளிகளாக 127 பேர் பணியாற்றி வருவதாகவும் இதுவரை அவர்களுக்கான நிரந்தர நியமனம் எவையும் வழங்கப்படவில்லை என்றும் நியமனம் வழங்குவதாக கூறி இழுத்தடிப்புக்கள் நடைபெற்று வருகின்றன என தெரிவித்து சரியான தீர்வை எட்டும் வரை தமது புறக்கணிப்பு போராட்டம் தொடரும் என அறிவித்துள்ளனர்.

குறித்த தொழிலாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றிருந்தது. அதில் மேற்குறித்த தற்காலிக தொழிலாளர்களில் 90 பேருக்கான நியமனத்தை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் ஏனையவர்களை படிப்படியாக உள்வாங்க முடியும் என்றும் தெரிவித்த ஆணையாளர் அவர்களை கடமைக்கு திரும்புமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆனால் வாக்குறுதிகளில் நம்பிக்கை இல்லை என்றும் எப்போது நியமனங்கள் வழங்கப்படும் என்ற உறுதிமொழியை எழுத்துமூலம் வழங்கினால் மாத்திரமே தமது போராட்டத்தை கைவிடுவதாக தொழிலாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-9)

# ஜனாதிபதி செயலகத்திற்கு முன் ஏற்பட்ட கலகத்திற்கு மகிந்த அணியே காரணம்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் குற்றச்சாட்டு



ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக குழப்பத்தை தோற்றுவித்த போரின்போது அவயவங்களை இழந்த ஓய்வு பெற்ற இராணுவ சிப்பாய்களுக்குப் பின்னால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க் கட்சி உறுப்பினர்களே சதி செய்திருப்பதாக இராஜாங்க பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜேவர்த்தன குற்றம் சுமத்தியுள்ளார். ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கைகோர்த்திருக்கும் சில பௌத்த பிக்குமார்களும் இந்தக் கூட்டு சதிக்கு உடந்தை என்றும் அவர் தெரிவித்தார்.

அவயவங்களை இழந்த ஓய்வுபெற்ற இராணுவ சிப்பாய்கள் அண்மையில் தொடர் போராட்டத்தை அடுத்து ஜனாதிபதி செயலகத் திற்கு முன்பாக கூச்சலிட்டு குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தனர்.

குழப்பகரமான நிலையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை குண்டுத் தாக்குதலை நடத்தியிருந்தனர்.

இதுதொடர்பாக விளக்கமளிக்கும் ஊடக வியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் மாலை கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய இராஜாங்க பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜேவர்த்தன. அவய வங்களை இழந்த ஓய்வுபெற்ற இராணு வச் சிப்பாய்கள் மீதான பொலிஸாரின் நடவடிக்கை குறித்து தமது கவலையை தெரிவித்துக் கொண்டார். எனினும் முன்னாள் இராணுவச் சிப்பாய்களின் இந்த நடவடிக்கைக் குப் பின்னால் ஒன்றிணைந்த எதிர்க்கட் சியிலுள்ள சில நாடாளு மன்ற உறுப்பினர்களும் அவர்களு டன் இணைந்திருக்கும் கடும் போக்கு பௌத்த பிக்குகளுமே சதிசெய்திருப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

ஓய்வூதியக் கொடுப்பனவுக் கோரிக் கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்ட அடுத்த நொடியில் குழப்பத்தை ஏற்படுத்தாமல் ஆர்ப்பாட்டத்தை கைவிடும்படி வாய் மூலமா கவும் எழுத்து மூலமா கவும் முன்னாள் இராணுவச் சிப்பாய்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் புறம்பாக வந்து ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் ஒன்று கூடிய சூழ்ச்சிமேற் கொள்வோர், அவயவங் களை இழந்த ஓய்வுபெற்ற இராணுவ வீரர்களுக்குப் பதிலாக வேறொரு தரப்பினரை அனுப்பி கலகத்தை ஏற்படுத் தியிருந்ததாக அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார். (இ-7-10)

# சீனாவின் நிதியில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 100 விஹாரைகளை புனரமைக்க இலங்கை முடிவு

சீனாவில் இருந்து அளிக்கப்பட்ட கொடை களைப் பயன்படுத்தி வடக்கு- கிழக்கில் உள்ள 100 பௌத்த விஹாரைகளை இல ங்கை அரசாங்கம் புனரமைப்புச் செய்ய வுள்ளது.

சீனாவின் குவாண்டுனே பௌத்த சங்கத் தின் தலைவர் மிங் செங், 20.24 மில்லியன் ரூபாவை இலங்கையின் பௌத்த மதத்தின் வளர்ச்சிக்காக கொடையாக வழங்கியிருந்தார்.

இந்த நிதியைக் கொண்டு, வடக்கு - கிழக்கில் உள்ள 100 பௌத்த விகாரை களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்ய இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதற்கான அமைச்சரவைப்பத்திரம் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் புத்த சாசன அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள் ளது.

சீனாவில் இருந்து கிடைத்துள்ள கொடை யைப் பயன்படுத்தி, வடக்கு-கிழக்கில் உள்ள விஹாரைகளில் குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க அரசாங் கம் திட்டமிட்டுள் ளது. (இ-7-10)


இவர்களுக்கு மணமகள் தேவை

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா:14 செவ் 2 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/6421 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 15 செவ் 12 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/6461 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 15<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:O/Lகனடா NOT PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/6422 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 20<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:AAT, ACCA/ தனியார் தொழில்<br>தொ.இ: G/6462 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் செவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/6423 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 51 சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: மிருக வைத்தியர்<br>தொ.இ: G/6463 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி செவ் 8 இல்<br>உயரம்: 175CM<br>தகைமை/தொழில்:A/Lலண்டன் PR<br>தொ.இ: B/6424 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 14<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:Accounting/ அவுஸ்திரேலியா<br>தொ.இ: G/6474 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com

குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00- 5.00 மணிவரை திறக்கப்படும்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

இனிவரும் நாட்களில் கல்யாணமாலை ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை தினமாகும்.



**யாரிடம் பேசுவது?**

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை....
என்பன போன்ற எண்ணங்களா?

**எம்முடன் பேசுங்கள்.**

**கை கொடுக்கும் நண்பர்கள்**

104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை

**021 222 8117, 077 900 8776**

வவுனியா: (024) 324 4444

(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

(ஓ/5649)


## வடக்கு மாகாண சபை - பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழு தொடர்பான அறிவித்தல்

வடக்கு மாகாண சபையின் பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுவிற்கு முறைப்பாடுகளை முன்வைப்பவர்கள் தங்களின் முழுப்பெயர்,முகவரி,தொலைபேசி இல. என்பவற்றை முறையாகக் குறிப்பிட்டு கையொப்பமிட்டு **"தலைவர்,பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழு, பேரவைச் செயலகம்,வடக்கு மாகாண சபை,A-9 வீதி,கைதடி"** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.இவ் விபரங்கள் இன்றி அனுப்பப்படும் முறைப்பாடுகள் மற்றும் முறைப்பாட்டுக்குழுவின் தலைவருக்கு முகவரியிடப்படாத முறைப்பாடுகள் அல்லது வேறு எவருக்கும் முகவரியிட்டு முறைப்பாட்டுக்குழுவிற்கு அனுப்பப்படும் பிரதிகள் தொடர்பில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படமாட்டாது என அறியத்தரப்படுகின்றது.

பேரவைச்செயலகம்,
வடக்கு மாகாண சபை,
கைதடி.
10.11.2016

(இ-6362)

க.தெய்வேந்திரம்
செயலாளர்

# தன்னியக்க இயந்திரங்கள் மூலம் பண மோசடியில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் நால்வர் கைதாகினர்

## இலத்திரனியல் பொருட்கள், வங்கி அட்டைகள் மீட்பு

(குருமன்காடு)

வவுனியாவில் கடந்த பல மாதங்களாக வங்கிகளின் தன்னியக்க இயந்திரங்களின் மூலம் பண மோசடியில் ஈடுபட்டதாக நான்கு சந்தேக நபர்களை நேற்று கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது.

வவுனியாவில் கடந்த சில மாதங்களாக வங்கிகளின் தன்னியக்க இயந்திரங்களின் மூலம் பணம் கொள்ளையிடப்பட்டதாக முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. இதனையடுத்து வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ்ஜ. பெரேரா தலைமையில் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் இயந்திரங்களைப் பயன்படுத்தி அதனுள் சூட்சுமமான முறையில் கமராவினைப் பொருத்தி அட்டையின் இலக்கத்தினை தெரிந்து கொண்டு, அதன் பின்னர் அவ்விலக்கத்தைக் கொண்ட போலி அட்டையினை தயாரித்து அதன் மூலமே பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் வவுனியாவைச் சேர்ந்த இருவரும் வெளிநாட்டில் வசித்துவந்த இலங்கையர் ஒருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவருமாக மொத்தம் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



இவர்களிடமிருந்து வங்கி தன்னியக்க இயந்திரங்களுக்கு பொருத்தப்படும் உபகரணங்கள் உட்பட இலத்திரனியல் பொருட்கள், வங்கி அட்டைகள் பல மீட்கப்பட்டுள்ளன. இவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-250)

# விஷ ஊசி மருத்துவ பரிசோதனை; இதுவரை முன்னாள் போராளிகள் 193 பேர் பங்கேற்பு

விஷ ஊசி விவகாரம் தொடர்பில் பத்தாவது வாரமாகவும் நடைபெற்ற மருத்துவ பரிசோதனையில் இதுவரை 193 முன்னாள் போராளிகள் மட்டுமே பங்கேற்றுள்ளனர். மருத்துவ பரிசோதனையில் முன்னாள் போராளிகள் ஆர்வம் காட்டாத தன்மையே காணப்படுகின்றது என வடக்கு மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

விஷ ஊசி தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் வாரத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வடக்கு மாகாண வைத்தியசாலைகளில் மருத்துவ பரிசோதனை நடைபெற்று வருகின்றது. அதன்படி பத்தாவது வாரமாக மருத்துவ பரிசோதனை கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதுவரை மேற்கொண்ட மருத்துவ பரிசோதனைகளில் யாழ்.மாவட்டத்தில் 30 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 28 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 123 பேரும், வவுனியா மாவட்டத்தில் 7 பேரும், மன்னார் மாவட்டத்தில் 5 பேருமாக மொத்தம் 193 பேர் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளனர். இதில் செப்டெம்பர் 2 ஆம் திகதி 26 பேரும் 9 ஆம் திகதி 47 பேரும் 15, 16 ஆம் திகதிகளில் 22 பேரும் 23 ஆம் திகதி 30 பேரும் 30 ஆம் திகதி 21 பேரும் ஒக்ரோபர் 7 ஆம் திகதி 15 பேரும் 14 ஆம் திகதி 10 பேரும் 21 ஆம் திகதி 14 பேரும் 28 ஆம் திகதி 2 பேரும் இம் மாதம் 4 ஆம் திகதி 6 பேரும் மருத்துவ பரிசோதனையில் பங்கேற்றிருந்தனர். தொடர்ந்தும் வெள்ளிக்கிழமைகளில் இம் மருத்துவ பரிசோதனை இடம்பெற்று வருகின்ற போதும் மருத்துவ பரிசோதனையில் பங்கேற்பதில் முன்னாள் போராளிகள் பலரும் ஆர்வம் காட்டவில்லை என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)




# கைதிகளின் கொலை தொடர்பில் பொலிஸார் ஐவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

## சாட்சியப் பதிவுகள் இடம்பெற்றன

யாழ்.சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் வைத்து கடந்த 2011ம் ஆண்டு சந்தேக நபர் ஒருவரை சித்திரவதை செய்து கொலை செய்த குற்றச்சாட்டுடன் தொடர்புபட்ட ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்களையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதுடன், நேற்றைய தினம் குறித்த சம்பவம் தொடர்பிலான சாட்சி பதிவுகள் இடம்பெற்றுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது. கடந்த 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் திகதி கொள்ளைச்சம்பவத்துடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டில் ஐந்து இளைஞர்களை கைது செய்த யாழ்.சுன்னாகம் பொலிஸார் இவர்கள் மீது மேற்கொண்ட சித்திரவதை காரணமாக புன்னாலைக்கட்டுவன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிறிஸ்கந்தராஜா சுமனன் என்ற இளைஞர் கடந்த 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி உயிரிழந்துள்ள நிலையில் இவரது சடலத்தை கிளிநொச்சி இரணைமடுக்குளத்தில் வீசிவிட்டு குறித்த இளைஞர் தப்பியோடி குளத்தில் குதித்து தற்கொலை செய்து கொண்டதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் கடந்த ஜூலை மாதம் 25ஆம் திகதி குறித்த வழக்கு மல்லாகம் நீதவான் ஏ.யூட்சன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது குற்றம் சாட்டப்பட்ட ஏனைய இளைஞர்கள் மன்றில் ஆஜராகி பரபரப்பு வாக்கு மூலம் ஒன்றினை வழங்கியிருந்தனர்.

எங்கள் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி எங்களை கைது செய்த சுன்னாகம் பொலிஸார் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து அடித்து மின்சாரம் பாய்ச்சி சித்திரவதைக்குட்படுத்தினர். இந்த சித்திரவதையின் காரணமாக எமது நண்பனான சுமனன் என்பவர் இறந்து விட்டார் என வாக்குமூலம் வழங்கியிருந்தனர்.

உயிரிழந்த இளைஞரின் சடலத்தை இரணைமடுக்குளத்தில் வீசிவிட்டு அவர் தப்பியோடி இரணைமடுக்குளத்தில் குதித்து தற்கொலை செய்து கொண்டதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து சித்திரவதை மற்றும் கொலைக்குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட எட்டு பொலிஸாரையும் கைது செய்யுமாறு மல்லாகம் நீதவான் ஏ.யூட்சன் உத்தரவிட்டுள்ளதுடன் அத்துடன் இதில் ஐந்து பேருக்கு எதிரான வழக்கு சடலம் மீட்கப்பட்ட பிரதேசத்திற்குரிய கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் கொலைக்குற்றச்சாட்டுவழக்குப் பதிவு செய்யவும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆலோசனை வழங்கியிருந்தது.

இதனடிப்படையில் கடந்த 27.09.2016 கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நடைபெற்ற கொலைக்குற்றச்சாட்டு வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஐந்து பொலிஸாரையும் உடனடியாக கைது செய்து மன்றில் முன்னிலைப்படுத்துமாறும் இவர்களது வெளிநாட்டு பயணங்களை தடைசெய்யுமாறும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

24.10.2016 குறித்த கொலைக் குற்றச்சாட்டுடன் தொடர்புபட்ட ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்களையும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு நான்காவது சந்தேக நபருக்கு தமிழிலும் ஏனைய 4பேருக்கு சிங்களத்திலும் குற்றச்சாட்டு பத்திரம் வாசித்துக் காட்டப்பட்டதுடன் ஒன்று தொடக்கம் 6 வரையான சாட்சிகளுக்கு அழைப்புக்கட்டளை அனுப்புமாறும் குற்றப்புலனாய்வுப்பிரிவு பொலிஸாருக்கு கட்டளையிட்டதுடன் குறித்த ஐந்து சந்தேக நபர்களான பொலிஸாரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.(2-15)




வவுனியா மாவட்ட சமூக சேவைகள் திணைக்களம், மாவட்ட முதியோர் சங்கம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த 'மகிழ்வோர் மன்றம்' எனும் தொனிப் பொருளில் சர்வதேச முதியோர் தின நிகழ்வுகள் வவுனியாவில் நேற்று இரு கட்டங்களாக நடைபெற்ற போது... (படங்கள்:- குருமன்காடு செய்தியாளர்)

# 50 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்பு பணப்பரிசில்கள் வழங்கல்

கிளிநொச்சியில் சிறப்பு பொலிஸ் உத்தியோகத்தராக தர்மபுரம் பொலிஸ் நிலையைப் பொறுப்பதிகாரி தெரிவானார். கிளிநொச்சிப் பொலிஸாரின் கடமைக்கான ஊக்குவிப்புப் பரிசு வழங்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது.

காலை ஒன்பது மணியளவில் ஆரம்பமாகிய இந் நிகழ்வில் கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிகவும் சிறப்பாக செயற்பட்ட மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளை தடுத்தமை தொடர்பாக பொலிஸ் நிலையங்களில் பதியப்பட்ட வழக்குப் பதிவுகளின் அடிப்படையில் 50 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு நேற்று ஊக்குவிப்புப் பரிசில்களாக பணப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.



தெரிவு செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களில் மிகவும் சிறப்பாக செயற்பட்டு முதல்நிலையில் உள்ள தர்மபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம் சத்துரங்கவுக்கு அறுபதாயிரம் ரூபாய்க்கு மேலான பணத் தொகை பரிசில்களாக வழங்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி முல்லைத்தீவிற்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்ன தெரிவித்தார்.

இந் நிகழ்வில் கிளிநொச்சி முல்லைத்தீவிற்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்ன, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பாலித்த சிறி ஆர்.சிறிவர்த்தன, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரோசான்ராஜபக்ஷ, தலைமைப் பொலிஸ் அதிகாரி ஜெசாந்த டி சில்வா, கரைச்சிப் பிரதேச செயலாளர் நாகேஸ்வரன், பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-312)

# விடுதி வசதி அமையுமாகில் அதிகமான மாணவர்கள் கற்கும் வசதி ஏற்படும்

## வவுனியா தொழில்நுட்பக்கல்லூரி அதிபர் தெரிவிப்பு

வவுனியா தொழில்நுட்பக்கல்லூரிக்கு விடுதி வசதி அமையுமாக இருந்தால் அதிகளவான மாணவர்களும் கற்கும் வசதி ஏற்படும் என வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் ஆ.நற்குனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்பக்கல்லூரியில் புதிய மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பாக மேலும் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த வருடம் 645 மாணவர்கள் எமது தொழில்நுட்பக் கல்லூரியில் பதிவை மேற்கொண்டிருந்தனர். இவர்களில் 500 மாணவர்களே பரீட்சையில் தோற்றவுள்ளனர். 145 மாணவர்கள் இடைவிலகிவிட்டனர். இடைவிலகியவர்கள் தூர இடங்களில் இருந்து வருவதனால் போக்குவரத்து பிரச்சினைகளை எதிர்கொள்வதுடன் தங்குமிடங்களுக்கும் அதிகளவான நிதியை செலவிடவேண்டியேற்படுகின்றது.

எனவே எமது தொழில்நுட்பக்கல்லூரியில் விடுதி வசதி இருக்குமாயின் அதிகளவான மாணவர்கள் தங்கி நின்று கற்கக்கூடியதாக இருக்கும் என்பதுடன் இடைவிலகலும் குறைவாகும்.

இந் நிலையில் எதிர்வரும் 21 ஆம்திகதி முடிவுத் திகதியிடப்பட்டு 24 பாடநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவற்றில் முழு நேர பயிற்சி நெறிகள் இலவசமாக கற்பிக்கப்படும் என்பதுடன் அவர்களுக்கான பயண பருவச்சீட்டுகளும் ஆயிரம் ரூபா ஊக்குவிப்பு பணமும் வழங்கப்படவுள்ளது.

எனவே பாடசாலை கல்வியை நிறைவு செய்த 17 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் விண்ணப்பித்து சிறந்த கற்றல் செயற்பாடுகளில் இணைந்துகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (2-250)

# முதியோர்களுக்கு பேருந்து ஆசனங்கள் ஒதுக்கப்பட்டு ஸ்டிக்கர்கள் ஒட்டும் நிகழ்வு

## வவுனியாவில் நேற்று நடைபெற்றது

(குருமன்காடு)

வவுனியாவில் சர்வதேச முதியோர் தின நிகழ்வுகள் நேற்று மகிழ்வோர் மன்றம் என்னும் தொனிப் பொருளில் வவுனியா மாவட்ட சமூக சேவைகள் திணைக்களம் மாவட்ட முதியோர் சங்கம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த நிகழ்வு இரண்டு கட்டங்களாக நடைபெற்றன.

இதில் வவுனியா பிரதான பேருந்து நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வைத் தொடர்ந்து முதியோர்களுக்கான பேருந்து ஆசனங்களை ஒதுக்கி அதற்கு ஸ்டிக்கர் ஒட்டும் நிகழ்வு இடம் பெற்றன. அதனைத் தொடர்ந்து பேருந்து நிலையத்தில் இருந்து முதியோர் தின விழிப்புணர்வை ஏற்படுத்தும் பேரணி வவுனியா நகரம் ஊடாக நகரசபை கலாசார மண்டபத்தை சென்றடைந்து அங்கு அரங்க நிகழ்வுகள் முதியோர்கள், இளைஞர், யுவதிகளின் பங்களிப்புடன் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.எஸ்.வாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ம.தியாகராசா, செ.மயூரன், அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ப.சத்தியசீலன், மாவட்ட உதவி தேர்தல் அத்தியட்சகர், கல்வியியற்கல்லூரி மாணவர்கள், விவசாய கல்லூரி மாணவர்கள், முதியோர்கள், இளைஞர், யுவதிகள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# சாரணியத்தின் வழிகாட்டலில் இளைஞர்கள் வாழ்வியல் சமூக பண்புகளுடன் வளர்கின்றனர்

## திரிசாரணர் ஒன்றுகூடல் நிகழ்வில் வடக்கு போக்குவரத்து அமைச்சர்



தேசிய ரீதியிலான 32 ஆவது திரிசாரணர் ஒன்றுகூடல் இவ்வருடம் மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்றது. குறித்த ஒன்றுகூடலானது கடந்த 4ஆம் திகதி ஆரம்பித்து மூன்று நாட்கள் தலைமன்னார் வீதியில் அமைந்துள்ள டிலாசால் சிறுவர் வளாகத்தில் நடைபெற்றது. இதில் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த திரிசாரணர்கள் பங்குபற்றி இருந்தனர். அவ் ஒன்றுகூடலின் இறுதிநாள் நிகழ்வு கடந்த 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அந்நிகழ்வில் வடக்கு அமைச்சர் பா.டெனிஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக டிலாசால் சிறுவர் வளாக இயக்குநர் அருட் சகோதரர் நெல்சன் , இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதம ஆணையாளர், ஆசிய பசுபிக் பிராந்திய இலங்கைப் பிரதிநிதி, தலைமைச் செயலக ஆணையாளர்கள், மாவட்ட ஆணையாளர்கள், குறிப்பாக மன்னார் மாவட்ட ஆணையாளர் அருட்சகோதரர் விஜயதாசன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் திரிசாரணர்களுக்கான உயரிய விருதான பேடன் பவுல் விருது பெற்றவர்களுக்கு சின்னம் சூட்டும் வைபவமும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன் கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

அங்கு சாரணர்கள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் பா.டெனிஸ்வரன், குறித்த 32 ஆவது தேசிய திரிசாரணர் ஒன்றுகூடல் முதன்முறையாக வடக்கு மாகாணத்தில் மன்னார் மாவட்டத்தில் நடைபெறுகின்றது. சாரணியத்தின் ஸ்தாபகராகிய தந்தை பேடன் பவல் அவர்களின் இளைஞர்களுக்கான வழிகாட்டல் மிகவும் பாராட்டத்தக்கது. சமூகத்துக்கு மிகவும் இன்றியமையாதது. இளைஞர்களே நாட்டின் முதுகெலும்பு எனவும் சாரணியத்தின் வழிகாட்டலில் இளைஞர்கள் சமூகத்துக்கு தேவையான பண்புகளுடன் வளர்வதாகவும் தெரிவித்தார். நாட்டுக்கும் சேவை செய்வதை தாரகமந்திரமாக கொண்ட சாரணியம் இளைஞர்களின் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிப்பதோடு இவ்வாறு வளர்க்கப்படும் இளைஞர்களே சமூக, பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு ஆற்றுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

மேலும் இனங்கள் மற்றும் சமூகங்களுக்கு இடையிலான ஒற்றுமை, புரிந்துணர்வு மற்றும் மனிதநேயம் இதன்மூலம் கட்டியெழுப்பப்படுவதாகவும் தெரிவித்ததோடு இப்பண்புகளோடு திரிசாரணர்கள் சமூகத்தை கட்டியெழுப்ப எப்பொழுதும் உதவி செய்ய வேண்டும் எனவும் அழைப்பு விடுத்தார். (2-15)

# 70 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் "சுற்றாடல் நேயம்மிக்க மாதிரி கிராம வேலைத்திட்டம்"

## ஒட்டறுத்தகுளம் கிராமத்தில் முன்னெடுப்பு

(மல்லாவி)

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தினால் நாடு தழுவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் சுற்றாடல் நேயம்மிக்க மாதிரி கிராம வேலைத்திட்டம் எனும் செயல் திட்டத்தை முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள ஒட்டறுத்தகுளம் கிராமத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு 70இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுவேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் இ.ரமேஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மேற்படி மாதிரிக்கிராம வேலைத்திட்டமானது 2016-2017 ஆகிய இரு ஆண்டுகளுக்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

நடப்பாண்டின் வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு 70 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதியைக் கொண்டு ஒட்டறுத்தகுளம் கிராமத்தில் வசிக்கும் 150 குடும்பங்களின் வாழ்வாதார தொழில் முயற்சிகள், கைத்தொழில் முயற்சிகள், விவசாய நடவடிக்கைகள், வீட்டுத் திருத்தங்கள், முன்பள்ளி புனரமைப்புக்கள், சிறு வீதித்திருத்தங்கள் ஆகிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றது.

இதில் வீதித் திருத்தத்தில் சின்ன ஐயம்பெருமாள் குளத்தின் 800 மீற்றர் வீதி, வடகாடு குடியிருப்பு 3ஆம் வீதி 800மீற்றர், புனரமைப்பு, பேரம்பு விநாயகர் பின்வீதி 1000 மீற்றர் புனரமைப்பு என்பன இடம்பெறவுள்ளன.

அத்துடன் வடகாடு குடியிருப்பில் அமைந்துள்ள முன்பள்ளியின் புனரமைப்பு வேலைகளுக்காக 3இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படிஅனைத்துவேலைகளும் இவ்வருட இறுதிக்குள் நிறைவு செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




# மாவட்ட மட்ட இந்து மாமன்ற குழுவை அமைப்பதற்கு தீர்மானம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்து மாமன்றம் இல்லாமை தொடர்ந்து குறைபாடாக உள்ளது. இன்றைய சமூகத்தின் போக்கில் சமயம் சார்ந்த செயற்பாடுகளின் அவசியத் தேவையை கருத்தில் கொண்டு பிரதேச செயலகங்கள் மட்டத்தில் இந்து மாமன்ற குழுக்களை அமைக்கும் செயற்பாடு வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசாவால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே மாந்தை கிழக்கு துணுக்காய் பிரதேச செயலக மட்டத்தில் பிரதேச ரீதியாக குழுக்கள் அமைக்கப்பட்ட நிலையில் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலகங்களில் அந்தப் பிரதேச செயலகங்களில் கோயில் சார்ந்த நிர்வாகத்தினரை ஒன்றுகூட்டி குழுக்களும் அமைக்கப்பட்டது.

தொடர்ந்து பிரதேச செயலக மட்ட குழுக்களை ஒன்றுகூட்டி மாவட்டமட்ட இந்துமாமன்ற குழுவை அமைப்பதுஎனதீர்மானிக்கப்பட்டுள்ளது.(2-281)

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு





(பரந்தன்)

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கரைச்சிப் பிரதேச சபை பொதுநூலகத்தினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி ஈட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் கரைச்சிப் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நடைபெற்று முடிந்த போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில்வடக்குமாகாண சபை உறுப்பினர் தவநாதன், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிரபாகரன், கரைச்சிப் பிரதேச செயலாளர் கம்சநாதன், கரைச்சிப் பிரதேச சபை உத்தியோகத்தர்கள், மாணவர்கள், மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-312)

# கிரவல்மண் குவிப்பு; பயணிக்க முடியாதவாறு இடையூறு

## செப்பனிட்டுத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை

(மல்லாவி)



நெடுங்கேணி மாறாலிப்பை பருசங்குளம் வீதியில் மக்கள் போக்குவரத்து செய்ய முடியாதவாறு கிரவல்மண் கும்பிகள் ஆங்காங்கே குவிக்கப்பட்டு இருப்பதால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக பல தரப்பினரும் குற்றம்சாட்டுகின்றனர்.

மாறாலிப்பையிலிருந்து பருசங்குளம் செல்லும் பிரதான் 2 கிலோமீற்றர் வீதியானது குன்றும் குழியுமாக காணப்பட்ட போதிலும் இது தொடர்பாக பிரதேச மக்கள் வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு முறையிட்ட வேளையில் இது தொடர்பான அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாத காலமாகியும் இதற்கான வேலைகள் முடிவுறுத்தப்படாத நிலையில் பிரதேச சபையினால் வீதிக்கு குறுக்காக கிரவல்கள் பறிக்கப்பட்ட நிலையில் மக்கள் போக்குவரத்துகள் செய்ய முடியாத நிலைக்கு காணப்படுகின்றது.இக் கிராமத்திலிருந்து கர்ப்பிணித் தாய்மார்கள், முதியோர்கள், அவசர நோயாளர்கள் கூட வீதியூடாக துவிச்சக்கரவண்டியில் செல்ல முடியாத அளவுக்கு உள்ளது. இந்த செயல்களை அரசாங்க அதிகாரிகள் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் இது போன்ற தவறுகளை விடுவதனால் வவுனியா வடக்கு பிரதேச சபை இதனைக் கருத்திற் கொண்டு இவ்வீதியை இடையூகளின்றி விரைவாக செப்பனிட்டு தரும்படி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-15)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...


# நம்ம மூளையா இப்படி...!




நமது மூளைதான்மற்ற உறுப்புகளைவிடவும் பசி மிகுந்தது.அதாவது 20 சதவீதசக்தி மூளை செயற்பட செலவிடப்படுகிறது (குருதியில் கலந்திருக்கும் ஒட்சிசனில் 20 சதவீதம் கிரகிக்கிறது.) அதேவேளை நமது உடலின் எடையில் 2 சதவீதம் மட்டுமே மூளையின் எடை. இந்த கட்டுரையின் மூலம் மனித மூளை எவ்வாறு நினைவுகளை சேகரித்து வைக்கிறது. இது ஞாபக மறதி பற்றிய தெளிவான விளக்கங்களை பெற உதவும் என்று நினைக்கிறேன். மூளை நாம் பார்க்கும், கேட்கும்,உணரும் செயல்களை மூன்று நிகழ்வுகள் மூலம்சேமித்து கொள்கிறது.

பதியவைத்தல்:

இதுவே நிகழ்வுகளை நமது நினைவகத்தில் சேமித்தலில் முதல்செயல்ஆகும். அதாவது, நமது புலங்களான கண்.காது. மூக்கு. நாக்கு மற்றும் தோல் ஆகியவை நமது சுற்றுப் புறத்திலிருந்து தகவல்களை சேக





ரித்து மூளைக்கு அனுப்புகின்றன. உதாரணமாக நமது கண் ஒரு நபரை முதல் முறையாக காணும் பொழுது அவரின் நிறம். உருவம்.உயரம் போன்ற தகவல்களை மூளைக்கு அனுப்பும்.இந்த தகவல்கள் நமது மூளையில் நரம்பு கலங்கள் வழியாக கடத்தப்படும். இந்தத் தகவல்கள் ஒரு நரம்புக் கலத்தில் (Neuron) இருந்து மற்றொரு நரம்புக்கலம் வழியாக பாயும்.அதாவது இரு கலங்களிற்கிடையே யுள்ள இடைவெளியை கடக்கும்பொழுது ஒரு வகை வேதியல் மூலக்கூறு (Neurotransmitor) வெளிப்பட்டு இரு நரம்புக்கலங்களிடையே ஒரு இணைப்பை ஏற்படுத்தும். இந்த இணைப்பிற்கு சினப்ஸ் (Synapse) என்று பெயர். இந்த இணைப்பு உறுதியாகும் பொழுது அந்த நபரை பற்றிய நினைவு உங்கள் மூளையிலிருந்து அகலாது. இந்த இணைப்பு உறுதியாவது ஒருமுறை பார்த்தவுடன் நிகழ்ந்துவிடாது. ஒருநபரை மீண்டும் மீண்டும் பார்க்கும்பொழுது அவரை பற்றிய தகவல் நம் நரம்பு கலங்களில்உறுதியானஇணைப்பாக (Synapse) பதிய வைக்கப்படும். இந்த இணைப்பு எந்த அளவுக்கு உறுதி ஆகிறதோ அந்தளவுக்கு அந்த நபரை பற்றிய நினைவையும் நாம் மறக்காமல் இருப்போம்.

இது அனைத்துவிதமான நினைவுகளுக்கும் பொருந்தும். ஒவ்வொரு நினைவுகளுக்கும் ஒருதனி இணைப்பு (Synapse) நம் மூளையில் உருவாகும். இவ்வாறுதான் நாம் படிக்கும் பாடம், கேட்கும் விடயம், பார்க்கும் படம் அனைத்துமே நம் மூளையில் பதியப்படுகின்றது. மீண்டும் மீண்டும் படிப்பதன் மூலம் நாம் படித்த பாடமானது ஒரு உறுதியான நரம்புசெல் இணைப்பாக மாறிமறக்காமல் இருக்கிறது நினைவகங்கள்.

நினைவகங்கள் மூன்று வகைப்படும்

1.சென்ஸ்சரி




2.குறுங்கால நினைவகம்

3.நீண்டகால நினைவகம்

சென்ஸ்சரி நினைவுகள் மிகசொற்ப விநாடிகளே நினைவில் இருக்கும். உதாரணமாக: நாம் முதல் முறை கேட்கும் ஒருவரின் குரல் நமக்கு நினைவில் தங்காது.

குறுங்கால நினைவகம் எனும் இரண்டாம் வகை நினைவகம் 30 விநாடிகள் வரை நினைவில் இருக்கும். உதாரணமாக ஒருவரின் தொலைபேசி எண்ணை முதல் முறைகேட்கும் போது அந்த எண் உடனேயே எழுதிவைக்காவிடில் மறந்துவிடும்.

நீண்டகால நினைவகம், நம் மூளை நன்றாக செயற்படும் வரை நமக்கு மறக்காது. அதற்கு நாம் செய்ய வேண்டிய ஒன்று அந்த நிகழ்வுகளை நமக்குள் நினைவுபடுத்திக் கொண்டே இருப்பது. உதாரணமாக: உங்களில் பலருக்கு பல ஆண்டுகளுக்கு முன்பு வந்த அந்த முதல் காதல் இன்னும் நினைவிருக்கும். இதற்குக் காரணம் நீங்கள் ஒவ்வொருமுறை உங்கள் காதலன் அல்லது காதலி பற்றி நினைக்கும் போதும் உங்கள் மூளையில் காதல் பற்றிய இணைப்பு (Synapse) உறுதி ஆகும். நீங்கள் ஏதாவது ஒரு நினைவை பற்றி நினைவுகூராத போதும், நினைக்காத போதும் உங்கள் மூளையில் அந்த விடயத்திற்கான பிரேத்தியேக இணைப்பு விடுபடத் தொடங்கும். இதனால் தான் மறதி ஏற்படுகிறது.

### தகவல்களை நினைவு கூருதல்

நாம் ஒரு தகவலை நம் மூளையிலிருந்து நினைவு கூரும் பொழுது அந்தத் தகவலானது இந்த நரம்பு செல்களின் இணைப்பு வழியாக தான் ஞாபகத்திற்கு திருப்பி நினைவு கூருகிறோம். நான் முன்பே கூறியதைபோல இந்த இணைப்பு விடுபடும் போது ஞாபகப்படுத்துதல் சிரமமாகும் இதுவே மறதியின் காரணம்.

இந்த மறதியை தவிர்க்க நாம் மூளையில் சேகரிக்கும் தகவல்களை ஆழமாக பதிய வைக்கவேண்டும். அதாவது ஒலிகளைக் கேட்கும் போது அதைக் கவனமாக கேட்டு மூளையில் பதியவைக்க வேண்டும். மேலும் அந்த தகவல்களை நமக்குள் சொல்லி பார்த்துக் கொள்வதால் அந்த தகவலுக்கான இணைப்பு நம் நரம்பு செல்களில் உறுதியாகி நமக்கு எளிதில் ஞாபகப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

### முதுமையும் மறதியும்

மனித மூளையானது சுமாராக 100 பில்லியன் வரையான நரம்புகலங்களை கொண்டது. நமக்கு 3 வயது ஆகும் போதுதான் அந்தக்கலங்கள் முழு வளர்ச்சி அடையும். இதனால் தான் நமக்கு 3 வயதிற்கு முந்திய ஞாபகங்களை நினைவுபடுத்த முடியவில்லை. 3 வயதில் தான் நாம் அதிக எண்ணிக்கையிலான நரம்புக் கலங்களை கொண்டிருக்கிறோம். 3 வயது குழந்தைக்கு நாற்பது மொழிகள் கற்றுக்கொள்ளும் திறன் இருக்கிறது என உளவியல் ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன. அதுவே, இதற்கு காரணம். நாம் இருபது வயதுகளை கடக்கும் போது நமது மூளையில் உள்ள இந்த நரம்புச்செல்களின் இணைப்புகளின் எண்ணிக்கை குறைய தொடங்கி நாம் எண்பது வயதை எட்டும் போது சுமாராக இருபது சதவீத நரம்பு செல்களை, இணைப்புகளை இழந்திருபோம்.

இருப்பினும் நாம் மீதமுள்ள நரம்புசெல்களை நமது வாழ்நாளில் முழுவதுமாக பயன்படுத்துவது இல்லை. இந்த இருபது சதவீத செல்களின் இழப்பு ஒருகுறை ஆகாது. நம்மில்பலர் முதுமை வந்தபிறகு நமது நடவடிக்கைகளை குறைத்துக் கொள்கிறோம். நமது சிந்தனையையும் குறைத்துக் கொள்கிறோம். இதனால்நாம்நினைவு கூராத விடயங்களுக்குரிய இணைப்புகள் நம் மூளை செல்களில் விடுபடுகின்றன. இதுவே மறதிக்கு முக்கிய காரணம். நம் முதுமையிலும் நம் மூளைக்கு சவாலான செயல்களை கொடுத்து கொண்டே இருந்தால் நம் மூளை முதுமையிலும் இளமையாக செயற்படும்.

### நினைவாற்றல்

பொதுவாக நினைவாற்றல் என்பது அனைவருக்கும் மிகப்பெரிய தேவைப்பாடு. நினைவாற்றல் சுமாராக இருப்பவர்கள்கூட நினைவாற்றலை வளர்த்துக்கொள்ள மூன்று முக்கியமான வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

1. கவனமான பார்வை
2. ஆர்வம்,அக்கறை
3. புதிதாகச் சிந்தித்தல்

இந்த மூன்றிற்குமே சிறப்பான பயிற்சிதேவை. அந்தப் பயிற்சிக்காக எந்தப் பயிற்சிக் கூடத்திற்கும் செல்ல வேண்டியதில்லை. நமக்கு நாமே பயிற்சி அளித்துக் கொள்ளலாம். அதற்கான சில பயிற்சி முறைகளைப் பார்ப்போம். முதலாவதாக ஒரு பயிற்சி. ஒன்றிலிருந்து நூறு வரை எண்ணுங்கள். பிறகு 2,4,6...என்று இரண்டு இரண்டாகஎண்ணுங்கள். பிறகு 100 லிருந்து தலைகீழாக, 100,98,96... என்று இரண்டு இரண்டாகக் குறைத்து எண்ணுங்கள். பிறகு நான்கு நான்காகக் குறையுங்கள். இப்படியே 5,6,7... வரை தாவித் தாவி குறைத்து எண்ணுங்கள். இப்படி ஏழு ஏழாக குறைத்து எண்ணக் கற்றுக் கொண்டீர்கள் என்றால், உங்களுடைய நினைவுத்திறன் நல்ல அளவில் வளர்ந்திருக்கிறது என்று அர்த்தம். இப்போது ஓர் ஆங்கிலப் பத்திரிகையை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் ஒரு பத்தியில் எஸ். எழுத்தை யெல்லாம் எண்ணிக் குறித்துக் கொள்ளுங்கள். அடுத்து இரண்டு மூன்று பத்திகளில் உள்ள ஏ எழுத்தையெல்லாம் எண்ணிக் குறித்துக் கொள்ளுங்கள். இப்போது மீண்டும் ஒரு முறை திருப்பிப் பார்த்தீர்கள் என்றால், எத்தனை எஸ் அல்லது ஏ ஐ எண்ணாமல் விட்டிருப்பீர்கள் என்று தெரியவரும். அதை வைத்து உங்கள் நினைவுத் திறனின் அளவை நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

புதிய சிந்தனை மூலமும் நினைவுத் திறனை வெகுவாக வளர்த்துக்கொள்ளலாம். தொலைக்காட்சியில் வரும் விளம்பரங்களைப் பாருங்கள். அந்த விளம்பரம் பற்றிக் கொஞ்சம் ஆராய்ச்சி செய்யுங்கள். வேறு எந்த மாதிரி இந்த விளம்பரம் இருந்திருந்தால் இதை விட நன்றாக இருந்திருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள். சிந்திக்கச் சிந்திக்க மூளையின் சிந்திக்கும் ஆற்றல் வளர்வதோடு நினைவாற்றலும் பெருகும். இதே போன்று இன்னொரு பயிற்சி. உங்கள் நெற்றியை கற்பனையாக நீங்களே 6 அறைகளாகப் பிரித்துக் கொள்ளுங்கள். ஒரு அறையை இழுங்கள். அதில் மறுநாள் 9 மணி புரோகிராம் என்று எழுதிப் போடுங்கள். (உதாரணமாக: 9 மணிக்கு சிவாவை சந்திக்க வேண்டும் என்று கற்பனையாக எழுதிப் போடுங்கள்). பிறகு அந்த அறையை இழுத்து மூடுங்கள். இதே போன்று இரண்டாவது அறையைத் திறந்து இன்னொரு வேலையை எழுதிப் போடுங்கள்.

அதேபோன்று அடுத்தடுத்த நான்கு அறைகளும் இப்படிச் செய்து விட்டால் இரவு படுக்கையில் படுத்ததும் உங்களுக்கே ஆச்சரியமாக இருக்கும். இந்த 6 புரோகிராம்களும் அடுத்தடுத்து உங்களை அறியாமலே உங்கள் மனதில் தோன்றும்.

இன்னும்இதே போன்று நீங்கள் கூட புதிய புதிய முறைகளைக் கையாண்டு உங்கள் நினைவாற்றலை வளர்த்துக் கொள்ளலாம். புத்தகங்களைப் படிப்பது. காலையில் ஐந்து மணிக்கெல்லாம் எழுந்திருந்து அன்றைய நிகழ்ச்சிகளைத் திட்டமிடுவது. அப்பியாசங்கள் செய்வது இதனாலெல்லாம் கூட உங்கள் சிந்திக்கும் திறனையும், நினைவுத்திறனையும் வளர்த்துக் கொண்டே போகலாம்.

உடலின் ஒவ்வொரு உறுப்பும் ஓர் இயந்திரம் அதிலும் இதயமும், மூளையும் ஓய்வில்லாத இயந்திரங்கள்.

இதயம் ஓய்வு எடுத்துக் கொண்டால் வாழ்க்கை நின்று விடும். மூளைக்கு ஓய்வு கொடுத்தால் அது துருப்பிடித்துப் போய் ஒன்றுக்கும் பயனில்லாமல் வாழ்க்கையின் முன்னேற்றம் நின்று விடும். ஆகையால் எந்த நேரமும் மூளைக்கு ஏதேனும் வேலை கொடுத்துக் கொண்டே இருங்கள்.

நினைவாற்றலை மேம்படுத்துங்கள். நினைத்ததைச் சாதியுங்கள்.

வாசியுங்கள்... பார்ப்போம்...

7H15 M355463 53RV35 70 PR0V3 H0W 0UR
M1ND5 C4N D0 4M4Z1N6 7H1N65!
1MPR3551V3 7H1N65! 1N 7H3 B361NN1NG
17 W45 H4RD BU7 N0W, 0N 7H15 L1N3
Y0UR M1ND 15 R34D1N6 17
4U70M471C411Y W17H 0UT 3V3N
7H1NK1N6 4B0U7 17, B3 PR0UD! 0N1Y
C3R741N P30PL3 C4N R34D 7H15.!!

காலிங்கராசா ஹரிச்சந்திரா
தொழில்நுட்பஅலுவலர்,
மீன்பிடியியல் விஞ்ஞானதுறை,விஞ்ஞானபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 173

விமானங்கள் மற்றும் கப்பல்கள் மர்மமான முறையில் காணாமல் போகும் பெர்முடா முக்கோணம் (Bermuda triangle) எந்தச் சமுத்திரத்தில் காணப்படுகிறது?

புதிர் இலக்கம் 172
பிரசுரிப்பில் ஏற்பட்ட தவறால் எடுத்துக்கொள்ளப்படவில்லை. தவறுக்கு வருந்துகிறோம்.

புதிர் 173 இற்கான விடைகளை 21.11.2016 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கலாநிதி.(செல்வி) ஷிவதர்சினி இராசலிங்கம்
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இரசாயனவியற்றுறை
யாழ்.பல்கலைக்கழகம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

### புதிர் 172 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி


கே. இராஜகோபால்
அடைக்கலம்தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி
வட்டுக்கோட்டை

**புதிர் 172க்கான கேள்வியும் விடையும்:**

2016 ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசை வென்றவர் யார்?
கொலம்பிய ஜனாதிபதி Juan Manuel Santos

### யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 173

சரியான விடை:-..............................
முழுப்பெயர்:-..............................
முகவரி:-..............................
தொ.பே. இல:..............................
கையொப்பம்:..............................




# கோப் அறிக்கை தொடர்பில் விசாரணை செய்ய வேண்டும்

## அரசிடம் ஜே.வி.பி. வலியுறுத்து



கோப் குழுவிற்கு சட்ட நடவடிக்கை எடுக்க அதிகாரம் இல்லை எனினும் வெளியிடப்பட்ட அறிக்கை நீதியானது. அவ்வறிக்கையினைக் கொண்டு மத்திய வங்கி நிதி மோசடி தொடர்பில் அரசின் அதிகாரத்தால் முறையான விசாரணை ஆரம்பிக்கப்படல் வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்திய வங்கியில் இடம்பெற்ற நிதி மோசடி குறித்து அண்மையில் கோப் அறிக்கை வெளியிடப்பட்டு அதன் மூலம் ஊழல் மோசடிகள் தொடர்பில் தெளிவுபடுத்தியிருந்தும் இதுவரையில் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இருப்பினும் குறித்த கோப் அறிக்கை வெளிவந்த நாட்களில் இருந்து அரச தரப்பு மற்றும் எதிர்த்தரப்பினர் ஊழலுடன் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்படவேண்டும் என தங்களுக்குள் வாத விவாதங்களை முன்வைத்தவண்ணமுள்ளனர்.

இந்நிலையில் மத்திய வங்கியில் மிகப்பெரிய நிதி மோசடி இடம்பெற்றுள்ளது. ஆகவே குற்றம் இழைத்தவர்கள் விரைவில் கைது செய்யப்படவேண்டுமென அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் ஆளும் தரப்பினரே கோஷம் எழுப்புவதனூடாக யாரை மேற்கோள் காட்ட முற்படுகின்றனர் என்பது கேலிக்கூத்தாக இருக்கின்றது.

மேலும் கோப் அறிக்கை வெளிவந்தும் இதுவரையில் இவ்விடயம் தொடர்பில் பிரதமர் தொடர்ந்தும் மௌனம் சாதித்தே வருகின்றார். இதன் மூலம் அவர் அர்ஜுன் மகேந்திரனை பாதுகாக்க முன்னிற்பது தெளிவாகின்றது. இந்நிலையில் பிரதமரின் பெயரையும் கோப் அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்க வேண்டுமென கூட்டு எதிரணியினர் வலியுறுத்துவது வேடிக்கையாக இருக்கின்றது.


ஏனெனில் கோப் அறிக்கைக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் இல்லை. பிரதமரின் பெயர் குறிப்பிடப்படுமாக இருந்தால் குறித்த அறிக்கை நீதிமன்ற விசாரணைக்கு முரணாக அமைந்துவிடும். சுயாதீனமாக செயற்படும் கோப் குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கை நீதியானதாக தயாரிக்கப்பட்டுள்ளது. ஆகவே இவ்வறிக்கையின் அடிப்படையில் அரசாங்கத்தின் அதிகாரத்தால் நடவடிக்கை எடுக்க முடியும்.

எனவே காலதாமதமின்றி விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# சிறைக்குள் பேரறிவு

07

## 25 வருடங்கள் சிறைப்பட்டு வலிகளைச் சுமந்தவனின் தொடர்...



"தூக்கிலிடுபவர் எனது கழுத்தில் சுருக்குக் கயிற்றினை இறுக்கும் அந்த சமயத்தில் இயற்கை அன்னையிடம் வேண்டுவேன்.

ஓ... இயற்கையே!

குற்றமற்ற இந்த மனிதனை கொல்லத் துடிக்கும் அத்தனை மனிதர்களையும் வரலாறு மன்னிக்கட்டும்."

...யதார்த்தத்தில் நீதி என்னவாக இருக்கிறது என்பதை பெரும்பாலும் யாரும் உய்த்துணர முற்படுவதில்லை. நிறுவப்பட்டுவிட்ட ஓர் அமைப்பு முறையைக் கேள்வி எழுப்ப எவருக்கும் அச்சம் கலந்த தயக்கம் இருக்கவே செய்கிறது.

26.08.2011 அன்று எம் மூவர் மரண தண்டனைக்கு நாள் குறிக்கப்பட்ட செய்தி வெளியான பின்பு 02.09.2011 அன்று 'The Asian Age' இதழில், கே:டி.தாமஸ் "Death Pen alty is nothing but brutal murder by state" எனத் தலைப்பிட்டு ஒரு கட்டுரை எழுதினார். அந்தக் கட்டுரையின் இறுதியில் 2000 ஆண்டுகளுக்கு முன்பு எதிர் உணர்ச்சி கொண்ட மக்களைத் திருப்திப்படுத்த நிரபராதியான 'இயேசு கிறிஸ்து' கொல்லப்பட்டார் எனவும அவருக்கு தண்டனை வழங்கிய நீதிபதியின் பெயர் 'பிலாத்து' எனவும் சொல்லி முடித்திருந்தார்.

இந்தக் கட்டுரையை வாசித்தவுடன் 07.09.2011 அன்று அவருக்கு ஒரு பதில் கடிதம் எழுதினேன். அதில் உளச்சான்றோடு அவர் எழுதிய கட்டுரைக்கு நன்றி தெரிவித்துவிட்டு, "உச்ச நீதிமன்றத் தீர்ப்பே இறுதியானது என அறிவுரை கூறும் பலருக்கும் தாங்கள் இந்தக் கட்டுரையின் மூலம் மிகச் சரியான பதில் தந்துள்ளீர்கள்" எனக் குறிப்பிட்டுவிட்டு, இறுதியில் கடிதத்தை இவ்வாறு முடித்தேன்...


"அய்யா, தூக்குமேடை மீது நான் நிறுத்தப்படும் அந்த நேரத்தில், தூக்கிலிடுபவர் எனது கழுத்தில் சுருக்குக் கயிற்றினை இறுக்கும் அந்த சமயத்தில் இயற்கை அன்னையிடம் வேண்டுவேன்.

ஓ... இயற்கையே!

குற்றமற்ற இந்த மனிதனை கொல்லத் துடிக்கும் அத்தனை மனிதர்களையும் வரலாறு மன்னிக்கட்டும்."

இதைக் குறிப்பிடக் காரணமிருக்கிறது. 'நீதிப் படுகொலை (Judicial massocre) என உச்ச நீதிமன்றத்தால் விமர்சிக்கப்பட்ட எமது வழக்கின் மேல்முறையீட்டு விசாரணையை எப்படி விசாரித்து முடித்தது என அறிய வேண்டாமா?

'தடா' சட்டப்படி உயர் நீதிமன்ற மேல்முறையீட்டு வாய்ப்புப் பறிக்கப்பட்டதால் உச்ச நீதிமன்றத்தின் நீதியரசர்கள் கே.டி. தாமஸ், வாத்வா, தகாத்ரி ஆகிய மூவர் அடங்கிய அமர்வின் விசாரணையே எங்களுக்கு இருந்த ஒரே வாய்ப்பு. குற்றவாளிகள் 25 பேரின் சார்பிலும் மூத்த சட்டத்தரணி என்.நடராசன், "ராஜீவ் கொலை வழக்கு 'தடா' சட்டப் பிரிவுகளின் கீழ் தண்டிக்கத்தக்க தீவிரவாதக் குற்றமல்ல. இது ஒரு



கொலை வழக்கு மட்டுமே" என வாதிட்டார். எதிர்வாதம் செய்ய முடியாத சூழலில் நீதிபதிகள் இதனை அப்படியே ஏற்றனர். பின்னர் நீதிமன்றத்துக்கு இரண்டு வாய்ப்புகள் மட்டுமே இருப்பதாகச் சட்ட உறுப்பினர்கள் கருதினர்.

முதலாவது வாய்ப்பு மீண்டும் கீழமை அல்லது உயர் நீதிமன்றத்துக்கு வழக்கை அனுப்பி குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் (CR.P.C.) விசாரிக்க உத்தரவிடுவது. இரண்டாவது வாய்ப்பு 'தடா' சட்டம் ஒரு வழக்கில் பொருந்தாது என முடிவுக்கு வந்துவிட்டால் 'தடா' ஒப்புதல் வாக்குமூலத்தைப் பயன்படுத்தி இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் (IPC) ஒருவரை தண்டிக்க முடியாது என Bilal ahmed Kallos Vs A.P. State (1997) 7 Sec 431 வழக்கில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு உள்ளதால் எங்கள் அனைவரையும் விடுதலை செய்வது. ஆனால், முற்றிலும் எதிர்பாராத நிலைப்பாட்டினை நீதிமன்றம் எடுத்தது.

அதாவது 'தடா' சட்டம் எங்கள் வழக்குக்குப் பொருந்தாது என்றாலும் 'தடா' வாக்குமூலத்தை முதன்மை ஆதாரமாகப் பயன்படுத்தித் தண்டிக்கலாம் எனக் கூறி முந்தைய தீர்ப்பை மாற்றி அமைத்தனர். அத்தோடு நிற்கவில்லை. ஏற்கனவே கல்பனாத் ராய் என்ற அரசியல் தலைவர் 'தடா' சட்டத்தின் கீழ் 10 ஆண்டுகள் தண்டனை பெற்ற நிலையில் அவரது மேல் முறையீட்டை விசாரித்த உச்ச நீதிமன்றம், ஒருவரது 'தடா' வாக்குமூலத்தை அந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட மற்றொருவருக்கு எதிரான ஆதாரமாகக் கொண்டு தண்டிக்கக்கூடாது எனக்கூறி அவரை விடுதலை செய்து உத்தரவிட்டது. (KALPANATH RAI Vs STATE THROUGH CBI) (1997) 8 (Sec 732). அந்தத் தீர்ப்பும் எங்கள் வழக்கில் மாற்றி அமைக்கப்பட்டது, திருத்தப்பட்டது.

எங்கள் வழக்கில் மாற்றியமைக்கப்பட்ட புதிய இரண்டு சட்ட நிலைப்பாடுகள்தான் எங்கள் வழக்கை வாழ்க்கையைத் தீர்மானித்தது. சின்னாபின்னமாக்கியது. உலகமே உற்று நோக்கும் வழக்கில் 26 பேரையும் விடுதலை செய்து விடுவதில் நீதிமன்றம் யோசித்திருக்கும் போலும். 'தடா' ஒப்புதல் வாக்குமூலம் என்ற ஆவணத்தின் ஆபத்துக் குறித்து அறிந்த நிலையில் அதனை எதிர்த்தும் அவற்றில் எவ்வாறு துன்புறுத்திக் கையொப்பம் பெற்றனர் என்பது குறித்தும் விளக்கி வழக்கின் ஒவ்வொரு நிலையிலும் நாங்கள் எழுத்துப்பூர்வமாக பதிவு செய்த முறையீடுகள் நீதிமன்றத்தின் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. தமது தீர்ப்பு பாரா 405இல் கீழ்க் கண்டவாறு நீதிபதிகள் கூறியுள்ளனர்.

(வலிகள் தொடரும்...)

# ஊடுருவல்; ஊரி இராணுவ முகாம் அருகே தீவிரவாதி சுட்டுக்கொலை



(ஜம்மு)

காஷ்மீர் பாரமுல்லா மாவட்டம் ஊரி பகுதியில் ஊடுருவ முயன்ற தீவிரவாதி சுட்டுக்கொல்லப்பட்டான்.

காஷ்மீரில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஊடுருவலில் ஈடுபட்டு நாசவேலையில் ஈடுபடுகிறார்கள். இதை பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தி முறியடித்து வருகிறார்கள்.

தீவிரவாதிகள் ஊடுருவலில் ஈடுபடுவதற்கு வசதியாக பாகிஸ்தான் படைகளும் எல்லையில் அத்துமீறலில் ஈடுபட்டு வருகிறது. அதையும் இராணுவம் முறியடித்து வருகிறது.

நேற்று அதிகாலை பாரமுல்லா மாவட்டம் ஊரி பகுதியில் தீவிரவாதிகள் ஊடுருவலில் ஈடுபட்டனர். இதையடுத்து பாதுகாப்புப் படையினர் உஷாரானார்கள்.

இரு தரப்புக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நீடித்தது.

இதில் ஒரு தீவிரவாதி சுட்டுக்கொல்லப்பட்டான். மற்றவர்கள் தாக்குப்பிடிக்க முடியாமல் திரும்பிச் சென்றுவிட்டனர். (இ-7)

## இராணுவ சீருடையில் வந்தோர்

# வெறியாட்டம்

(மொசூல்)

ஈராக்கிய மத்திய பொலிஸாரின் இராணுவ சீருடையில் வந்த குழுவினர், தெற்கு மொசூலிலுள்ள கிராமங்களில் வசித்த மக்களை சித்திரவதை செய்து கொலை செய்துள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சாட்டியுள்ளது.




ஷீரா மற்றும் Qayyarah உப மாவட்டங்களில் உள்ள கிராமங்களிலேயே இவ்வாறு மக்கள் கொலை செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த குழுவினர் ஈராக்கிய படையினரா அல்லது படையினரின் சீருடைகளைப் பயன்படுத்தி தீவிரவாதிகள் படுகொலை செய்தார்கள் என்பதில் சந்தேகம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆயினும் இந்த அறிக்கை தொடர்பில் ஈராக்கிய அதிகாரிகள் எவ்விதமான பதில்களையும் வெளியிடவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மொசூலை ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் இருந்து மீட்பதற்கான படை நடவடிக்கைகள் கடந்த மாதம் முதல் இடம்பெற்று வருகின்றன. (இ-7)

# பிரிட்டன் பிரதமர் தெரேசா மே சோமேஸ்வரரிடம் தரிசனம்





(பெங்களூர்)

இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பிரிட்டன் பிரதமர் தெரேசா மே பெங்களூரிலுள்ள பிரசித்தி பெற்ற கோயிலில் சுவாமி தரிசனம் செய்தார்.

பிரிட்டன் பிரதமர் தெரேசா மே 3 நாட்கள் சுற்றுப்பயணமாக கடந்த திங்கட்கிழமை இந்தியா வந்தார்.

அவருடன் 40 தொழில் அதிபர்கள் அடங்கிய குழுவும் வந்துள்ளது.

டில்லியில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இங்கிலாந்து பிரதமர் தெரேசா மே ஆகியோர் சந்தித்து வர்த்தகம் உட்பட பல்வேறு அம்சங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்த நிலையில் தனது இந்திய சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக இங்கிலாந்து பிரதமர் தெரேசா மே பெங்களூருக்கு வந்தார். பெங்களூர் விமான நிலையம் வந்த தெரேசா மேவை முதலமைச்சர் சித்தராமையா விமான நிலையத்தில் வரவேற்றார்.

இந்நிலையில் பெங்களூரின், ஹலசூருவில் உள்ள பிரபலமான சோமேஸ்வரா கோயிலுக்கு தெரேசா மே சுவாமி தரிசனம் செய்தார்.

அதனைத் தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட தெரேசா மே, சித்தராமையாவை சந்தித்து பேசினார். (இ-7)

# நாணயத்தாள்கள் உ.பியில் தீயிட்டு எரிப்பு

(பரேலி)



உத்தரப்பிரதேச மாநிலத்தில் 500 மற்றும் 1000 ரூபாய் நாணயத்தாள்கள் தீ வைத்து எரிக்கப்பட்டிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. உத்தரப்பிரதேசத்தின் பரேலியில் வீதியோரம் 500 மற்றும் 1000 ரூபாய் நாணயத்தாள்கள் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன. மூட்டை மூட்டையாக 500 மற்றும் 1000 ரூபாய் நாணயத்தாள்கள் கொண்டு வந்து எரிக்கப்பட்டிருப்பதை ஏராளமானோர் அதிர்ச்சியுடன் பார்த்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் எரிந்த ரூபாய் நாணயத்தாள்களின் சாம்பலையும் எரிந்த ரூபாய் நாணயத்தாள்களின் எஞ்சிய பகுதிகளையும் எடுத்துச் சென்றனர்.

தீ வைத்து எரிக்கப்பட்ட ரூபாய் பல ஆயிரம் கோடிகளை தாண்டும் என கூறப்படுகிறது. இந்த பணம் கறுப்புப் பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தை அப்பகுதி மக்கள் எழுப்பியுள்ளனர். இதனிடையே கான்பூரில் வர்த்தகர்கள் ரூபாய் நாணயத்தாள்களை வீதியில் வீசி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

500 மற்றும் 1000 ரூபாய் நாணயத்தாள்கள் செல்லாது என்று மத்திய அரசு அறிவித்திருப்பது அதிர்ச்சியளிப்பதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வணிகர்கள் தெரிவித்தனர். மாற்று ஏற்பாடு ஏதும் செய்யாமல் மத்திய அரசின் இந்த திடீர் அறிவிப்பு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்தனர். (இ-7)

# பிரதமர் மோடி ஜப்பான் பயணம்

மூன்று நாள் அரசு முறை பயணமாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று ஜப்பான் புறப்பட்டுச் சென்றார். அவரது இந்தப் பயணத்தில் இருநாடுகளுக்கு இடையே அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தாவதோடு வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒருங்கிணைந்து செயற்படுவது குறித்து பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என்று தெரியவருகிறது.

ஜப்பானில் 10-12 வரை நடைபெறவுள்ள வருடாந்த உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார். அங்கு இரு நாடுகளின் முக்கிய வர்த்தகத் தலைவர்களைச் சந்தித்து, தொழில் மற்றும் முதலீட்டு உறவை மேம்படுத்துவது தொடர்பாக விரிவாக பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவுக்குச் செல்லும் மோடி, அங்கு அந்நாட்டு மன்னர் அகிடிடோ, பிரதமர் ஷிண்டோ அபே ஆகியோரைச் சந்தித்துப் பேசுகிறார். பின்னர், அந்நாட்டுப் பிரதமர் அபேவுடன் புகழ்பெற்ற ஷிண்கன் சென் புல்லட் புகையிரதம் மூலம் கோபே நகருக்குப் பயணிக்கிறார். மேலும், அதிவேக புகையிரதம் உற்பத்தி செய்யும் கவாஸகி புகையிரத தொழிற்சாலை வளாகத்துக்கும் மோடி செல்கிறார்.

இந்தப் பயணத்தின் போது, அமெரிக்காவைச் சேர்ந்த அணுசக்தி நிறுவனங்கள் இந்தியாவில் தொழிற்சாலைகளை அமைக்கும் வகையில், இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

# நீரில் மூழ்கி உயிரிழந்த நடிகரின் சடலம் மீட்பு



படப்பிடிப்பின் போது நீர்த்தேக்கத்தில் மூழ்கி உயிரிழந்த 2 துணை நடிகர்களில் ஒருவரது உடல் மட்டும் நேற்று முன்தினம் புதன் கிழமை மீட்கப்பட்டது.

கர்நாடக மாநிலம்,ராம் நகர் திப்பகுண்டன ஹள்ளியில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் மாஸ்திகுடி திரைப்படத்தின் படப்பிடிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது நீர்த்தேக்கத்தில் ஹெலிகொப்டரிலிருந்து குதித்த வில்லன், நடிகர்கள் 2 பேர் நீரில் மூழ்கினர்.

3 நாட்களாக அவர்களைத் தேடும் பணியில் தேசிய பேரிடர் மீட்புப் படையினர், தீயணைப்புப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் உயிரிழந்த நிலையில் உதய் (வயது-32) என்பவரது உடல் மீட்கப்பட்டது.

இதையடுத்து, நீர்த்தேக்கத்தின் அருகிலேயே அவரது சடலம் பிரேத சோதனை நடத்தப்பட்டு உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ-7)

# ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்ட் ட்ரம்பிற்கு எதிராக பேரணி

## துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதால் அமெரிக்காவில் பரபரப்பு

(வோஷிங்டன்)

வோஷிங்டன் அருகே சியாட்டில் ட்ரம்பிற்கு எதிரான பேரணியில் துப்பாக்கிச் சூடு நடைபெற்றுள்ளது. துப்பாக்கிச் சூட்டில் 5 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள டொனால்ட் ட்ரம்பிற்கு எதிராக அமெரிக்கா முழுவதும் போராட்டங்கள் வெடித்துள்ளன.

ஜனாதிபதியாக அவரை ஏற்க முடியாது என்று அவரது எதிர்ப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். எதிர்பாராத டொனால்ட் ட்ரம்பின் வெற்றியைப் போலவே அவருக்கு அமெரிக்க மக்களிடம் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

சிகாகோ நகரில் ட்ரம்ப் டவர் மற்றும் ட்ரம்ப் ஹோட்டல் முன்பு போராட்டக்காரர்கள் ஏராளமானோர் திரண்டு ட்ரம்பிற்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்.

டிரம்ப் எங்களுக்கான ஜனாதிபதி அல்ல என்பது போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி போராட்டம் நடத்தினர். டிரம்பை கடுமையாக விமர்சிக்கும் பதாகைகளையும் அவர்கள் ஏந்தி நின்றனர்.

கலி போர்னியா மற்றும் வோஷிங்டன் மாகாணங்களிலும் போராட்டம் நடைபெற்றன.

சான்பிரான்சிஸ்கோவில் பாடசாலை மாணவர்கள் 1000இற்கும் மேற்பட்டோர் வகுப்புகளை புறக்கணித்து பேரணி நடத்தினர். இடல்பியா, நியூயோர்க் உள்ளிட்ட இடங்களிலும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

ஹிலாரி கிளின்டன் தான் வெற்றி பெறுவார் என்ற கருத்துக்கணிப்பை தவிடுபொடியாக்கி அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றுள்ளார். (இ-7)



## லண்டனில் டிராம் வண்டி விபத்தால் பயணிகள் 7பேர் பலி! 50பேர் காயம்



லண்டனில் தெற்குப் பகுதியில் உள்ள க்ராய்டான் பகுதியில் டிராம் வண்டி விபத்துக்குள்ளானது. சுரங்கப் பாதையில் ஏற்பட்ட இந்த விபத்தால் டிராமில் பயணம் செய்த 7 பயணிகள் பலியாகினர்.

50 பேர் படுகாயம் அடைந்தனர். 8 பேர் பலத்த காயம் அடைந்துள்ளதால் அவர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த டிராம் விபத்துக்குள்ளானது எவ்வாறு என்று புகையிரத விசாரணை ஆணையம் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகிறது. இந்த விபத்து தொடர்பாக டிராம் ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளார். இங்கிலாந்து பிரதமர் தெரேசா மே, லண்டன் மாநகர மேயர் சதிக் கான் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். (இ-7)

## ட்ரம்புடன் இணைந்து பணியாற்ற உலக வர்த்தக அமைப்பு தயார்!

(ஜெனிவா)

அமெரிக்க ஜனாதிப்தித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்புடன் இணைந்து பணியாற்ற தயார் என்று உலக வர்த்த அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், ஆளும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹிலாரியே வெற்றி பெறுவார் என்று பரவலாக பேசப்பட்ட நிலையில், கருத்துக்கணிப்புக்களை பொய்யாக்கி குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றுள்ளார்.

வெற்றி வாகை சூடியுள்ள ட்ரம்புக்கு வாழ்த்துக்கள் குவிந்தவண்ணம் உள்ளன. பல்வேறு சர்வதேச அரசியல் தலைவர்கள் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.



இந்நிலையில், புதிய ஜனாதிபதியாக பதவி வகிக்க உள்ள டொனால்ட் ட்ரம்புடன் இணைந்து பணியாற்றத் தயார் என்று உலக வர்த்தக அமைப்பின் தலைவர் ராபர்ட் அஜிவெதோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து ராபர்ட் தனது டுவிட்டர் பக்கத்தில், "ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்பிற்கு வாழ்த்துக்கள். அவர் தலைமையிலான புதிய நிர்வாகத்துடன் உலக வர்த்தக அமைப்பு இணைந்து பணியாற்ற தயாராக உள்ளது" என்று தெரிவித்தார்.

முன்னதாக தனது ஓராண்டு பிரசாரத்தின் பல்வேறு இடங்களில் உலக வர்த்தக அமைப்பை ட்ரம்ப் கடுமையாக விமர்சித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஐ.எஸ்.தீவிரவாதிகள் கட்டுப்பாட்டிலிருந்த பல கட்டடங்கள் லிபியப் படையினர் வசம்



ஐ.எஸ் தீவிரவாதிகளின் பிடியில் இருந்து சிட்ரே நகரை முழுமையாக விடுவிக்கும் தீவிர படை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள லிபியப் படையினர், நேற்று முன்தினம் புதன்கிழமை Ghiza Bahriya பகுதியில் உள்ள மேலும் பல கட்டடங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நகரம் சிட்ரேக்கு அருகில் அமைந்திருப்பதுடன், இந்நகரத்தில் கணிசமான ளவு தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக நம்பப்படுகின்றது.

மேலும் இந்நகரத்தின் பூரண கட்டுப்பாடு லிபியப் படையினர் வசம் வருமாயின், சிட்ரேயை நெருங்குவது இலகுவாக்கப்படும் எனக் கூறப்படுகின்றது.

கடந்த ஐந்து மாதங்களுக்கும் மேலாக சிட்ரேயை மீட்கும் படை நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் லிபியப்படையினர், கணிசமானளவு முன்னேற்றம்கண்டுள்ளனர். ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சில பகுதிகள் விடுவிக்கப்பட்டு அங்கு அரச கட்டுப்பாடு நிறுவப்பட்டுள்ளது.

இருந்த போதிலும் படையினர் முன்னேறி வருவதைத் தடுக்கும் நோக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகள் கார்க்குண்டுத் தாக்குதல், கண்ணிவெடித் தாக்குதல் என்பவற்றை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், தரைவழியாக லிபியப் படையினரின் படை நடவடிக்கைகளுக்கு, அமெரிக்க விமானத் தாக்குதல்களும் பெரும் பலமாக அமைந்துள்ளன. தொடரும் படை நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்தி விரைவில் சிட்ரேயை முழுமையாக கைப்பற்றுவோம் என லிபியப் படையினர் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (இ-7)

## ஹிலாரியை நினைத்து பெருமைப்படுகிறேன்

### ஒபாமா தெரிவிப்பு; ட்ரம்பிற்கு வாழ்த்து



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள டொனால்ட் ட்ரம்பிற்கு பராக் ஒபாமா வாழ்த்து தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள டொனால்ட் ட்ரம்பிற்கு, ஜனாதிபதி ஒபாமா தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்தார். பின் ஹிலாரி தோல்வி குறித்து அவர் பேசியதாவது,

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற ட்ரம்பிற்கு தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்தேன். வெள்ளை மாளிகைக்கு வர அழைப்பு விடுத்துள்ளேன். தோல்வியடைந்த போதும் ஹிலாரி அமெரிக்க மக்களின் நலனுக்காக தொடர்ந்து பணியாற்றுவார் என நம்புகிறேன். ஹிலாரியை நினைத்து பெருமைப்படுகிறேன் இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-7)

# பெரும்பான்மையின மக்கள் நினைத்தால் எதுவும் நடக்கும்

## அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முடிவை ஆதாரம் காட்டி கோத்தபாய விளக்கம் கூட்டமைப்பை இளநீர் குடிக்க கூறுகிறார்



(கொழும்பு)

**அமெரிக்காவின் பெரும்பான்மை மக்கள் குழுவினர் ஒன்றிணைந்து டொனால்ட் ட்ரம்பின் வெற்றியை உறுதி செய்துள்ளனர். எனவே இலங்கையின் பெரும்பான்மை மக்களும் இதனை பாடமாகக் கொள்ள வேண்டும். பெரும்பான்மை இனமக்கள் நினைத்தால் எதுவும் நடந்தேறும் என முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

அதேநேரம், ஒபாமாவின் காலத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையினால் இலங்கை மீது விடுக்கப்பட்ட அழுத்தங்கள் குறைவதற்கும் ட்ரம்பின் வெற்றி பங்களிப்புச் செய்யும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பேராசிரியர் நவீன் டி சில்வாவின் எனது உலகத்தில் 30 வருடங்கள் எனும் நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது. அந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் போது தனது வெற்றி இலக்கை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த டொனால்ட் ட்ரம்பிற்கு தடையாக எதிரணி வேட்பாளருடன் தொக்கி நின்ற சிறுபான்மையினரே இருந்தனர். அதனால் அவர் வெற்றி பெறுவாரா என்பது கேள்விக்குறியாக இருந்தது.

இருப்பினும் தற்போது அவர் வெற்றி பெற்றுள்ள நிலையில் அவரது கொள்கைகளை வெளிப்படுத்தியுள்ளார். அவரின் அரசியல் கொள்கைகள் வரவேற்கத்தக்கவை. குறிப்பாக இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்கு இதனால் எந்த பாதிப்புக்களும் ஏற்படாது.

இந்நிலையில் இலங்கை சந்தர்ப்பத்தில் உரிய விதத்தில் பயனடைய வேண்டியது காலததின் தேவையாகும். ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் வெளிநாட்டு கொள்கை இந்த சந்தர்ப்பத்தில் பயனடையும் வகையில் அமையுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

அத்துடன் அமெரிக்க வாக்காளர்களின் பக்கத்திலிருந்து பார்க்கையிலும் அந்நாட்டு புத்திஜீவிகள் கருத்துக்களின் அடிப்படையில் பார்க்கின்ற போதும் அமெரிக்க ஜனாதிபதியாக பதவி வகித்த பராக் ஒபாமாவின் ஆதரவு ட்ரம்பிற்கு கிடைக்கவில்லை. எனவே அவர் தோல்வி அடையப்போவது உறுதியென்று குறிபிடப்படிருந்தது. அதேநேரம் கறுப்பினத்தவர்களின் ஆதரவும் இவருக்கு கிடைக்காது என்ற கருத்துக்கள் மிகவும் வலுப்பெற்றிருந்தன.

ஆனால் அந்நாட்டு வெள்ளையின பெரும்பான்மையினர் ஒன்று திரண்டு டொனால்ட் ட்ரம்பிற்கு வாக்களித்ததன் காரணமாக அவர் சுலபமாக வெற்றிபெற்றார். இதனை இந்நாட்டின் பெரும்பான்மை இனத்தவர்களும் ஒரு பாடமாக கொள்ள வேண்டும். இதனால் உருவாக்கப்பட்ட கருத்தியலே மிக முக்கியமானதாகும்.

பெரும்பான்மை ஆதரவினால் மாத்திரம் ஒருவர் தெரிவு செய்யப்பட்டார். அது சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையாது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். பெரும்பான்மை வலுப்பெற்றால் மாத்திரமே சிறுபான்மையினரும் வலுப்பெறுவர். இந்த சிறந்த பாடத்தை நாம் தற்போது அமெரிக்காவிடமிருந்து கற்றுக் கொள்ள முடிந்துள்ளது.

அதேநேரம் ட்ரம்ப் என்பவர் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் போக்கிலிருந்து விடுபட்ட ஒருவர். அமெரிக்காவிலும் மக்கள் அரசியல்வாதிகளிடத்திலிருந்து தூரம் செல்கின்றனர்.

காரணம் அரசியல் தலைவர்கள் மக்களை ஏமாற்றி ஆட்சியை கைப்பற்ற முனைகின்றனர். மக்களை முட்டாளாக்கிவிடுவது இலகுவானது என்று எண்ணி அடுக்காக பொய்களை கூறி வாக்குகளை பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றனர்.

இன்று எமது நாட்டிலுள்ள அமைச்சர்கள் கூறும் கருத்துக்களும் கூட எந்த வித அடித்தளமற்றதாகவும் வேடிக்கையானதாகவுமே உள்ளன. அதனால் மக்கள் அரசியல்வாதிகள் என்றாலே வெறுப்படையும் நிலை தோன்றியுள்ளது.

மேலும் மனித உரிமை தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் பேசப்படுகின்றன. மனித உரிமைகள் என்பதை மக்களுக்கு கற்றுக்கொடுக்க தேவையில்லை. எமது நாட்டு மக்களிடத்தில் மனித உரிமைகள் இயல்பாகவே நிறைந்துள்ளன.

ஆனால் ஐ.நா மனித உரிமைகள் பேரவை இல்லாத பல விடயங்களை மனித உரிமைகள் என்ற பேரில் எமது நாட்டினுள் புகுத்த பார்க்கின்றது. அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க கூடாது.

அத்துடன் இன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் எமது நாட்டின் மீது விடுக்கப்படும் அழுத்தங்களில் இருந்து விடுபடுவதற்கு சாதகமான காரணியாகவும் டொனால்ட் ட்ரம்பின் வெற்றி அமையும். ஒபாமாவன் காலத்தில் மனித உரிமை விவகாரம் பெரிதாக இருப்பதற்கும் ட்ரம்பின் வெற்றிக்கு தடையாக இருந்தவர்களே காரணம். அதனால் ஹிலாரியின் வெற்றிக்காக தேங்காய் உடைத்த கூட்டமைப்பினர் தற்போது தேங்காய் நீரை குடிக்கட்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# அலுவலக நேரத்தை மாற்றுவது தொடர்பில் அரசாங்கம் கவனம்

தற்போது நிலவியுள்ள அதிக வாகன நெரிசலுக்கு தீர்வாக அலுவலக நேரத்தை மாற்றுவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இதற்கமைய பத்தரமுல்ல பகுதியில் இந்த திட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக மாநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் நிஹால் ரூபசிங்க தெரிவித்தார்.

அங்குள்ள நிறுவனங்களின் அதிகாரிகளை வரவழைத்து இது தொடர்பில் கலந்துரையாடி ஜனவரி மாதமளவில் இந்த திட்டத்தை 3 மாதங்களுக்கு பரீட்சார்த்தமாக நடைமுறைபடுத்த தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் திட்டம் வெற்றியடைந்தால் கொழும்பு முழுவதும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக மாநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். பேருந்துகளில் அலுவலகத்திற்கு செல்பவர்களை தவிர கார் மற்றும் வான் போன்ற வாகனங்களைக் கட்டுப்படுத்துவதே இதன் நோக்கமாகும் என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7-10)

## இன்று ஒரு தகவல்

### உங்கள் சுபாவம் பற்றி நீங்களே சொல்லலாமா?

எனக்கு இதெல்லாம் பிடிக்காது: நான் இதையெல்லாம் இலட்சியமே செய்யமாட்டேன்; இதே விடயத்தில் நானா இருந்தா என்ன செஞ்சிருப்பேன்னா.. என்று எல்லோருமே அடிக்கடி தங்களைப் பற்றிப் பேசுவதைப் பார்க்கிறோம்.

நம்மிடம் மிக நெருங்கிப் பழகுகிற வாய்ப்பு உள்ளவர்களுக்கு நாம் எப்படிப்பட்டவர்கள் என்பது ஓரளவு அல்லது நன்கு தெரியும். ஆகவே இவர்களிடத்தில் மேற்கூறிய புராணங்கள் அடிக்கடி அவிழ்த்துவிட வேண்டியதில்லை. காரணம் அதை ஒரு போரடிக்கும் செயலாகத்தான் கருதுவார்களே தவிர , எவரும் விரும்பமாட்டார்கள்.

சக ரயில் பயணியிடமோ தியெட்டரில் பக்கத்தில் அமர்ந்திருப்பவர்களிடமோ இந்தச் சுயபுராணம் அவசியம் இல்லை.

இதைப் புரிந்து கொள்ளாமல் இப்படியாக்கும் அப்படியாக்கும் என்று இவர்களிடம் பேசத் தொடங்கிவிட்டால் , என்னடா அந்த முன்பின் தெரியாத மனிதர் இங்கிதம் கூடத் தெரியாதவராக இருக்கிறாரே என்று எண்ணி விடவாய்ப்பு உண்டு.

அப்படியானால் யாரிடம் தான் சொல்வது?

இந்தக் கேள்விக்கு விடையைத் தேடுமுன் இன்னொரு கேள்வி. இப்படியெல்லாம் என் சுபாவம் இது என்று சொல்லிக் கொண்டு திரிய வேண்டியது அவசியம் தானா? என்பதே அந்தக் கேள்வி.

ஓரளவு அவசியம் தான். காரணம் , அது வேகமான உலகம். பணத்தைச் சம்பாதிக்க எல்லோரும் இயந்திரமாய் இயங்கத் தொடங்கிவிட்டகாலம். தான் வாழ்க்கை வசதிகள் அத்தனையையும் அடைந்தால் மட்டும் போதாது. தனக்குப் பிறகு மூன்று தலைமுறையும் வசதியாக வாழ வேண்டும் என்று பொருளைச் சேர்ப்பதில் நாட்டம் கொண்டுள்ள காலம்.

இதில் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள அவகாசம் சரிவரக் கிடைப்பதில்லை. தொழில் தொடர்பாகவும் நட்பு ரீதியாகவும் முக தாட்சண்யத்திற்காகவும் சொந்தம் என்று சொல்லிக் கொள்ளும் படியும் நாம் பலரை வாழ்க்கையில் திரும்பத் திரும்ப சந்திக்க நேரிடுகிறது.

அப்படிப்பட்டவர்கள் நம்மை நன்கு புரிந்து வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அது மனத்தாங்கலில் தான் முடியும். மேலும் இவர்கள் நம்மைச் சரி வரப் புரிந்து கொள்ளாவிட்டால் இடையே உள்ள இடைவெளி குறையாது.

இவர்களிடத்தில் கூடச் சந்தர்ப்பங்கள் வாய்க்கும் போது நம்மைப் பற்றிச் சொல்ல வேண்டுமே தவிர நான்..என்..என்று அடிக்கடி அளக்கத் தொடங்கிவிடக்கூடாது.

பிறரிடத்தில் என்ன சொல்கிறோமோ அதுவே நம் சுபாவமாக இருக்க வேண்டும். நம் சுபாவம் என்னவோ அதை மட்டுமே சொல்ல வேண்டும்.

இவற்றில் முரண்பாடுகள் இருக்கவே கூடாது என்பதில் மிகக் கவனமாக இருந்தால் அதுவே பெரிய விடயம்!

**லேனாதமிழ்வாணன்**

# க.பொ.த. (சா/த) பரீட்சை- 2016

## வரலாறு மாதிரி வினாத்தாள்

பகுதி -II வினா விடைகள்

3 மணித்தியாலம்

03) (i)பண்டைய சமுதாயத்தின் சுகாதாரத் தேவையை மேம்படுத்தும் பொருட்டு நடவடிக்கை எடுத்த ஆட்சியாளர்கள் மூவரின் பெயர்களைக் குறிப்பிடுக.

(ii) வரலாற்று மூலாதாரங்களுக்கு அமைய இலங்கையின் பண்டைய சமுதாயத்தில் காணப்பட்ட நான்கு கைத்தொழில்களைக் குறிப்பிடுக.

(iii)பண்டைய இலங்கைச் சமுதாயத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் நிலவியமையை இரண்டு விடயங்களின் அடிப்படையில் விளக்குக.

(iv)அந்நிய பண்பாட்டைச் சேர்ந்த மக்கள் பிரிவினருடன் நட்புறவுடன் வாழுதல் இந்நாட்டு வரலாற்றில் துல்லியமாகத் தெரியும் இயல்பு என்பதை உதாரண ங்கள் இரண்டின் மூலம் தெளிவுபடுத்துக.

04) (i)இலங்கையில் சுற்றாடலைப் பாதுகாக்கும் பொருட்டு சட்டமியற்றிய மன்னர்கள் மூவரின் பெயரை எழுதுக.

(ii)பின்வருவன தொடர்பாக அறவிடப்பட்ட வரிகளை ஒழுங்குமுறையில் எழுதுக.

A - குளத்து நீரைப் பயன்படுத்துதல்
B - சேனைப் பயிர்ச் செய்கை
C - அரசனுக்கு உரித்தான இடத்தில் பயிர் செய்தல்
D - கால்வாய்களில் மீன் பிடித்தல்

(iii)முற்காலத்தில் இலங்கையில் பெண்களுக்குக் கௌரவமான இடம் வழங் கப்பட்டிருந்தமை பற்றி உதாரணங்கள் இரண்டின் மூலம் விளக்குக.

(iv) சுகதேகியாக வாழும் பொருட்டு பண்டைய சுதேச உணவு முறையின் மூலம் பெறத்தக்க முன்மாதிரிகை பற்றி இரண்டு உதாரணங்கள் தந்து தெளிவுபடுத்துக.

5) (i)விஜயபாகு கொலையின் பின்னர் கோட்டை இராசதானி மூன்றாகப் பிரிக்கப்பட்டது. அந்த மூன்று பிரிவுகளினதும் பெயர்களைத் தருக.

(ii) தர்மபால மன்னனுக்குப் பொதுமக்களின் ஒத்துழைப்புக் கிடைக்காமைக்கான காரணங்கள் இரண்டு தருக.

(iii)முதலாம் விமலதர்மசூரிய மன்னன் எதிர்நோக்கிய இரண்டு சவால்களை விபரிக்குக.

(iv) கண்டி இராசதானிக் காலத்தில் நிலவிய பொருளாதார, சமூக இயல்புகள் மூன்றினைத் தெளிவுபடுத்துக.

06) (i)பின்வரும் பயிர்களுக்கான ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்களை முறையே எழுதுக.

A - தேயிலை B - தென்னை C - இறப்பர்

(ii) கோல்புறூக் சீர்திருத்தத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதார ஆலோசனைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(iii) கோப்பிப் பயிர்ச்செய்கையின் விருத்தியில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் இரண்டினை விளக்குக.

(iv) பிரித்தானிய ஆட்சியால் ஏற்பட்ட அனுகூலம் ஒன்றினையும் பிரதிகூலம் ஒன்றினையும் விபரிக்குக.

07) (i)1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட நீதிமன்றங்கள் மூன்றினை எழுதுக.

(ii)1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பிற்கு அமைய ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(iii) சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் சமூக முன்னேற்றத்தின் பொருட்டு கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பதனை இரண்டு விடயங்கள் மூலம் விளக்குக.

(iv) சுதந்திரத்தின் பின்னர் விவசாய அபிவிருத்தியின் பொருட்டு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மூன்றினைத் தெளிவுபடுத்துக.

பகுதி III

08) 17 ஆம் நூற்றாண்டில் கைத்தொழில் புரட்சி பிரித்தானியாவில் ஆரம்பமாகிப் பரவியது.

(i)பிரித்தானியா தவிர்ந்த கைத்தொழில் புரட்சி பரவிய ஐரோப்பிய நாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(ii) கைத்தொழில் புரட்சி ஏனைய நாடுகளுக்குப் பரவுவதற்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(iii)கைத்தொழில் புரட்சி. சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கத்தினை இரண்டு விடயங் களை முன்வைத்து விபரிக்குக.

(iv) "கைத்தொழில் புரட்சி முற்றுப் பெறாத செயற்பாடு" தொடர்புசாதனங்கள், போக்குவரத்து என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இதனைத் தெளிவுபடுத்துக.

09)(i)முதலாம் உலக யுத்தத்தின் முடிவில் சமாதான உடன்படிக்கை செய்வதற்கான பேச்சுவார்த்தையில் பங்கேற்ற பிரதிநிதிகளில் மூன்று தலைவர்களின் நாடுகளைக் குறிப்பிடுக.

(ii)சர்வதேச சங்கம் அமைக்கப்பட்டதற்கான நோக்கங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(iii)சர்வதேச சங்கம் தோல்வியடைந்தமைக்கான இரண்டு காரணங்களை விபரிக்குக.

(iv) இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் தோற்றம் பெற்ற ஐக்கிய நாடுகள் சபை உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் பொருட்டு எடுத்த இரண்டு நடவடிக்கைகளைத் தெளிவுபடுத்துக.


### (வரலாறு பகுதி I விடைகள்)

| | | | |
|---|---|---|---|
| 1.2 | 11.3 | 21.2 | 31.4 |
| 2.1 | 12.2 | 22.2 | 32.3 |
| 3.3 | 13.1 | 23.1 | 33.2 |
| 4.2 | 14.4 | 24.3 | 34.1 |
| 5.4 | 15.2 | 25.3 | 35.3 |
| 6.3 | 16.4 | 26.1 | 36.1 |
| 7.4 | 17.1 | 27.4 | 37.3 |
| 8.4 | 18.2 | 28.2 | 38.1 |
| 9.2 | 19.1 | 29.4 | 39.3 |
| 10.3 | 20.3 | 30.4 | 40.4 |


### (வரலாறு பகுதி II விடைகள்)

01) பகுதி (I)

(அ) (i)



(அ) (ii)




(ஆ) (i) A - இபன்பதுதா
B - நிக்கலஸ் கொப்பனிக்கஸ்
C - அறிஞர் சித்திலெப்பை
D - கொத்மலை நீர்த்தேக்கம்

(ii) 1) சிவன் கோயில்
2) பொலனறுவை
3) சோழர்
4) கருங்கல்

(iii) 1)வேர்சேல்ஸ் மாளிகை
2) பிரான்ஸ்
3) பூர்போன் அரச வம்சம்
4) நீர்ப்பூங்கா, நீர்நிலைகள், மலர்ப் பூங்கா

பகுதி II

02) (i)
- பாகியன்கலை
- பட்டதொம்பலென
- கித்துல்கல பெலிலென
- சீகிரி பொத்தானலென
- அலிகல லென

(ii)
- சுடப்பட்ட மட்பாண்டங்களின் பாவனையின் ஆரம்பம்
- முறையான மரணச் சடங்குகளைப் பின்பற்றுதல்
- இரும்பினைப் பயன்படுத்துதல்
- நிலையான குடியிருப்புகளை அமைத்தல்
- விவசாயத் தொழில் ஆரம்பமாதல்

(iii)
- இரும்பு ஆயுதம் செய்தல் / இரும்பு உபகரணங்கள்
- மட்பாண்டங்கள் உற்பத்தித் தொழில்நுட்பம் (நிறந்தீட்டப்பட்ட மட்பாண்டம்)
- வீடுகள் கீழிறங்காமல் இருக்கும் பொருட்டு பொருத்தமாக அமைத்தல்
- நிலத்துக்கு குத்தாகச் சுவர்களை அமைத்தல்
- வனைதல் சில்லினைப் பயன்படுத்துதல்
- மணிகள் செய்யும் தொழில்நுட்பம்

(iv)
- குடியிருப்புக்கள் சுயாதீனமாக செயற்படல்
- குளத்தை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைதல்
  (உ-ம்: சுமனவாவி காம, விகாரவாவி காம, ஹ°ன்திரிவாபி காம, கடகவாவி காம)
- பல்வேறு தொழில்களின் அடிப்படையில் குடியேற்றங்கள் அமைதல்
  உ-ம்: விவசாயிகள் வாழ்ந்த கிராமம் - கசீகாரகாம
  இடையர்கள் வாழ்ந்த கிராமம் - கோபாலகாம
  மீனவர்கள் வாழ்ந்த கிராமம் - கேவட்டகாம
  ...... இவை போன்றவை
- செயல்களை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்ட கிராமங்கள் இருந்தமை
  உ-ம் : துறைமுகங்களை அண்மித்து இருந்த கிராமங்கள்-பட்டாணகாம
  வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்ட கிராமங்கள் - நியம்கம்
  வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்ட கிராமங்கள் - ஓலகம்
- பல்வேறு புவியியல் பிரதேசங்களில் நிலவிய இயற்கை வளங்களின் அடிப்படையில் அமைந்த கிராமங்கள் தோற்றம் பெறல்.
- நகரக் குடியிருப்புக்கள்.
- குடியிருப்புக்களின் ஒழுங்கமைப்பும் நிர்வாகமும் முறையாக இருந்தமை

03) (i) பண்டுகாபய மன்னன், துட்டகாமினி மன்னன், புத்ததாச மன்னன், முதலாம் உபதிஸ்ஸ மன்னன், நான்காம் காசியப்ப மன்னன், ஐந்தாம் மகிந்தன், மகா பராக்கிரமபாகு மன்னன்

(ii) இரும்பு, செம்பு, தங்கம், இரத்தினக்கல், யானைத்தந்த செதுக்கல், வனைதல், நெசவு

(iii)
- நகரங்களை அண்மித்து வர்த்தகம் வளர்ச்சியுற்றுக் காணப்படல்.
  (அநுராதபுரத்தில் கால சுமண எனும் வர்த்தக நிலையம்)
- உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக நிலையங்கள்
- வெளிநாட்டில் வர்த்தக அமைப்புக்கள் காணப்படல்
- வர்த்தகம் தொடர்பாக அரசர்களால் அமுல் செய்யப்பட்ட சட்டங்கள்
  (நான்காம் உதய மன்னனின் சொரபொர வெவக் கல்வெட்டு)
- இந் நாட்டில் வெளிநாட்டு வர்த்தகர்கள் குடியிருந்தமை
- நாட்டைச் சுற்றித் துறைமுகங்கள் அமைக்கப்பட்டிருந்தமை
- வர்த்தகக் கிராமங்கள் இருந்தமை

16 ஆம் பக்கம் பார்க்க...

(iv) • நகர மக்கள் பல்லின பண்பாட்டினை உடையவர்களாக இருந்தமை.
(தென் இந்தியர், கிரேக்கர், மாசிடோனியர், ஜாவா, கம்போடியர்கள்)
- தமிழ்ப் பிக்குமார் இருந்தமை
- கலப்பினத் திருமணங்கள் நடைபெற்றமை
- பல்வேறு இனங்களுக்கு அரசாங்கப் பதவிகள் வழங்கப்படல்
(தமிழ் அதிகாரி - வெளிநாட்டவரும் படையில் சேர்க்கப்பட்டமை)
- இஸ்லாமிய பக்தர்கள் சிவனொளிபாதம் சென்றமை
- கலை நிர்மாணங்களில் பல்வேறு இனத்தவர்களின் சம்பிரதாயங்களைக் காணக்கூடியதாக இருந்தமை

04) (i) நான்காம் மகிந்தன், மூன்றாம் உதயன், ஐந்தாம் காசியப்பன், ஆமண்ட காமினி அபயன், நிசங்கமல்லன்

(ii) A - தக்கபதி B - கெதி அட, கெட்டு கனப
C - போஜக்கபதி D - மதரமஞ்சக்க

(iii) • ஆட்சியில் பெண்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.
உ-ம் : அனுலா, சூளசீவலி, லீலாவதி, கல்யாணவதி ஆகிய அரசிகள்
- தாய்க்குரிய மரியாதை அளிக்கப்படல்.
உ-ம் : பிக்குமார் விகாரமாதேவிக்குக் கூறியவையும் அதற்கு அவள் அளித்த பதிலும்.
- கல்வியறிவில் சிறந்த பெண்கள் மதிப்புக்குரியவர்களாக விளங்கியமை.
உ-ம்: சத்தர்மாலங்காரய, தம்பியா அட்டுவா கெட்ட பதய, சஹஸ்ஸவத்துப்பகர என்பவற்றில் கூறப்பட்டுள்ளவை.

(iv) கஞ்சியை உணவாகக் கொண்டமை பற்றி உதாரணங்களுடன் விளக்குதல்.
கறிகளைச் சுவையூட்டுவதற்கு வாசனைத் திரவியங்கள் மற்றும் கறிவேப்பிலை என்பவற்றைப் பயன்படுத்தியமை
பால் பயன்படுத்தப்படல் (பால், தயிர், நெய்)
மாமிச உணவு
காய்கறி, கிழங்கு வகைகள், கீரை வகைகள் என்பன உணவில் சேர்க்கப்படல்.
சுகதேகியாக வாழும் பொருட்டும் சத்துக்காகவும் உணவு உட்கொள்ளப்படல்.
செயற்கை உணவு பயன்படுத்தப்படாமை
போசணை குறையாத விதத்தில் உணவைத் தயாரித்தல்
போன்ற விடயங்கள்

05) (i) கோட்டை, சீதாவாக்கை, றைகம

(ii) ★ தர்மபால மன்னன் கத்தோலிக்க சமயத்தைத் தழுவியமை
★ போர்த்துக்கேயரின் கைப்பொம்மையாக செயற்படல்
★ மக்களுக்குப் போர்த்துக்கேயரால் ஏற்பட்ட இன்னல்களைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்காமை.

(iii) சவால்கள்
- முறையான அரச உரிமை இன்மை
- கண்டி இராசதானியைப் போர்த்துக்கேயரின் தாக்குதலில் இருந்து பாதுகாக்க வேண்டிய நிலை இருந்தமை.
- கண்டி இராசதானியை சீதாவாக்கையின் தலையீட்டிலிருந்து விடுவித்தல்.
- சீர்குலைந்திருந்த புத்த சமயத்தை எழுச்சியுறச் செய்தல்.
- கண்டி இராசதானியின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல்.

(iv) பொருளாதாரம்:-
- நுகர்வை அடிப்படையாகக் கொண்டிருந்தமை
- சுயதேவையை அடிப்படையாகக் கொண்டிருந்தமை
- மலைப்பாங்கான நிலமானபடியால் நெற்செய்கைக்கான பிரதேசம் வரையறுக்கப்பட்டிருந்தமை
- பள்ளத்தாக்குகளில் படிமுறையில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டமை
- பெருவாரியான நிலம் சேனைப் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்படல்
- குரக்கன், சோளம், தினை, சாமை போன்ற தானிய வகைகளும் கிழங்கு வகைகளும் பயிரிடப்பட்டமை
- பலாக்காய், ஈரப்பலாக்காய், மிளகு, சாதிக்காய், கராம்பு, பாக்கு, மரக்கறி, பழவகை என்பன செய்கை பண்ணப்படல்
- மேலதிக பயிர்கள் மூலமும் உணவுத் தேவை பூர்த்தி செய்யப்படல்
- இரும்பு, உலோகம், மரம், அரக்கு முதலான கைத்தொழில்கள் முன்னேற்றம் அடைந்திருந்தமை
- விவசாயத் தேவைகளுக்கும் பால் பெறுவதற்கும் மிருக வளர்ப்பு இடம்பெற்றமை

சமூகம் :-
- நாட்டின் நிலம் அனைத்தும் அரசனுக்கே உரியதென ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை.
- உரிமையையும், அனுபவித்தலையும் அடிப்படையாகக் கொண்டு நிலம் பல்வேறு வகைப்படுத்தப்பட்டிருந்தமை.
- மக்கள் தாம் அனுபவிக்கும் நிலத்திற்காக ஏதாவது ஒரு சேவையை அல்லது குறிப்பிட்ட பொருள்களை மன்னனுக்கு வழங்க வேண்டியிருந்தமை.
- பொதுமக்களால் வழங்கப்படும் சேவை, இராஜகாரியம் எனப்படல்.
- கிராமிய சமூகம் காணப்படல்.
- கிராமங்கள் சுயதேவைப் பூர்த்தி அடைந்திருந்தமை.
- சமூகம் குலத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததோடு, அவ்வக் குலத்திற்கான பொருளாதார நடவடிக்கைகளும் இருந்தமை.
- திருமணங்கள் தத்தமது குலத்தவர்களிடையே இடம்பெறல்.
- தீக, பின்ன, ஒரே வீட்டில் சாப்பிடுதல் என மூன்று வகைத் திருமணங்கள் இடம்பெறல்.
- கிராமிய சமூகத்தில் அனைத்து நடவடிக்கைகளும் உழைப்புப் பரிமாற்று முறையில் (அத்தம்) இடம்பெற்றமை.
- குடும்பம் பிரதான அலகாக இருந்தமை.
- நற்பண்புகளைக் கைக்கொள்ளல் சமூகத்தின் பிரதான இயல்பாக இருத்தல்.
- கிராமிய வாழ்க்கையின் பிரிக்க முடியாத அம்சமாக விஹாரைகள் காணப்படல்

06) (i) A - தலைவாக்கலை B - லுணுவில C - அகலவத்த

(ii) • கட்டாய இராஜகாரிய முறை ஒழிக்கப்படல்
- நிலங்கள் விற்றல் தொடர்பான கொள்கை செயற்படுத்தப்படல்
- சிவில் உத்தியோகத்தர்கள் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் ஈடுபட அனுமதி அளித்தல்
- அரசின் வர்த்தக ஏகபோக உரிமை ஒழிக்கப்படல்
- தனிப்பட்ட முதலீட்டாளர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படல்

(iii) • ஐரோப்பிய சந்தையில் கோப்பிக்கான கேள்வி அதிகரித்தமை
- வெளிநாட்டவர் அதிகமாகக் கோப்பிப் பயிர்ச்செய்கையில் முதலீடு செய்தல்
- தென்னிந்தியத் தொழிலாளர்களிடமிருந்து குறைந்த வேதனத்திற்கு ஊழியத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தமை
- ஆளுநர் எட்வட் பார்ன்ஸ் கோப்பியின் ஏற்றுமதி வரியைக் குறைத்தமை
- கோப்பிப் பயிர்ச்செய்கை மூலம் அதிக இலாபம் பெறக்கூடியதாக இருந்தமை

(iv) அனுகூலங்கள்
- சர்வதேச மொழியாகிய ஆங்கில மொழி அறிவு நாட்டினுள் பரவியமை
- போக்குவரத்து வளர்ச்சியடைதல்
- தொடர்பாடல் முன்னேற்றமடைதல்
- கைத்தொழில் புரட்சியின் சாதகமான தாக்கம் இந்நாட்டில் ஏற்படல்
- பாராளுமன்ற ஆட்சிமுறை அறிமுகமாதல்
- ஏற்றுமதிப் பயிர்கள் அறிமுகமாதல்

பிரதிகூலங்கள்
- மேல்நாட்டுக் கலாசாரத்தின் தாக்கத்தால் உள்நாட்டுக் கலாசாரம் வீழ்ச்சியடைதல்
- மதுபானம் அருந்துதல் போன்ற தீய பழக்கங்கள் ஏற்படல்
- சுயதேவைப் பொருளாதாரம் வீழ்ச்சியுறல்
- நற்பண்புகள் அருகியமை
- தேசிய அறிவு பின்னடைவை நோக்கிச் செல்லுதல்

07) (i) • உச்ச நீதிமன்றம்
- மேல் நீதிமன்றம்
- மாவட்ட நீதிமன்றம்
- மஜிஸ்ரேட் நீதிமன்றம் (நீதவான் நீதிமன்றம்)
- அரசியல் யாப்பு நீதிமன்றம்

(ii) • பாராளுமன்றத்தைக் கூட்டுதல்
- அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரையை நிகழ்த்துதல்
- பாராளுமன்றத்தை ஒத்திவைத்தல்
- பாராளுமன்றத்திற்கு சுற்று நிருபங்கள் அனுப்புதல்
- பொதுத்தேர்தலை அடுத்து வரும் முதலாவது அமர்வுக்குத் தலைமை வகித்தல்
- பாராளுமன்றத்தைக் கலைத்தல்

(iii) • சுதந்திரம், சமத்துவம், அடிப்படை உரிமைகள் என்பன அரசியல் யாப்பில் இடம் பெற்றமை
- போட்டிப் பரீட்சைகள் மூலம் தொழில்கள் வழங்கப்பட்டமை
- இலவசக் கல்வி, சுகாதார சேவை என்பவற்றை வழங்குதல்
- கிராமப் பாடசாலைகளை முன்னேற்றுதல்
- தொற்றுநோய்கள் பரவுவதைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்
- வீடுகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- உணவு முத்திரை முறையை செயற்படுத்தல் போன்ற விடயங்கள்

(iv) • குடியேற்றத் திட்டங்களை ஏற்படுத்தி நிலம் வழங்கி, அவற்றில் நெல் மற்றும் பயிர்களைப் பயிரிடுதல்
- மகாவலி அபிவிருத்தித் திட்டமுறை
- பல்வேறு பயிர்களின் பொருட்டு ஆராய்ச்சி நிலையங்களை நிறுவுதல்
- தோட்டப் பயிர்ச்செய்கையை முன்னேற்றும் பொருட்டு நடவடிக்கை எடுத்தல்
- இது ஏற்றுமதிப் பயிர்களுக்காக நிறுவனங்களை ஏற்படுத்தல்
உ-ம் : அரச பயிர்க் கூட்டுத்தாபனம் / ஜசவசம, உசவசம
- விவசாய ஓய்வூதிய முறை
- உற்பத்தியின் பொருட்டு உத்தரவாத விலை முறை
- உர உதவி வழங்கல் போன்ற விடயங்கள்

## பகுதி III

(i) பிரான்ஸ், பெல்ஜியம், ஆஸ்திரியா, ஹங்கேரி, பிரஷ்யா

(ii) • உலகம் முழுவதிலும் சனத்தொகை அதிகரித்தமையால் பொருட்களுக்கான கேள்வி அதிகரித்தமை
- ஐரோப்பாவில் போக்குவரத்து நடவடிக்கை முன்னேற்றமடைதல்
- பிரான்சிலும் ஜேர்மனியிலும் நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டமை

(iii) • அதிக அளவில் நகரங்கள் தோற்றம் பெற்றமை
- பொருட்களின் தொகை அதிகரித்ததால் அவற்றின் விலை குறைந்தமை
- தொழிலுக்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்தமை
- வகுப்பு ரீதியான சமூகம் தோற்றம் பெறல்
- தொழிற் சங்கங்களும் ஆர்ப்பாட்டங்களும்
- சுற்றாடல் மாசடைதல்

(iv) • தொடர்புசாதனங்கள், போக்குவரத்துத் துறை என்பவற்றில் இன்று வரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பாக விளக்கப்படுதல் வேண்டும்.

09) (i) ஐக்கிய அமெரிக்க அரசுகள், பிரித்தானியா, பிரான்ஸ், இத்தாலி

(ii) • நாடுகளுக்கிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளை சமாதானமாகத் தீர்த்தல்
- எதிர்காலத்தில் உலக யுத்தம் ஒன்று ஏற்படுவதைத் தவிர்த்தல்
- சர்வதேசப் புரிந்துணர்வையும் ஒத்துழைப்பையும் கட்டி எழுப்புதல்
- சிறிய நாடுகளின் சுதந்திரம், சுயாதீனம் என்பவற்றைப் பாதுகாத்தல்
- மனிதகுல ஒற்றுமை மூலம் உலக சமாதானத்தைப் பாதுகாத்தல்

(iii) • உலகின் போர்ப் பலம்மிக்க வல்லரசாகத் திகழ்ந்த ஐக்கிய அமெரிக்க அரசுகள் சர்வதேச சங்கத்தில் இடம்பெறாமை
- வல்லரசாகிய ரஷ்யாவை சர்வதேச சங்கத்தில் இருந்து தூர ஒதுக்கி வைத்தமை
- சர்வதேச சங்கத்திற்கு இராணுவமொன்று இல்லாமை
- சர்வதேச சங்கத்தில் அங்கத்துவம் வகித்த பலம் வாய்ந்த நாடுகள் பொதுத் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுக்காது தமது நோக்கங்களுக்கு முன்னுரிமை கொடுத்து செயற்பட்டமை
- உலக சமாதானம் மீறப்பட்ட சந்தர்ப்பங்களில் அந்நாடுகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள சங்கத்தால் முடியாமை

(iv) • பிரச்சினைகள் தீவிரமடையுமுன்னர் பேச்சுவார்த்தைகள் மூலம் அவற்றிற்குத் தீர்வு காணல் (உ-ம் : சுயஸ் கால்வாய் பிரச்சினை, வளைகுடா நெருக்கடி, கியூபாவின் ஏவுகணை நெருக்கடி)
- பொருளாதாரத் தடை விதித்தல் (உ-ம் : வடகொரியாவுக்கு எதிராக)
- அணு ஆயுதங்களைக் குறைக்கவும், அவற்றைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுத்தல் (உ-ம் : வடகொரியா, ஈரான்)
- சமாதானப் படையை ஈடுபடுத்தல்

# அபிவிருத்தித் திட்டக் குழுவில் இருந்து அர்ஜூன் மகேந்திரனை உடன் நீக்கவும்

## அமைச்சர் ராஜித போர்க்கொடி

(கொழும்பு)

**நல்லாட்சி அரசாங்கத்தின் 5 வருட அபிவிருத்தித் திட்டக்குழுவின் பிரதானியாக நியமிக்கப்பட்டுள்ள மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை அப்பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று அமைச்சரவை பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரட்ன வலியுறுத்தியுள்ளார்.**



மத்திய வங்கியின் பிணை முறிகள் விற்பனையில் இடம் பெற்ற மோசடி தொடர்பில் அர்ஜுன் மகேந்திரனுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் காணப்படுவதால் அவர் அப்பதவியை வகிக்க தகுதியற்றவர் என்பதால் கௌரவமான முறையில் அவரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விலகச் செய்ய வேண்டும் எனவும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.


மத்திய வங்கி மோசடியுடன் அதன் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் தொடர்புபட்டுள்ளதாக கோப் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள நிலையில் பிரதமரின் வழிகாட்டலில் உருவாக்கப்பட்டுள்ள 5 வருட அபிவிருத்தித் திட்டக்குழுவின் பிரதானியாக முன்னாள் ஆளுநர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் ராஜித சேனாரட்ன, அர்ஜுன் மகேந்திரனின் திறமை மற்றும் புத்திக்கூர்மை தொடர்பில் தாம் எதனையும் கூறப் போவதில்லை என்று தெரிவித்தார்.

எனினும் இவ்வாறான குற்றச்சாட்டை எதிர்கொண்டிருக்கும் நபரை அபிவிருத்தித் திட்டக் குழுவின் பிரதானியாக பதவியில் அமர்த்துவதால் நல்லாட்சி அரசாங்கத்திற்கே பங்கம் ஏற்படும் என்பதையும் சுட்டிக்காட்டினார். (இ-7-10)

# நேற்றுவரை 30 பேருக்கு பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை



அமெரிக்க மற்றும் இந்திய மருத்துவ குழுவினால் தெல்லிப்பழை வைத்திய சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் இலவச பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைக்கு ஐம்பது பேர் பதிவு செய்துள்ளதாகவும் அதில் நேற்று வரை முப்பது பேருக்கு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என குறித்த சத்திர சிகிச்சை குழு தெரிவித்துள்ளது.

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் 100ஆவது ஆண்டை பூர்த்தி செய்யும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இச் செயற்பாட்டில் குறித்த மருத்துவக் குழுவானது தெல்லிப்பழை வைத்தியசாலையில் 3 தினங்கள் தங்கியிருந்து சிகிச்சைகளை மேற்கொள்ளவுள்ளது என வைத்திய கலாநிதி அமுதா கோபாலன் தெரிவித்திருந்தார்.

வடமாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட பெருமளவானவர்கள் தமது அவயங்களில் தழும்புகளுடனும் ஊனத்துடனும் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு உதவுவதைமுழுநோக்காகக்கொண்டு குறித்த குழுவினர் யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்து சிகிச்சைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும், தமது முகங்கள் அலங்கோலமாக இருப்பதால் பலர் சமூகத்தின் முன் வெளிவராமல் ஒளிந்து உள்ளார்கள்.

எனவே அவர்களை புது மனிதர்களாக வெளி உலகத்துக்கு காண்பிப்பதுடன் அவர்கள் சாதாரண வாழ்க்கை வாழ்வதற்கு இது நல்ல சந்தர்ப்பமாக அமைகிறது. எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ள குறித்த வைத்திய குழுவின் பணிகள், இன்றுடன் முடிவடைகின்றது. இந்த நிலையில் இதுவரை ஐம்பது பேர் சிகிச்சைக்காக பதிவு செய்திருந்ததாகவும் அதில் முப்பது பேருக்கு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு, அவர்கள் உடனடியாகவே வீடு திரும்பும் நிலையில் காணப்படுவதாகவும் குறித்த மருத்துவ குழு தெரிவித்துள்ளது.

குறிப்பாக போரில் முகத்தில் தழும்புகள் ஏற்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதாக மருத்துவ குழு அறிவித்திருந்த போதிலும் முதல் கட்டமாக வாய்ப்பகுதியில் தழும்புகள் காயங்கள் ஏற்பட்டவர்களுக்கே பிளாஸ்டிக் சத்திர சிகிச்சையை மேற்கொண்டுள்ளது.இதில் அநேக மானவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்களாகவும் உள்ளனர். இங்கு அதிகமானவர்கள் இவ்வாறான பாதிப்புடன் காணப்படுகின்றனர். எனினும் சிகிச்சைக் காலப் பகுதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதனால் குறைந்தளவானோருக்கே சிகிச்சை மேற்கொள்ள முடிந்தது.

எனினும் அடுத்த வருடம் ஜனவரி மாதமளவில் மற்றுமொரு குழு இலங்கை வரக்கூடியதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன. அப்போது அனைத்து விதமான முகத்தழும்புகளையும் சரிசெய்யும் சிகிச்சைகளை அவர்கள் மேற்கொள்வார்கள் என அந்த குழு தெரிவித்தது.

இதேவேளை குறித்த சிகிச்சை தொடர்பில் அறிந்திராத சிறுவர்கள் உட்பட பலர் நேற்றைய தினம் வைத்திய சாலைக்கு வந்திருந்த போதிலும் அவர்கள் முற்பதிவு செய்திராத காரணத்தினால் சிகிச்சையளிக்கப்படவில்லை.

குறித்த சத்திரசிகிச்சையை செய்வதற்கு 2 நாட்களுக்கு முன்னர் ஒரு பரிசோதனை மேற்கொள்ள வேண்டியுள்ள காரணத்தால் முன்னரே எம்முடன் தொடர்பு கொண்டு ஆலோசனைகளைபெறவேண்டும்.

எனவே குறித்த சிகிச்சையை மேற்கொள்ள விரும்புபவர்கள் தெல்லிப்பழை வைத்தியசாலையில் தமது பதிவுகளை செய்து கொள்ள முடியும்.


அத்துடன் 071 818 6185 என்ற தொலைபேசி இலக்கத்துடனும்தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும். (இ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 896

சர்மி




வின்ஜன்சன்



அபிஷா




ஜெசி




சங்கர்




விமலேந்திரன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.





# சிங்கக் குட்டியின் புது தீபாவளி!

"...அப்பா! இந்த ஆண்டு நாமும் தீபாவளி பண்டிகையைக் காட்டில் கொண்டாடலாமா?" என்று கேட்டது இளவரசர் சிங்கக் குட்டி.

"அப்படியே ஆகட்டும்" என்றது சிங்கராஜா. காடே விழாக் கோலம் பூண்டது. எங்கு பார்த்தாலும் தோரணங்கள் கட்டப்பட்டுப் புதுக் காடாக மாறியிருந்தது. வெளியூர் சென்றிருந்த பறவைகள் பயணத்தை முடித்து, காட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தன.

காட்டை நெருங்கியதும் தோரணங்களைக் கண்டன. நண்பர்கள் மூலம் செய்தியை அறிந்துகொண்டன. நேராக சிங்கராஜாவை சந்திக்கக் குழுவாகப் பறந்தன.

"அரசே! வணக்கம். நாங்கள் ஊர் ஊராகப் பயணம் செய்பவர்கள். நிறைய ஊர்களில் தீபாவளி கொண்டாட்டங்களைப் பார்த்திருக்கோம். நம் காட்டில் தீபாவளி பண்டிகையைக் கொண்டாடப் போவதாக அறிந்தோம், சந்தோஷம். அத்துடன் வருத்தமும் அடைகிறோம்" என்றன வேதனையுடன்.



"என்ன பறவைகளே! மகிழ்ச்சி என்கிறீர்கள். கூடவே வருத்தம் என்றும் கூறுகிறீர்கள். எனக்குப் புரியும்படி கூறுங்கள்" என்றது சிங்கராஜா.

"அரசே! தீபாவளி பண்டிகையை நாம் தாராளமாகக் கொண்டாலாம். அதாவது புது உடை, பலகாரங்கள் செய்து கொண்டாடலாம். ஆனால் பட்டாசுகள் வேண்டாமே" என்றது ஒரு பறவை.

"எதற்காகப் பட்டாசுகள் வேண்டாம் எனக் கூறுகிறீர்கள்" என்று கேட்டது சிங்கராஜா.

"அரசே! பட்டாசுகளை வெடிக்கும்போது, அதிலிருந்து வெளியேறும் நச்சுப் புகை, காற்று மண்டலத்தில் கலந்துவிடும். முயல், முள்ளம் பன்றி போன்ற சிறிய விலங்குகளுக்கும், சிட்டுக் குருவி, தேன்சிட்டு போன்ற பறவைகளுக்கும் மூச்சு திணறலை ஏற்படுத்தும். பட்டாசு சத்தம் ஒலி மாசை ஏற்படுத்தும். அதனால்தான் எங்களைப் போன்ற பறவைகள் கூடும் கிராமங்களில் பறவைகளின் நலனைக் கருத்தில் கொண்டு, மனிதர்கள் பட்டாசு வெடிக்காமல்,

தீபாவளியைக் கொண்டாடுகிறார்கள்" என்றது.

"ஓ! அப்படியா? பட்டாசில் இவ்வளவு பெரிய தீங்கு இருக்கிறதா? இளவரசர் ஆசைப்பட்டதால்தான் நான் ஒப்புக்கொண்டேன்" என்றது சிங்கராஜா.

"அப்பா! பலருக்குத் தொந்தரவு தரும் பட்டாசை வெடிக்காமல், 'ஓசையில்லா தீபாவளியைக் கொண்டாடலாமே" என்றது இளவரசர் சிங்கக் குட்டி.

"அப்படியே ஆகட்டும்" என்றது சிங்கராஜா.

மகிழ்ச்சியில் சிறகைப் 'படபடவென' அடித்தன பறவைகள். (முற்றும்)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

11.2016
11

- 1673 - உக்ரேனின் கோட்டின் என்ற இடத்தில் போலந்து-லித்துவேனியாப் படைகள் ஓட்டோமான் இராணுவத்தைத் தோற்கடித்தன.
- 1675 - குரு கோவிந்த் சிங் சீக்கியர்களின் 10வது குருவானார்.
- 1675 - லெய்ப்னிட்ஸ் (Gottfried Leibniz) என்பவர் $y=f(x)$ என்ற செயலி ஒன்றின் வரைபின் பரப்பைக் காணுவதற்கு முதன்முறையாக தொகையீட்டு நுண்கணிதத்தைப் பாவித்தார்.
- 1778 - மத்திய நியூயோர்க்கில் செனெக்கா இந்தியர்கள் 40 பேரைக் கொன்றனர்.
- 1831 - அடிமைப் புரட்சியில் ஈடுபட்டமைக்காக கைது செய்யப்பட்ட நாட் டர்னர் வேர்ஜீனியாவில் தூக்கிலிடப்பட்டான்.
- 1865 - டீஸ்ட்டா ஆற்றின் கிழக்குப் ப்குதிகளை பூட்டான் பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனிக்குக் கொடுத்தது.
- 1880 - ஆஸ்திரேலியாவின் Bushranger நெட் கெல்லி மெல்பேர்னில் தூக்கிலிடப்பட்டான்.
- 1889 - வாஷிங்டன் ஐக்கிய அமெரிக்காவின் 42வது மாநிலமாகச் இணைக்கப்பட்டது.
- 1909 - ஹவாயில் பேர்ள் துறைமுகத்தில் அமெரிகக் கடற்படைத் தளம் அமைக்கப்பட்டது.
- 1919 - இலங்கைத் தேசிய காங்கிரஸ் அமைக்கப்பட்டது.
- 1930 - அல்பேர்ட் ஐன்ஸ்டைன், லியோ சிலார்ட் ஆகியோர் தமது கண்டுபிடிப்பான ஐன்ஸ்டைன் குளிர்சாதனப்பெட்டிக்கான காப்புரிமத்தைப் பெற்றனர்.
- 1933 - யாழ் பொது நூல் நிலையம் அமைக்கப்பட்டது.
- 1940 - ஐக்கிய அமெரிக்காவின் மிட்வெஸ்ட் நகரில் எதிர்பாராத சூறாவளியினால் 144 பேர் இறந்தனர்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: நாசி ஜேர்மனி பிரான்ஸ் மீதான தனது முற்றுகையை முடித்தது.
- 1960 - தெற்கு வியட்நாம் அதிபர் நியோ டின் டியெம் மீதான இராணுவப் புரட்சி தோல்வியில் முடிந்தது.
- 1965 - ரொடீசியாவில் இயன் ஸ்மித் தலைமையிலான வெள்ளை இன சிறுபான்மை அரசு விடுதலையை அறிவித்தது.
- 1966 - நாசா ஜெமினி 12 கப்பலை விண்ணுக்கு அனுப்பியது.
- 1968 - மாலைதீவுகளில் இரண்டாவது குடியரசு அறிவிக்கப்பட்டது.
- 1975 - ஆஸ்திரேலியப் பிரதமர் கஃப் விட்லம் தலைமையிலான அரசை அதன் ஆளுநர் கலைத்தார்.
- 1992 - இங்கிலாந்து திருச்சபை பெண்களையும் சமயகுருக்களாக சேர்ப்பதற்கு முடிவெடுத்தது.
- 2004 - யாசர் அரபாத் இறந்து விட்டதாக பாலஸ்தீன விடுதலை இயக்கம் அறிவித்தது. மஹ்மூத் அப்பாஸ் தலைவரானார்.

### பிறப்புக்கள்

- 1898 - கி. ஆ. பெ. விசுவநாதம், தமிழறிஞர். (இ. 1994)
- 1821 - பியோதர் தஸ்தயெவ்ஸ்கி, ரஷ்ய எழுத்தாளர் . (இ. 1881)
- 1937 - ப. ஆப்டீன், ஈழத்து எழுத்தாளர்
- 1945 - டானியல் ஒர்ட்டேகா, நிக்கராகுவாவின் குடியரசுத் தலைவர்.
- 1974 - லியோனார்டோ டிகாப்ரியோ, அமெரிக்கத் திரைப்பட நடிகர்.

### இறப்புகள்

- 1982 - எஸ். ஏ. அசோகன், திரைப்பட நடிகர்.
- 1993 - கப்டன் மயூரன், தமிழீழ விடுதலைப் புலிப் போராளி. (பி. 1970)
- 1993 - கப்டன் ஈழமாறன், தமிழீழ விடுதலைப் புலிப் போராளி. (பி. 1973)
- 2004 - யாசர் அரபாத், பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர், நோபல் பரிசாளர். (பி. 1929)
- 2005 - பீட்டர் டிரக்கர், ஆஸ்திரிய மேலாண்மை அறிவியலாளர். (பி. 1909)

### சிறப்பு நாள்

- பொதுநலவாய நாடுகள் - நினைவுறுத்தும் நாள்.
- போலந்து - விடுதலை நாள் . (1918)
- அங்கோலா - விடுதலை நாள். (1975)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 70 | 40-80 | 60 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 100 | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 60 | 30 | 50 | 50 | 100 | 60 |
| தக்காளி | 80 | 60 | 50 | 40 | 60 | 100 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 50 | 40 | 60 | 60 | 50 |
| கோவா | 70 | 100 | 50 | 60 | 80 | 80 | 80 |
| கரட் | 100 | 100 | 70 | 60-120 | 80 | 140 | 80 |
| பூசணி | 40 | 40 | 25 | 40 | 40 | 50 | 40 |
| புடோல் | 50 | 40 | 30 | 60 | 40 | 60 | 70 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 40 | 60 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 100 | 100 | 120 | 140 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 75 | 100 | 90 | 140 | 100 |
| பாகற்காய் | 140 | 200 | 120 | 240 | 140 | 160 | 140 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 60 | 80 | 60 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 70 | 80 | 80 | 120 | 80 |
| பயற்றங்காய் | 80 | 100 | 80 | 100 | 70 | 120 | 100 |
| லீக்ஸ் | 100 | 100 | 90 | 160 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 50 | 50 | 30 | 80 | 40 |
| கறிமிளகாய் | 150 | 160 | 90 | 120 | 100 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 40 | 40 | 50 | 60 | 100 | 80 |
| போஞ்சி | 80 | 200 | 160 | 180 | 160 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | 30 | 40 | 40 | 50 | 80 | 50 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 25 | 30 | 20 | 40 | 20 |
| தேசிக்காய் | 500 | 600 | 450 | 400 | 500 | 600 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 20-40 | 45 | 30 | 35-45 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | — | — | 180 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 50 | — | 25 | 40 | 60 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 30 | 30 | 40 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 100 | 60 | — | — | — | — | 80 |

உ

சாமியே சரணம் ஐயப்பா



# சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடம் நடத்தும் 34 ஆவது ஆண்டு

# மகரஜோதிப் பெருவிழா

கார்த்திகை முதலாம் திகதி 16.11.2016 முதல் 05.01.2017 வரை 48 நாட்களுக்கு மாலை 6 மணிமுதல் –8.30 மணிவரை சபரிமலை ஸ்ரீ ஐயப்பசுவாமி 18 ஆம் படி விஷேட பூஜை, ஐயப்பன் பஜனை, ஆன்மீக அருளுரை இடம்பெறும்.

**இடம்: கமலா மோடி மண்டபம் (Mody Hall) 26, விவேகானந்த ஹில்- கொழும்பு-13**

34 ஆண்டுகளாக 139 தடவைகள் சபரிமலை புனித யாத்திரை சென்று வரும்

"சர்வதேச இந்துமத குருபீடாதிபதி"

"சபரிமலைக் குரு முதல்வர்" ஆன்மீக அருள்ஜோதி" "சிவாகம கலாநிதி"

## ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார். J. P

அவர்கள் தலைமையில் மகரஜோதிப் பெருவிழா நடைபெறும்.

அனைவரும் வருக! ஐயப்பன் அருள் பெறுக!



சுபஸ்ரீ சாம்பசிவ மணிகண்ட சர்மா B.Eng (சாஸ்தாபீட இளவரசன்)
பிரம்மஸ்ரீ நித்ய சுதானந்த சர்மா (நிர்வாகச் செயலாளர், ஸ்ரீ சாஸ்தாபீடம்)
S. அருணாசலம், S. சத்தியம் (தலைவர்கள், திருப்பணிச் சபை, ஸ்ரீ சாஸ்தாபீடம்)

ஸ்ரீலஸ்ரீ M. விஸ்வநாத் குருக்கள் (கௌரவ போஷகர்- ஸ்ரீ சாஸ்தாபீடம்)
தி.பாலகுமார் (நிர்வாகப் பணிப்பாளர், ஸ்ரீசாஸ்தாபீடம்)
சுப்பையா யோகேஸ்வரன் (திருப்பணிச்சபை செயலாளர் ஸ்ரீ சாஸ்தாபீடம்- செங்கலடி)
U. கஜேந்திரமூர்த்தி, N.லக்ஷ்மன் (பொருளாளர்கள், திருப்பணிச்சபை,ஸ்ரீ சாஸ்தாபீடம்)

**சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடம் 23/1, ரஜமல்வத்த வீதி, கொழும்பு- 15, 077 993 0140**

(6579)




யாழ்.பல்கலைக்கழக மூன்றாம் வருட முகாமைத்துவ பீட மாணவர்கள் சமூக நல உறவை மேம்படுத்தும் நோக்குடன் கடந்த வாரம் குழு 1 மாணவர்கள் மருதனார் மடம் சென்ற் மதர் மகளிர் மனறத்திற்கு சென்று தங்களால் முடிந்த சேவைகளை வழங்கினர்.

# யாழில் நீரிழிவு தினத்தை முன்னிட்டு சைக்கிளோட்டமும் நடைபயணமும்

உலக நீரிழிவு தினமானது வருடந்தோறும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகிறது. இன்றைய உலகை உலுக்கி வரும் தொற்றாநோய்களுள் மிக முக்கிய இடத்தை வகிப்பது நீரிழிவு நோயாகும்.

ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றும் தேக அக்கறையற்ற வாழ்க்கை முறை என்பவற்றினால் நீரிழிவு போன்ற தொற்றாநோய்களின் தாக்கம் இன்று பல்கிப் பெருகி வருகின்றது.

இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டோரின் சதவீதமானது கணிசமான அளவு அதிகரித்துச் செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு ஆரோக்கியமான உணவு முறை மற்றும் உடற்பயிற்சியின் அவசியம் பற்றிய விழிப்புணர்வை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்துவது இன்றியமையாததாகும்.

நீரிழிவு நோய் தொடர்பான பல்வேறுபட்ட விழிப்புணர்வுச்செயற்றிட்டங்களை யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையமானது காலங்காலமாக முன்னெடுத்து வருகின்றது.

அந்தவகையில் இம்முறையும் உலக நீரிழிவு தினத்தையொட்டி நீரிழிவு சிகிச்சை நிலையமானது பல செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளது.

இதன் ஒரு அங்கமாக யாழ். போதனா வைத்தியசாலை விளையாட்டு மருத்துவ அலகுடன் இணைந்து வைத்தியசாலை ஊழியர்களிடையே நாளை நவம்பர் 12ஆம் திகதியன்று (சனிக்கிழமை) உந்துருளி (சைக்கிள்) ஓட்டப் போட்டியொன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இதேபோல எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி (திங்கட்கிழமை) நீரிழிவு நடைப் பயணமும் (Diabetes Walk) நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வும் நடைபெறவுள்ளது. இந் நீரிழிவு நடைபயணமானது நவம்பர் 14ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து ஆரம்பித்து பலாலி வீதி, ஸ்ரான்லி வீதி, கே.கே.எஸ் வீதி வழியாக யாழ். பொதுநூலகத்தினை நோக்கிச்சென்றடையவுள்ளது.

இதன் இறுதியில், யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சைக்கிளோட்டப் போட்டி மற்றும் உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கவிதை மற்றும் சித்திரப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-9)

# கொலைச் சந்தேக நபர்கள் இருவர் பொலிஸரால் கைது

கட்டுநாயக்க கிழக்கு மடவள பிரதேசத்தில் இடம் பெற்ற கொலைச் சம்பவம் ஒன்றின் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்கு அருகில் பொல்லால் தாக்கி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மினுவாங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய ஒருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

அதே பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாய்த்தர்க்கம் மோதலாக மாறியதில் இந்தக் கொலை இடம் பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இதேவேளை றத்மலான பிர தேசத்தில் விடுதி ஒன்றில் இடம் பெற்ற கொலைச் சம்பவத்தின் சந்தேகத்தில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 7ஆம் திகதி நபர் ஒருவர் கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்ததுடன், சம்பவம் தொடர்பில் கல்கிஸ்ஸ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

குட்டிகல பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய பெண்ணொருவரே கைது செய்யப்பட்டுள்ளதுடன், உயிரிழந்த நபரின் கள்ளக் காதலியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (இ-7-10)

# தமிழ் சினிமா வரலாறு

## சொந்தப் படங்களால் ஏற்பட்ட சோதனை! 297

யார் கொடுப்பார்கள்? அப்படி நாணயமானவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? ஏதோ இரண்டொருவர் இரக்கப்பட்டுக் கொஞ்சத் தொகை கொடுத்தார்கள். மற்ற அனைத்துமே போய் விட்டன.

கம்பனி வீட்டைக் காலி செய்து இருந்த சாமான்களை எல்லாம் அள்ளிக்கொண்டு வந்து வீட்டிலே போட்டேன். சுமார் ஐம்பதினாயிரம் ரூபாய் பெறக்கூடிய ஆடையணிமணி உபகரணங்களை எல்லாம் எட்டாயிரம் ரூபாய்க்கு விற்று விட்டேன். வேலையாட்களையெல்லாம் நிறுத்தி விட்டேன்.

படம் எடுப்பதை நிறுத்தி விட்டேன், கம்பனியை மூடி விட்டேன் என்றதும் சுமார் முப்பது கடன்காரர்கள் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார்கள். காலையில் ஒரு ஜப்தி. மாலையில் ஒரு ஜப்தி என்று வந்து கொண்டே இருந்தது. அனைத்தையும் நான் சமாளித்தேன்.

**கடனை அடைத்தேன்**

மூன்று மாதங்களுக்குள்ளாக 34 வழக்குகள் நீதிமன்றுக்கு வந்துவிட்டன. நேரே சட்டத்தரணி வி.பி.ராமனிடம் போனேன்.

ஒரு வருடத்திற்குள் பணம் சம்பாதித்து கடனை கட்ட முடியுமா? என்று கேட்டார் அவர். முடியும் என்றேன்.

ஒரு பக்கம் கடன் வந்தால் ஒரு பக்கம் வரவு வரவேண்டும் அல்லவா? அந்தப் பக்கம் அடி விழுந்த போது இந்தப் பக்கம் ஏராளமான படங்களுக்கு சந்தர்ப்பம் வந்தது. நோட்டெழுதி வாங்கிய பணம் போகத் தொடங்கிற்று!

இவ்வாறு கண்ணதாசன் குறிப்பிட்டுள்ளார்.

**வானம்பாடி**

கவலை இல்லாத மனிதன் படத்துக்குப்பிறகு சென்னை மாநகராட்சி கவுன்சுலராக இருந்த கே.முருகேசனுடன் கூட்டு சேர்ந்து வானம்பாடி என்ற படத்தை கண்ணதாசன் எடுத்தார்.

இந்தப் படம் வெற்றிகரமாக ஓடியது. கண்ணதாசனுடைய கடனில் ஒரு பகுதியை அடைக்க இப்படம் உதவியது.

பின்னர் கோவை செழியனுடன் சேர்ந்து சுமைதாங்கி என்ற படத்தைத் தயாரித்தார். இந்தப்படமும் இலாபம் சம்பாதித்துக் கொடுத்தது.

மொத்தத்தில் அப்போதெல்லாம் ஏராளமாகப் பணம் புரண்டு விளையாடிற்றே தவிர கையிலே தங்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார் கண்ணதாசன்.

**இரத்தத் திலகம்**

1962 இல் இந்தியா மீது சீனா படையெடுத்தது. அதை அடிப்படையாக வைத்து கண்ணதாசன் கதை,வசனம் எழுதிய இரத்தத் திலகம் என்ற படத்தை பஞ்சு அருணாசலம் தயாரித்தார்.

சிவாஜிகணேசனும் சாவித்திரியும் நடித்த இப்படம் வெற்றிகரமாக ஓடியது. பழைய மாணவர் முத்தையாவாக கண்ணதாசன் தோன்றி ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு ஒரு கோல மயில் என் குடியிருப்பு என்று பாடுவார்.



எம்.ஜி.ஆருடன் கண்ணதாசன்.

1964இல் மீண்டும் சொந்தப் படத்தயாரிப்பில் ஈடுபட்டார் கண்ணதாசன். படத்தின் பெயர் கறுப்புப் பணம். பாலாஜி, டி.எஸ்.பாலையா, கே.ஆர். விஜயா ஆகியோர் நடித்த இப்படத்தில் முக்கிய வேடத்தில் கண்ணதாசனே நடித்தார். படம் சுமாராகத்தான் ஓடியது.

கவலை இல்லாத மனிதன் அனுபவத்திற்குப் பிறகும் சொந்தப்படம் தயாரித்தது பற்றி கண்ணதாசன் பின்னர் எழுதும்போது ஒரு தவறு செய்து விட்டு அது தவறு என்று தெரிந்த பின்னும் மீண்டும் அதே தவறை செய்தேன் என்று குறிப் பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் அரசை கவிஞராக (ஆஸ்தான கவிஞர்) கண்ணதாசனை எம்.ஜி.ஆர். நியமித்தார்.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஆட்சியின் போது நாமக்கல் கவிஞர் வெ.ராமலிங்கம் பிள்ளை அரசவைக் கவிஞராக இருந்தார். அதன் பிறகு அப்பதவி இரத்து செய்யப்பட்டது.

1977 தேர்தலில் எம்.ஜி.ஆர்.வெற்றி பெற்று தமிழக முதலமைச்சரானார். அவர் கண்ணதாசனை 28.03.1978 இல் அரசவைக் கவிஞர் ஆக நியமித்தார்.

**குடும்பம்**

கண்ணதாசனுக்கு மூன்று மனைவிகள். முதல் மனைவி பெயர் பொன்னழகி என்கிற பொன்னம்மா. இவர்களுக்கு கண்மணிசுப்பு, கலைவாணன், ராமசாமி, வெங்கடாசலம் ஆகிய 4 மகன்கள். அலமேலு, தேனம்மை, விசாலாட்சி ஆகிய 3 மகள்கள் (விசாலாட்சி என்பது கண்ணதாசனின் தாயாரின் பெயர்)

(தொடரும்)

குறைகளை விட அதை திருத்தி அமைக்க வழி என்ன என்று கண்டு பிடியுங்கள்.
-ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழினத்தை அழிக்கவல்ல 'ஊழல்' என்னும் பெருங்கொடுமை

தமிழ் மக்கள் தம்வாழ்வை நெறிப்படுத்துவதற்கு யாரிடமும் செல்ல வேண்டியதில்லை. வாழ்க்கையை எப்படித் திட்டமிட வேண்டும் என்பது முதல் எப்படி வாழ வேண்டும் என்பது வரை நம் வள்ளுவப் பெருமகனார் நமக்கு திருக்குறள் மூலம் உரைத்துள்ளார்.

திருக்குறளைக் கற்று அதன் வழி நடப்போமாக இருந்தால் இந்த உலகம் நம்மைப் போற்றும். எனினும் திருக்குறள் பற்றி நாம் கவனம் கொள்வதில்லை. இன்று வடக்கு மாகாண சபையில் ஊழல் தொடர்பான விவகாரங்களே பேசுபடுபொருளாகியுள்ளன.

வடக்கு மாகாண அரசு அமையப்பெற்று ஒரு சில வருடங்கள் நிறைவடைவதற்குள் அந்தச் சபையின் விவாதம் வட மாகாணத்தின் அதிகார எல்லைக்குள் நடந்த ஊழல் தொடர்பானதாக இருப்பது வேதனைக்குரியது.

இன விடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்டு ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் தம் உயிரை ஆகுதி ஆக்கிய வரலாறு இன்னமும் சுட்டபடி இருக்கையில்; யுத்தத்திற்குள் அகப்பட்டு பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் பலியாகிப் போன நிலையில், தமிழினத்தை எப்படியும் நசுக்கி விட வேண்டும் என, பேரினவாதிகள் திட்டம் தீட்டி; அதனை நடைமுறைப்படுத்தி வரும் நேரத்தில், எங்கள் வடபுலத்தில் உள்ள சில அமைப்புகளில் ஊழல் நடந்துள்ளன என்ற செய்தி தீரா வேதனையைத் தருகிறது.

ஏன்? எப்படி? என்று எழுகின்ற கேள்விகளுக்குள் நாங்கள் கடந்த முப்பது ஆண்டு காலமாக அனுபவித்த துன்பங்கள், துயரங்கள், இழப்புகள், குடிபெயர்வுகள், தியாகங்கள், அர்ப்பணிப்புகள் என அனைத்தும் வீணாகிப் போய் விட்டதா? என்ற ஏக்கம் உள்ளடங்கியுள்ளது.

போரில் தோற்கடிக்கப்பட்ட எம் இனத்தை நாம் அல்லவா தூக்கிவிட வேண்டும். ஆனால் தூக்கி விடுவதற்குப் பதிலாக நாமே குழிவெட்டி அதற்குள் நம் இனத்தை தள்ளி விடுகிறோம் என்றால் இது எந்த வகையில் நியாயமாகும்?

ஊழல்கள் நடைபெறுவதைத் தடுப்பதற்கு எத்தனையோ பொறிமுறைகள் உண்டு. எனினும் அவற்றையும் கடந்து ஊழல் நடக்கிறது எனில் கடமை செய்கின்றவர்கள் தம் கடமையை கடமையாகச் செய்யவில்லை என்றே பொருள் கொள்ள வேண்டும்.

ஊழல் நடந்து விட்டது என்று விவாதம் நடத்தி தம் தம் கருத்துக்களை அவைக்கும் போது சனத்துக்கும் தெரியப்படுத்துவதை விடுத்து, ஊழல் இடம் பெறாமல் தடுப்பது பற்றி ஆராய்வதே நல்லது. ஆனால் அதுதான் நம்மிடம் இல்லையென்றாயிற்றே.

இதன் காரணமாக ஊழல்கள் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இன்று ஊழல் நடந்ததாக அறியப்பட்ட நிறுவனங்கள் ஒரு சிலவாக இருக்கலாம். ஆனால் நாளை இந்தக் கண்டுபிடிப்புகள் இன்னமும் பலவாக இருக்கலாம் என்ற ஏக்கம் மக்களிடம் இருக்கவே செய்கிறது.

ஆக, உயர் அதிகாரிகள் தம் நிறுவனத்தை மேற்பார்வை செய்ய வேண்டும். அதற்கேற்ற பொறி முறைகளை வகுத்து அவற்றை கிரமமாக அவதானித்து நிலைமையை சுமுகமாக ஆக்குவதில் கவனம் செலுத்த வேண்டும்.

இல்லையேல் ஊழல்கள் மலிந்து பெருகும். அதன் பின்னர் ஊழலைக் கட்டுப்படுத்துவதென்பது முடியாத காரியமாகிவிடும்.

வள்ளுவன் சொல்கின்றான் ''வருமுன்னர் காவா தான் வாழ்க்கை எரி முன்னர் வைத்தூறு போலக் கெடும்'' என்று. இக்குறள் பற்றி நாம் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும்.

## கலைஒளி விழா

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் மத்திய சனசமூக நிலைய கண்ணகை முன்பள்ளி நடத்தும் கலைஒளி விழா நாளை 12 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மணி மண்டபத்தில் இடம்பெறும்.

கண்ணகை அம்பாள் தேவஸ்தான தலைவர் திரு ஞானசம்பந்தர் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஏழாலை மகா வித்தியாலய அதிபர் வே. உதயமோகன், கௌரவ விருந்தினர்களாக சுன்னாகம் வாழ்வக தலைவரும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளருமான ஆறுமுகம் ரவீந்திரன், சுன்னாகம் பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரி எம்.செல்வகுமார், சிறப்பு விருந்தினர்களாக யாழ். ஏழாலை சைவ மகாஜன வித்தியாலய அதிபர் திருமதி.தேவகி புவனேஸ்வரன், ஜே/205கிராம உத்தி யோகத்தர் திருமதி சசிகலா தினேஸ். யாழ். புன்னாலைக் கட்டுவன் சித்தி விநாயகர் பாட சாலையின் ஆசிரியர் திருமதி. சிவகாந்தன் சீமாட்டி ஆகி யோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-78)

## மழலைகளுடன் மகிழ்வோம்

அண்ணாசிலையடி வள்ளுவர் சனசமூக நிலையம் நடத்தும் வள்ளுவர் முன்பள்ளி, இளங்கோ முன்பள்ளி மழலைகளுடன் மகிழ்வோம் நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். கரணவாய் மணியகாரன் தோட்ட அ.த.க. பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

வள்ளுவர்சனசமூகநிலையத்தலைவர் மு.மகேந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராசா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்கள் வே.சிவயோகன், அ.பரஞ்சோதி, க.தர்மலிங்கம்,சி.அகிலதாஸ், ச. சுகிர்தன்,எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7-60)

## பரிசளிப்பு விழா

யாழ்.மாணிக்கவாசகர் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் கிருஷ்ணப்பிள்ளை கிருஷ்ணகரன் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப்பணிப்பாளர் செல்லத்துரை உதயகுமார், சிறப்பு விருந்தினராக கே.கே. யோகநாதன் (கரவெட்டி பிரதேச செயலகம்), கௌரவ விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக சிரேஷ்ட விரிவுரையாளர் ஐ.நகுலன், ஓய்வுநிலை நில அளவையாளர் வி.கே. தங்கமயில் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். பரிசில்களை திருமதி நந்தினி உதய குமார் வழங்குவார். (இ-3-60)

## மாணவனை பாம்பு தீண்டியது

(யாழ்ப்பாணம்)

பாம்புக்கடிக்கு இலக்காகிய சிறுவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளான்.

கடந்த 8 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

மேற்படி சம்பவத்தில் புத்தூர் கிழக்கு வரபாணியைச் சேர்ந்த வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்கள் சிவராசா மதுசாந்தன் பாம்புக் கடிக்கு இலக்காகினார்.

செவ்வாய்க்கிழமை இரவு வேளை சிறுவன் நுளம்பு வலைக்குள் தூங்கிக் கொண்டிருந்த வேளை சிறுவன் ஏதோ கடித்தது என தாயாரிடம் கூறியதாகவும் நேற்று முன்தினம்புதன்கிழமைகாலை அச்சுவேலி வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது சிறுவன் பாம்புக் கடிக்கு உள்ளாமை தெரிய வந்துள்ளது.

சிறுவனுக்கு பாம்பின் விசம் ஏறியுள்ளது. மேலதிக சிகிச்சைகளுக்காக சிறுவன் யாழ். போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (இ-3,30)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்.இராமநாதன் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு பாடசாலையின் அருணாச்சலம் மண்டபத்தில் இடம்பெறும்.

பாடசாலைஅதிபர்கேகிருஷ்ணப்பிள்ளை தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் செல்வரத்தினம் சந்திரராஜா கௌரவ விருந்தினராக திருமதி சாவித்திரி நவரட்ணம் (தலைவர், O.G.A-லண்டன்) ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நினைவுப்பேருரையை யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி அருட்செல்வி கிருபைராஜா, பரிசில்களை திருமதி ரோகினி ரவீந்திரன் ஆகீயோரும் வழங்கவுள்ளனர். (இ-3)

## சந்திரமௌலீஸ்வரர் ஆலய கால சம்ஹாரப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் அருள்மிகு ஸ்ரீ சாந்த நாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலய கால சம்ஹாரப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணி யளவில் இடம்பெறும். (இ-3)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2016

''மரங்களின் மத்தியில் செலவழிக்கும் நேரம் ஒருபோதும் வீணடிக்கப்படுவதில்லை''
-கத்ரீனா மேயர் (அமெரிக்க எழுத்தாளர்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும்தாழ அழுத்த மின் விநியோக மார்ககங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருநது 6 மணி வரை யாழ் பிரதேசத்தில கொத்தியாவத்தை, அச்செழு, கோம்பையன்மணல் ஒருபகுதி, காக்கைதீவு ஒருபகுதி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் வவுனியா கிறிட்டிலிருந்து வவுனியா நகரம் வரை, பூங்கா வீதி, ஓவியா விடுதி, இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், தேசிய சேமிப்பு வங்கி, மக்கள் வங்கி, வவுனியா வைத்தியசாலை, கச்சேரியடி நீர்ப்பாசன சபை, வவுனியா மாவட்ட செயலகம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## மண்டபத் திறப்பு விழாவும் வீராங்கனை கௌரவிப்பும்

யாழ்.உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் பிரதான மண்டபத்திறப்பு விழாவும் தேசிய மட்ட வீராங்கனை கௌரவிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் திருமதி கௌரி சேதுராஜா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி அலுவலக வலயக் கல்விப் பணிப்பாளர் சிவபாதம் நந்தகுமார் கலந்துகொள்ளவுள்ளார்.(இ-7,60)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### விளக்கேற்றும் போது இதைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கவும்

பெரும்பாலான வீட்டில் உள்ள பூஜை அறைகள் இன்றைய காலகட்டத்திற்கு ஏற்ப மாடர்னாக அமைக்கப்பட்டு விட்டன.

பூஜை அறையில் ஏற்றும் விளக்குகளும் தற்போது தங்கத்திலும், வெள்ளியிலும் மாறிவிட்டன.

இந்நிலையில், தங்கம் தானே அழுக்கு பிடிக்காது என நினைக்கக்கூடாது. தினமும் அதை சுத்தம் செய்ய வேண்டும். இதிலும், பித்தளை விளக்காக இருந்தால் கண்டிப்பாக தேய்த்து சுத்தம் செய்ய வேண்டும்.

விளக்கு என்பது வெளிச்சம் சம்பந்தப்பட்ட சமாசாரம் இல்லை. அது மங்களகரமானது. வெறும் வெளிச்சத்தைக் காட்ட வேண்டுமானால் மின்விளக்கே போதுமே.

விளக்கு எரிகிறது என்றால் அங்கே அக்னி பகவான் அமர்ந்திருக்கிறார் என்று பொருள். இதனை நன்றாக மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

மேலும், விளக்கில் உபயோகப்படுத்தும் திரியையும் தினம் மாற்ற வேண்டும்.

தினமும் திரி மாற்ற வேண்டும். விளக்கை சுத்தம் செய்ய வேண்டும்.

இதற்கு சோம்பலாக இருந்தால் விளக்கே ஏற்றாதீர்கள். கடவுளை மனதில் நினைத்துக் கொண்டாலே போதும்.



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### ஆத்ம நம்பிக்கையும் சரணாகதியும்

ஆத்ம நம்பிக்கைக்கு அளவற்ற துணிவு வேண்டும். வேறு யாருடைய துணையுமின்றி எல்லாவற்றுக்கும் உன்னையே நீ சார்ந்திருக்கும்போது உனக்கு மிகவும் துணிவு தேவை.

சரணாகதிக்குக் கொஞ்சம் துணிவு இருந்தால்போதும்.

சரணடைய முடியாதவனால் ஆத்ம நம்பிக்கை கொள்ள முடியாது.

சரணடைய உனக்குப் போதுமான துணிவு இல்லையென்றால் ஆத்ம நம்பிக்கையுடன் இருக்கவும் முடியாது. நீ உன்னையே முட்டாளாக்கிக் கொள்கிறாய்.

உன்னிடத்தில் நூறு ரூபாயே இல்லை எனும்போது ஆயிரம் ரூபாயை வைத்திருக்க முடியாது. சிறிதளவு பயம்கூட ஆத்ம நம்பிக்கைக்கு கேடு விளைவிக்கும்.

ஐம்பது ரூபாயில் பத்து ரூபாய் அடங்கியுள்ளது. ஆத்ம நம்பிக்கையில் சரணாகதி அடங்கியுள்ளது.

பலர் சரணாகதியைத் தங்களுடைய பொறுப்பிலிருந்து தப்பிக்கும் ஒரு வழியாக நினைக்கின்றனர். பிறகு அவர்களுடைய தொல்லைகளுக்குக் காரணம் கடவுள் என்று நிந்திககின்றனர். ஆனால் உண்மையான பூரண சரணாகதி என்பது எல்லாவற்றுக்கும் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்வதேயாகும்.

சுசன்னா: எப்படி நாம் அதைச் செய்ய முடியும்?

ஸ்ரீஸ்ரீ: பொறுப்பேற்றுக்கொள். உதவிக்குக் கடவுளைப் பிரார்த்தனை செய்.

சரணாகதி உன்னை ஆத்ம நம்பிக்கைக்கே அழைத்துச் செல்லும்.

ஏனென்றால் பரமாத்மாவைத் தவிர வேறெதுவும் இல்லை.

ஸ்ரீஸ்ரீ அவர்களின் கிறிஸ்துமஸ் செய்தி: நீ அன்பின் ஊற்றாக இரு.

# ஊரெழு றோயல் வி.க.வீழ்த்தி மைக்கல் கிண்ணத்தை கைப்பற்றியது யங்கென்றீஸ்









பரபரப்பான இறுதிப்போட்டியில் ஊரெழு றோயல் அணியை வீழ்த்தி மாலுசந்தி மைக்கல் கிண்ணத்தை கைப்பற்றியது இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழகம்.

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திவந்த உதைபந்தாட்ட தொடரின் இறுதிப்போட்டி அண்மையில் கழகத்தலைவர் த.வேணுகாணன் தலைமையில் நடைபெற்றது.

இவ் இறுதிப்போட்டியில் யாழ். மாவட்டத்தில் முன்னணி கழகங்களான ஊரெழு றோயல் அணியை எதிர்த்து இளவாலை யங்கென்றீஸ் அணி மோதியது.

விறுவிறுப்பாக ஆரம்பமாகிய போட்டியில் 9 ஆவது நிமிடத்தில் றோயல் அணி முன்கள வீரர் கஜகோபன் கோலினை பெற்றுக் கொடுத்தார். தொடர்ந்து நடைபெற்ற போட்டியில்இருஅணிகளும் சிறப்பாக ஆடிய போதும் முதற்பாதி வரை எந்தவித மான கோலினையும் போட முடிய வில்லை. 1-0 என்ற கோல்கணக்கில் றோயல் அணி முன்னிலையில் இருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் 33 ஆவது நிமிடத்தில் அனோஜன் தனது அணிக்கான கோலினை பெற்றுக்கொடுத்தார். விறுவிறுப்பாக தொடர்ந்த ஆட்டத்தில் 41 ஆவது நிமி டத்தில் மகிபனும் 44 ஆவது நிமிடத்தில் மீண்டும் அனோஜனும் கோலினை பெற்றுக் கொடுத்து தமது அணியின் வெற்றியை உறுதிசெய்தனர். ஆட்டம் முடியும் சில நிமிடங்கள் இருக்கையில் றோயல் அணி வீரர் கஜகோபன் கோலினை பெற்றுக்கொடுத்து ஆட்டத்தின் பரபரப்பை ஏற்படுத்தினார். இறுதி வரை ஊரெழுறோயல்அணிபோராடி தோற்றது. இறுதியில் 3-2 என்ற கோல்கணக்கில் இளவாலை யங்கென்றீஸ் அணி வெற்றிபெற்று மாலுசந்தி மைக்கல் வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றியது.

ஆட்டநாயகனாக இளவாலை யங்கென்றீஸ்அணியின் வீரர் அனோஜனும் தொடர்நாயகனாக ஊரெழு றோயல் அணி வீரர் கஜகோபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நெல்லியடி செல்லமுத்து புடைவை கடை அனுசரணையுடன் சம்பியனாகிய இளவாலை யங்கென்றீஸ் அணிக்கு ரூபா 30000 பணப் பரிசும் வெற்றிக்கேடயமும் இரண்டாவது இடத்தைப் பெற்ற ஊரெழு றோயல் அணிக்கு ரூபா 15000 வெற்றிக்கேடயமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கலந்து கொண்டு சிறப்பித்தார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்கள் ச.ஆனந்தி, வே.சிவயோகன்,எம்.கே.சிவாஜிலிங்கம்,க.தர்மலிங்கம், ச.சுகிர்தன், என்.கே. விந்தன், கௌரவ விருந்தினர்களாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பொ.கஜேந்திரகுமார், கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவசிறி, பருத்தித்துறை மின்சார சபை அத்தியட்சகர், கே.கமலகோபன், நெல்லியடி பொலிஸ் நிலை பொறுப்பதிகாரி ஆர்.பி.ஏ பியந்த,வடமராட்சி உதைபந்தாட்ட லீக் தலைவர் டி.எம். வேதாபரணம்,மாலுசந்தை சிறி வரதராஜ விநாயகர் ஆலயத் தலைவர் எஸ்.சிறிசண்முகதேவ் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (க)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 6பேர் ஐந்து பந்துப் பரிமாற்றம் கொண்ட மென்பந்துப் போட்டிக்கு யாழ். மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக்கழகங்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

மேற்படி போட்டியானது எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

போட்டி கட்டணமாக ஆயிரம் ரூபா அறவிடப்படுவதோடு போட்டியானது காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரை நடைபெறும்.

இப் போட்டியில் சம்பியனாகும் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும்.

இக் கிரிக்கெட் சுற்றுத் தொடரில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் திஸாந்தன் 077 172 5432 என்பவருடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு பதிவினை மேற்கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டு குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (க)

## Northern challengers உதைபந்தாட்ட போட்டி
## 3வது சுற்றில் விடத்தல்தீவு ஐக்கியம், யங்கம்பன்ஸ்







நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் Northern Challengers -2016 இன் உதைபந்தாட்டப் போட்டியில் கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் முதலாவது ஆட்டத்தில் சிவானந்தா அணியை எதிர்த்து விளையாடிய விடத்தல்தீவு ஐக்கியம் 0:0 என்ற கோல்கணக்கில் முடிவடைய சமநிலை தவிர்ப்பு மூலம் 5:4 என்ற கோல் கணக்கில் விடத்தல்தீவு ஐக்கியம் வெற்றி பெற்று மூன்றாம் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

இரண்டாம் போட்டியில் தாழ்வுபாடு சென் அன்ரனீஸ் அணியை எதிர்த்து விளையாடிய யங்கம்பன்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

சிவானந்தா தாழ்வுபாடு சென் அன்ரனீஸ் அணிகள் இத் தொடரில் இருந்து வெளியேறியமை குறிப்பிடத்தக்கது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## கிருஸ்ணா வி.கழகம் நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

### செல்வபுரம் யூட்ஸ் சம்பியன்





முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட லீக்கினால் ஒழுங்கு செய்யப்பட்டு கேப்பாபிலவு கிருஸ்ணா விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் செல்வபுரம் யூட்ஸ் விளையாட்டுக்ககழகம் கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது.

செல்வபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் கொட்டும் மழைக்கு மத்தியில் அண்மையில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் முள்ளியவளை மாமூலை விண்ணொளி விளையாட்டுக்கழகத்திற்கு எதிராக விளையாடிய செல்வபுரம் யூட்ஸ் விளையாட்டுக்கழகம் 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

குறித்த சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் பிரதம விருந்தினராக ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு போட்டியை ஆரம்பித்து வைத்ததுடன் பங்கேற்றஇருஅணிவீரர்களுக்கும் தமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார். (க)



கற்பகச் சோலை இளைய நட்சத்திர விளையாட்டுக் கழகத்திற்கு திருமதி. அனந்தி சசிதரனால் விளையாட்டு உபகரணங்கள் அண்மையில் வழங்கப்படுவதனை படத்தில் காணலாம்.

# இலங்கை...

பெற்றுள்ள டொனால்ட் ட்ரம்ப் ஆட்சிபீடம் ஏறியதும், இலங்கை தொடர்பில் தற்போது ஒபாமா தலைமையிலான அரசு கடைபிடித்து வரும் வெளிநாட்டுக் கொள்கைகள் மாற்றமடையுமா என ஊடகவியலாளர் ஒருவர் நேற்று கேட்டதற்கு பதிலளிக்கையிலேயே அமெரிக்கத் தூதுவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை தேசிய வெளிவிவகாரக் கொள்கையொன்றுக்கு அமையவே செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்ட தூதுவர் அதுல் கேஷாப், தேர்தலுக்குப் பின்னர் ஜனாதிபதி மாறினாலும், வெளிநாட்டுக் கொள்கைகள் மாறாது என குறிப்பிட்டார்.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இலங்கையில் மக்கள் எவ்வாறு தற்போதைய அரசாங்கத்திற்கு வாக்களித்திருந்தார்களோ அது போன்றே அமெரிக்க மக்களும் அமைதியான ஒழுங்கு முறையான அதிகார மாற்றத்திற்காக தமது வாக்குப்பலத்தை பயன்படுத்தியுள்ளதாகத் தெரிவித்தார்.

கடந்த 240 ஆண்டுகளாக தொடர்ந்து முன்னெடுக்கப்படும் இந்த மிகச்சிறந்த ஜனநாயக நடைமுறை மக்களின் விருப்பினை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது என்றும் பெருமிதம் வெளியிட்ட அமெரிக்கத் தூதுவர், ஜனநாயகத்தின் மீதான மக்களின் அர்ப்பணிப்பை அமெரிக்கத் தேர்தலில் உறுதிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது என்றால் மிகையாகாது என்றும் குறிப்பிட்டார்.

அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கை என்பது அமெரிக்காவின் தேசிய நலன்களையும் அமெரிக்க தேசிய விழுமியங்களையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது என்றும் தெரிவித்துள்ள அவர், அமெரிக்க மக்களின் விழுமியங்கள் என்பது நிர்வாகங்கள் மாறுகின்ற போது மாறாது தொடர்ந்து உறுதியாகக் கடைபிடிக்கப்படும் ஒன்றாகவே இருந்து வந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஒபாமா, புதிதாக ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ட்ரம்ப மற்றும் ஹிலாரி கிளின்டன் ஆகியோர் சிறப்பான செய்திகளை தேர்தலையடுத்து தெரிவித்திருப்பதாகவும் அமெரிக்கத் தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த உரைகளில் நாட்டை ஒருமைப்படுத்துவது, நோக்கங்களை ஒருமுகப்படுத்துவது ஆகியவற்றை வலியுறுத்தியிருந்தனர்.

அத்தோடு தன்னுடைய இராஜாங்கத் திணைக்கள தொழில்சார் வாழ்க்கையில் வெளிவிவகாரக் கொள்கைகளில் பெருமளவில் தொடர்ச்சித்தன்மை இருந்ததையே அவதானித்துள்ளதாகவும் அதுல் கேஷாப் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிவிவகாரக் கொள்கையென்பது அரச நிறுவனங்கள், அமெரிக்க மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அமெரிக்க அரசியல் சாசனம் ஆகியவற்றால் வடிவமைகக்கப்பட்டதாக காணப்படுவதே இதற்குக் காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி இதனடிப்படையிலேயே வெளிவிவகார கொள்கைமீதான அதிகாரத்தைக் தன்னத்தே கொண்டிருக்கின்றார் என்றும், அது எப்போதுமே அமெரிக்க மக்களின் விருப்பையும், நலன்களை விழுமியங்களைப் பிரதிபலிப்பதாகவே அமைந்திருக்கின்றது என்றும் அதுல் கேஷாப் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை தன்னுடைய பதவிக்காலத்தில் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் என்ன செய்ய விரும்புகின்றார் என்பதை பார்ப்பதற்கு அனைவரும் ஆவலாக இருப்பதாகவும் அமெரிக்கத் தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

# போர்க் குற்ற...

விடுவித்துள்ள அறிக்கையில்,

இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ள உறுதிமொழிகள் எந்தவித தாமதமும் இன்றி நிறைவேற்ற வேண்டும். போர்க்குற்றங்கள் மற்றும் மனிதஉரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்ய கலப்பு சர்வதேச நியாயப் பொறிமுறை கட்டாயம் உருவாக்கப்பட வேணடும். இந்த விசாரணைப் பொறிமுறைக்கு அனைத்து தரப்பினராலும் இழைக்கப்பட்ட குற்றங்கள் குறித்து நடவடிக்கை எடுப்பதற்கு அதற்கு தெளிவான அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

பரந்த உலகளாவிய அதிகார வரம்புகளுடன் குறித்த பொறிமுறை உருவாக்கப்படுவதுடன் மூலமே நீதியான நடைமுறையை உருவாக்க முடியும். இதன்படி சர்வதேச சட்டத்தின் கீழ் அனைத்து குற்றங்களுக்குமான தீர்ப்பு வழங்ககூடிய அதிகாரத்தை கலப்பு நீதிமன்றம் கொண்டிருக்க வேண்டும்.

அதிகார மட்டம் உட்பட அனைத்து மட்டங்களிலும் காணப்படும் சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்கு தொடுப்பதற்கு விசேட சட்டத்தரணி அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் சர்வதேச மன்னிப்பு சபை சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் இந்த பொறிமுறைக்கான நீதிபதிகளின் தெரிவு, வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் பகிரங்கமாகவும் அமைய வேண்டும் எனவும் மன்னிப்பு சபை குறிப்பிட்டுள்ளது. (செ-11)

# 4 கிராம் குடுவுடன்...

ப்பட்டுள்ளனார்.

மேற்படி கைது நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தரை குறித்த சந்தேக நபர் தாக்கியதால் காயமடைந்த அவர் யாழ். போதனா வைத்திசாலையில் சிகிச்சை பெற்றிருந்தார்.

யாழ்.பொலிஸார் 4 பேர் நேற்று கொக்குவில் பகுதிக்கு சென்று பிரஸ்தாப நபரை கைது செய்துள்ளார். கைது செய்யப்பட்ட நபரை அழைத்துச் சென்ற போது அவர் தப்பிக்க முயற்சித்து குறித்த பொலிஸ் கான்ஸ்டபிளை கடித்துள்ளார். இதன்போது காயப்பட்ட கான்ஸ்டபிள் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை கைது செய்யப்பட்ட இளைஞரை பொலிஸார் தடுப்பு காவலில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றதுடன் அவரை இன்று வெள்ளிக்கிழமை யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கையும் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (செ-4)

# சர்ச்சைக்குரிய புத்தர் சிலை ஒரு வாரத்தில் அகற்றப்படும்

## பிரதமர் ரணில் உறுதியளிப்பு

(அம்பாறை)

அம்பாறை, இறக்காமம், மாணிக்கமடு, மாயக்கல்லிமலை பிரதேசத்தில் பலவந்தமாக நிறுவப்பட்டுள்ள புத்தர்சிலை, ஒரு வார காலத்துக்குள் அங்கிருந்து அகற்றப்படும் என, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமிடம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

அலரி மாளிகையில், அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில், கடந்த செவ்வாய்க்கிழமை சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன்போதே, பிரதமர் மேற்கண்ட வாக்குறுதியை வழங்கினார் என்று, அமைச்சர் ஹக்கீமின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான தயா கமகே, குறித்த சிலை தொடர்பில் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்துக்கள் பற்றி அமைச்சர் ஹக்கீம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இதன் போது எடுத்துரைத்துள்ளார்.

இவற்றை செவிமடுத்த பிரதமர், பலவந்தமாக நிறுவப்பட்ட சர்ச்சைக்குரிய சிலையை அகற்ற ஒரு வாரகால அவகாசம் கேட்டுக் கொண்டதுடன், அதற்கான நடவடிக்கைகளை தான் முன்னெடுப்பதாகவும் உறுதியளித்தார் என ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இந்தப் பேச்சுவார்த்தையில், அமைச்சர் மனோ கணேசனும் பிரசன்னமாகி இருந்தார் என ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (செ)

# வீதி விபத்தில் ஆசிரியர் காயம்

(கிளிநொச்சி)

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து அருகில் நின்ற மாட்டுடன் மோதியதில் ஆசிரியர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பளை வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் ஏ9 வீதி கிளிநொச்சி பளைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் வல்வெட்டித்துறை சமரபாகு பகுதியினை சேர்ந்த கணேசன் சைவஇறைமணி (வ்யது 55) என்ற ஆசிரியரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்த ஆசிரியரை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்த பளைப் பொலிஸார் சம்பவம் குறித்து விசாரணையும் செய்திருந்தனர். (செ)

# இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளராக ஜயமான்ன நேற்று நியமனம்



(கொழும்பு)

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் புதிய பணிப்பாளர் நாயகமாக ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் இந்த நியமனம் நேற்று வழங்கப்பட்டுள்ளது.

25 வருட காலத்திற்கும் அதிகமான காலம் சட்ட மாஅதிபர் திணைக்களத்தில் கடமையாற்றிய இவர், சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக செலிஸ்டர் ஜெனரல் பதவி வகித்த போதே இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றிய டில்ஷஷருக்ஷி விக்கிரமசிங்க கடந்த சில தினங்களுக்கு முன்னர் தனது பதவியை இராஜினாமா செய்திருந்த நிலையில், ஆணைக்குழுவின் பிரதி பணிப் பாளர் நாயகமாக கடமையாற்றி வந்த சுனேத்ரா ஜயசிங்க அதன் பொறுப்பை இன்று வரை ஏற்றுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# புலிகளை தோற்கடிக்க உதவிய குடியரசுக்கட்சி மீள ஆட்சியில்!

## மகிந்த மகிழ்ச்சியுடன் ட்ரம்பிற்கு வாழ்த்து

(கொழும்பு)



விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க உதவிய குடியரசுக் கட்சி மீண்டும் அமெரிக்காவில் பதவிக்கு வந்திருப்பதையிட்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக குடியரசுக் கட்சியைச் சேர்ந்த டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், முன்னாள் ஆட்சியாளர் மகிந்த ராஜபக்ஷ, டொனால்ட் ட்ரம்ப்புக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

அவ்வாழ்த்துச் செய்தியில், உங்களின் ஆட்சியில் எல்லா நாடுகளின் இறைமைச் சமத்துவக் கொள்கையின் அடிப்படையிலும், தேசிய அரசுகளின் உள்விவகாரங்களில் தலையிடாத வகையிலும் புதிய உலக ஒழுங்கு ஒன்றை உருவாக்குவதற்கு நாம் எதிர்பார்க்கிறோம்.

முன்னைய குடியரசுக் கட்சி நிர்வாகம், வழங்கிய இராஜதந்திர மற்றும் புலனாய்வு ஒத்துழைப்புகள், எனது அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தோற்கடிக்க உதவியாக இருந்தது என்பதை நன்றியுடன் நினைவு படுத்துகிறேன்.

உங்களது ஆட்சிக்காலத்தில் எல்லா வெற்றிகளையும் பெறுவதற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று மகிந்த தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில விக்கிரமசிங்கவும், டொனால்ட் ட்ரம்புக்கு வாழ்த்துச் செய்திகளை அனுப்பியிருந்தனர்.

இந்த வாழ்த்துச் செய்திகளில், இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் உள்ள ஆழமான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள விரும்புவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ)

# அபிவிருத்தியை இலக்காக கொண்ட பட்ஜெட்-சம்பந்தன்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்ட 2017 வரவு செலவு திட்டம் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டதென தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலை வருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நிதியமைச்சரினால் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவு திட்டம் தொடர்பாக கேட்ட போது அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட சிறந்த வரவு செலவு திட்டம் மக்கள் மத்தியில் போதிய வரவேற்பு பெறும் எனவும் சம்பந்தன் குறிப்பிட்டார். (செ-11)

**A/L கணக்கீடு**

**2017 - 2018**

புதிய பிரிவு

புதிய மாணவர்களுக்கு

2017 -
சனி,
ஞாயிறு 8-10
2018 - 10 - 11

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன

(சி-6368)

**D.C.M**

யாழ்.நகர்






**Accountant Service**

ஆரம்பம் :- 13.11.2016
ஞாயிறு - 08.30 am - 01.30 pm

ஆசிரியர் சேவை
ஞாயிறு - 08.30 am - 12.30 pm

EB Exam
➢ அதிபர் சேவைக்கான வகுப்பு
சனி - 04.00 pm - 07.00 pm
➢ DO,PMA - I,II,III
சனி - 03.00pm - 06.00pm
ஞாயிறு - 04.00pm - 06.00pm

சிங்கள வகுப்புக்கள்
சனி, கிழமை நாட்களில் நடைபெறுகின்றன.

மேற்படி வகுப்புக்கள் எமது கல்வி நிலையத்தில் வட மராட்சி மாணவர்களின் நன்மை கருதி பிரபல ஆசிரியர்களினால் நடத்தப்படுகின்றன.

உயர் கல்லூரி T.P:0778760992

(C-6364)

**D.C.M**

யாழ்.நகர்

**A/L**

வணிகக்கல்வி

**2017 - 2018**

வினாவிடை வகுப்புகள் அலகு ரீதியாக
100 மேற்பட்ட - MCQ

ஆசிரியர்

**V.முரளி**

ஆரம்பம் : 12.11.2016
சனி 8.00 am

(சி-6368)

**NEW MATHS COLLEGE**

**2017 கல்வி ஆண்டுக்குரிய தரம் 6 வகுப்புக்கள்**

தமிழ், ஆங்கில மொழி மூலமான கணிதபாட வகுப்புக்கள்
சனிக்கிழமை (12.11.2016) அன்று
நண்பகல்12.00 மணிக்கு ஆரம்பமாகும்.

இடம் : 15B, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

கனித ஆசானும், நிர்வாகியுமான K.உமாகரன்

தொடர்புகளுக்கு : 077 707 1961

(6582)


# இராணுவ குவி...

வழியாக கஞ்சா வட பகுதிக்கு எவ்வாறு எடுத்து வரப்படுகின்றது என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ் மக்களின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் இடம்பெற்ற காலங்களில் மிக அமைதியாகக் காணப்பட்ட வட பகுதி தற்போது கேரள கஞ்சா வர்த்தகத்தின் கேந்திர நிலையமாக உருவாகியிருப்பதாகவும் முதலமைச்சர் கவலை வெளியிட்டுள்ளார்.

பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான சுயதொழில் வாழ்வாதார உதவித் திட்டங்கள் கையளிக்கும் நிகழ்வு, முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச சபை மண்டபத்தில் நேற்று காலை இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சுயதொழிலுக்கான உதவிகளை வழங்கி வைத்து உரையாற்றிய வடமாகாண முதலமைச்சர், போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை கரையேற்றுவது எவ்வாறு என விழித்துக் கொண்டிருக்கும் வேளைகளில் வாள் வீச்சு, போதைப் பொருள் பாவனை மக்களிடையே அதிகளவில் பரவிவருவது மிகுந்த குழப்பத்தை உண்டுபண்ணுவதாக அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

வட பகுதியில் தொடர்ந்தும் நிலவும் இறுக்கமான பாதுகாப்பு, காவல்களையும் தாண்டிப் போதைப் பொருட்கள் எடுத்துவரப்படுகின்றது எனில், எமது பாதுகாப்பு நடவடிக்கைகளில் எங்கேயோ ஓட்டைகள் காணப்படுகின்றது என்பது புலனாவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வேலியே பயிரை மேய்ந்து வருகின்றதோ எனச் சந்தேகமும் எழுவதாகவும் குறிப்பிட்ட வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், போரில் ஈடுபட்ட படையினர் வட மாகாணத்தில் பல ஏக்கர் காணிகளில் தொடர்ந்து இருப்பது மக்களின் சுமுகமான, சுதந்திரமான வாழ்விற்கு பாதிப்பை ஏற்படுத்தி வருவதாகவும் கவலை வெளியிட்டுள்ளார்.

படிப்படியாக வட மாகாணத்தில் இருந்து படையினர் வாபஸ் பெற வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி வருவதாகக் குறிப்பிட்ட அவர், வடக்கிலுள்ள வனப் பிரதேசங்கள் பாதிக்கப்பட்டு வருவதுடன், வட பகுதியில் தமிழர்களுக்குரிய அடையாளங்கள், தெற்கில் உள்ள கடும் போக்காளர்களாலும் ஏனையோராலும் மறுக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அநுராதபுரம் இராச்சியம் அமைந்துள்ள பகுதியில் 12 ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் அமைந்திருந்த சிவன் ஆலயம் உருக்குலைவின்றி மண்ணுக்கடியில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது தமிழ் பேசும் இந்துக்களின இருப்பிடம் எங்கும் வியாபித்திருந்தது என்பதற்கு சான்றுகளாக விளங்குவதாகவும் வட மாகாண முதலமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.(செ-11)


**வேலைக்கு ஆட்கள் தேவை**

(ஆண், பெண் இருபாலாரும்)

பண்ணை வேலை, தோட்ட வேலை, களஞ்சியக் காப்பாளர், வாகனச் சாரதிகள், தமிழ், ஆங்கில ரைப்பிங் தெரிந்தவர்கள்.

நேர்முகத் தேர்வு : 12.11.2016 (சனிக்கிழமை)
காலை 10.00 - பி.ப 2.00 மணிவரை

தமிழ் உலகம் ஊடகமையம் - 622, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (ஓட்டுமடச்சந்தி அருகாமை)

தொடர்பு : 0770098336

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# கைதான நபர்...

பிரசுரங்கள் விநியோகித்தமை போன்ற செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கடந்த 5,6,7, 8,9 ஆம் திகதிகளில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் இதுவரை 11 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கைது செய்யப்பட்டவர்கள் கொக்குவில், திருநெல்வேலி, சில்லாலை, வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு, சுன்னாகம், மல்லாகம் ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் ஆவர்.

யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட 11 இளைஞர்களுடைய உறவினர்களும் யாழ் மனித உரிமை ஆணைக்குழுவில் தமது முறைப்பாடுகளை பதிவு செய்து அவர்கள் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்படிருப்பதை உறுதிப்படுத்தியிருந்தனர்.

ஆனால் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான 17 வயதுடைய மாணவனை கடந்த 7 ஆம் திகதி காலை கைது செய்திருந்த போதும் இரவு வரை பெற்றோருக்கு அது தொடர்பாக தெரிவிக்கவில்லை எனவும் நேற்றைய தினமும் அவரை நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவில்லை என்றும் 4 ஆம் மாடியில் சென்று குறித்த மாணவனை பெற்றோர் சந்தித்த போது அவர் கடும் துன்புறுத்தலுக்கு உட்பட்டிருப்பதாகவும் பெற்றோர் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

அதே வேளை கடந்த 7 ஆம் திகதி கைது செய்யப்பட்ட கொக்குவில் பகுதியை சேர்ந்த நல்லலிங்கம் சர்மிலன் என்பவரை நேற்று கொழும்பு நீதிமன்றில் ஆஜர்படுத்தியிருந்ததுடன் அவரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

மேற்குறித்த நபருக்கும் உடல் ரீதியான துன்புறுத்தல் இடம்பெற்றிருந்ததால் முகத்தில் காயங்கள் காணப்படுவதாகவும் அவருடைய பெற்றோர் மனித உரிமை ஆணைக்குழுவில் தமது முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளனர். (செ-9)


**அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு

UK - 550*/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)

மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு: 0768226243
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி
● நெல்லியடி ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS (C-6359)

**வேலையாள் தேவை**

Colombo 06ல் இயங்கும் வியாபார ஸ்தாபனத்துக்கு ms.office படித்த ஆண் வேலையாள் தேவை. தங்குமிட வசதி உண்டு (25 வயதுக்குட்பட்ட, சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்) முன்னனுபவம் தேவையில்லை.

தொடர்பு :
078 911 3766

(6575)

**நீங்கள் தொழில் தேடுபவரா?**

முன்னணி நட்சத்திர ஹொட்டேல்களில்
Front Office, Restaurant, Room Service,
Kitchen போன்ற பகுதிகளில் வேலைவாய்ப்புடன்

O/L உடன் Diploma in **Hotel Management**

CERTIFICATE - DIPLOMA - DEGREE

With FREE English Course

Up to 30% Discount

✱ பயிற்சிக் காலத்திலேயே உழைக்கும் வாய்ப்பு
✱ கற்கைநெறி நிறைவில் நிரந்தர வேலைவாய்ப்பு

வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Week & Weekend Batch

அனுமதிகளுக்கு
077 3616 798

www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011

SIKARAM ACADEMY
Business - Hospitality - English
SCHOOL of HOSPITALITY

இல.175, 1ஆம் குறுக்குத்தெரு
(வேம்படி வீதி), யாழ்ப்பாணம்.

சுவாமியே சரணம் ஐயப்பா

**ஈழத்து சபரிமலை**





யாழ்/கோண்டாவில்

**சபரீச ஐயப்பன் தேவஸ்தானம்**

விரத மாலை அணிதல்

**மகரஜோதி மண்டல பூஜை பெருவிழா**

16.11.2016 முதல் 14.01.2017 வரை சிறப்பு பூஜைகள் மஹோற்சவம் நடைபெறும். இவ்விழாவின் போது கனடா நாட்டில் இருந்து ஆன்மீக செம்மல் குருசாமி : க.தம்பிராசா அவர்கள் தேவஸ்தான குருசாமிகளுடன் இணைந்து சாமிமார்களுக்கு மாலை அணிவித்து இவ் நிகழ்வில் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

*அனைவரும் வருக! ஐயன் அருள் பெறுக!!*

(சி-6370)





இங்ஙனம் :
ஈழத்து சபரிமலை தேவஸ்தானம்

விளம்பர அனுசரணை:
யாழ் கேக் கவுஸ்,
அபிராமி அச்சகம்
கனடா

ஆலய தொடர்புகளுக்கு :
021 222 7688,
077 310 8671




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.